
2013, September 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013





இலங்கை அரசின்
திட்டங்களை பாழாக்கிய
நவிபிள்ளை

சர்வதேச சமூகத்தின்
அக்கறைகளை
புதுபித்திருக்கும் ஒரு விஜயம்

தனித்துவ அடையாளம்
புரிந்துக்கொள்ளச்
சிரமமான புதிர்நிலை

இந்தியாவின்
மணிமேகலை

நெருக்கடிக்குள் இந்தியப்
பொருளாதாரம்

இன்றைய சூழலில்
இந்திய-பாகிஸ்தான்
மோதல் தேவையா?

மெட்ராஸ் கபேயின் கதை
ஜெயின் கமிஷன் கரு

# அவர் வருவாரா?

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாசிசம் அதன் பலியாட்களின் எண்ணிக்கையை வைத்து அல்ல, அது பலியாட்களை எவ்வாறு கொலை செய்கிறது என்பதை அடிப்படையாக வைத்தே வரையறுக்கப்படுகிறது.

- ஜீன் போல் சாத்ரே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




சமகாலம்
2013, செப்டெம்பர் 01 - 15
பக்கங்கள் - 68




மெட்ராஸ் கபேயின் கதை
ஜெயின் கமிஷன் கரு

34 இந்திய நாணயத்தின்
பெறுமதி வீழ்ச்சி;
நம்பிக்கை இழக்கும்
முதலீட்டாளர்கள்
- எம்.பி.வித்தியாதரன்




இந்தியாவின் மணிமேகலை
கருணாநிதியின் வர்ணனை
- முத்தையா காசிநாதன்

52 மனித வாழ்வில்
ஒற்றைத்துணை வாழ்வு
- டாக்டர் எம்.கே.முருகானந்தன்




ஆபிரிக்க இலக்கியத்தின்
தந்தை சினுவா ஆச்சிபி
- மதுசூதனன்

சர்வதேச சமூகத்தின்
அக்கறைகளை புதுப்பித்திருக்கும்
நவிபிள்ளையின் விஜயம்
- கலாநிதி ஜெஹான் பெரேரா




தாரிக் அலி
வாழ்வும் சிந்தனையும்




ராஜபக்ஷவின் திட்டங்களை
பாழாக்கிய நவிபிள்ளை
- குசல் பெரேரா

32 ஒரு துருவவாதத்தின்
முடிவு
- சிந்தாமணி மகாபத்ரா

42 மலையக
பல்கலைக்கழகம்
தேவைப்பாடு, சவால்கள்,
சாத்தியப்பாடுகள்
- இரா ரமேஷ்

22 தனித்துவ அடையாளம்
புரிந்து கொள்ளச் சிரமமான
புதிர் நிலை
- குமார் டேவிட்

29 இன்றைய சூழலில்
இந்திய-பாகிஸ்தான் போர்
தேவையா?
- அ.மார்க்ஸ்




அவர் வருவாரா?
- என்.சத்தியமூர்த்தி

60 பேராசிரியர்
ச.தனஞ்சயராசசிங்கத்தின்
இரு நூல்கள்




கடைசிப் பக்கம்
ஏ.பீர் முகம்மது

*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியபீடத்திலிருந்து...

# நவநீதம்பிள்ளையின் செய்தி

இலங்கைக்கு வந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை தனது விஜயத்தின் இறுதியில் உறுதிவாய்ந்த செய்தியை கூறிவிட்டுச் சென்றிருக்கிறார். நாட்டை விட்டுப் புறப் படுவதற்கு முன்னதாக கொழும்பில் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் செய்தியாளர் மகாநாட்டை நடத்திய அவர், தனது ஏழுநாள் விஜயத்தின் போது அரசாங்கம் வழங்கிய 'உன்னதமான ஒத்துழைப்புக்கு' நன்றி தெரிவித்த அதேவேளை, இலங்கையில் தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் அடிப்படையாகக் கொண்டு செய்த மதிப்பீடுகளை பகிரங்கமாகக் கூறுவதில் வார்த்தைகளில் கஞ்சத்தனம் செய்யவில்லை.

கொழும்பு செய்தியாளர் மகாநாட்டின் ஆரம்பத்தில் நவநீதம்பிள்ளை விடுத்த அறிக்கை இம்மாத இறுதியில் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அவர் விடுக்கவிருக்கும் வாய்மூல அறிக்கையிலும் அடுத்தவருடம் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் பேரவையின் கூட்டத்தொடரில் வெளியிடவிருக்கும் இறுதி அறிக்கையிலும் என்ன கூறப்போகின்றார் என்பதற்கு கட்டியம் கூறிநிற்கிறது என்பதிற் சந்தேகமில்லை. ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் என்ற வகையில் நவநீதம்பிள்ளை ஒரு நாட்டுக்கு மேற்கொண்டிருக்கக் கூடிய நீண்ட விஜயமென்றால் அது இலங்கை விஜயமேயாகும். அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் வந்த அவர், இந்த நீண்ட விஜயத்தின் பிறகு வெளியிட்ட கருத்துக்கள் அரசாங்கத் தலைவர்களைச் சினமடைய வைத்திருக்கிறது என்பது வெளிப்படையானது.

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தாங்கள் மேற்கொண்டு வருகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திகளைக் கண்டு நவநீதம்பிள்ளை பிரமிப்படைவார் என்று அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால், அந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மனதில் பதியத்தக்கவையாக இருக்கின்றன என்று நவநீதம்பிள்ளை கூறத்தவறவில்லை. என்றாலும், அவரின் முக்கியமான பணி அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதல்ல என்பதை அரசாங்கத் தலைவர்களும் அவர்களின் நேசசக்திகளும் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். இந்த அபிவிருத்திகள் எல்லாம் முக்கியமானவை தான் என்ற போதிலும், வெறுமனே பௌதீக நிர்மாணங்கள் மாத்திரம் நல்லிணக்கத்தையும் கௌரவத்தையும் நிலை பேறான சமாதானத்தையும் கொண்டுவரப்போவதில்லை என்ற நவநீதம்பிள்ளையின் கூற்று போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கு அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் அணுகுமுறையின் தன்மையைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருக்கிறது.

நவநீதம்பிள்ளையின் வருகைக்கு முன்னதாக, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டிருக்கக் கூடிய செயன்முறைகளின் போதாமையை தெளிவாக அவர் உணர்ந்துகொண்டிருக்கிறார் என்பதை அறிக்கை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது. குறிப்பாக, போரின் போது வடக்கு, கிழக்கு காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆணைக்குழுவின் செயன்முறைகள் அத்தகைய முன்னைய 5 ஆணைக்குழுக்களின் பாணியில் அமைந்துவிடக் கூடாது என்று நவநீதம்பிள்ளை குறிப்பிட்டிருந்தார். ஆணைக்குழுக்கள் தொடர்பில் இலங்கை மக்களுக்கு குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின்ற கசப்பான அனுபவங்களை சர்வதேச சமூகம் முறையாகப் புரிந்துகொண்டிருக்கின்றது என்பதற்கான பிரகாசமான சான்றாக அவரின் இந்தக் கூற்றை நோக்க முடியும்.

போரின் முடிவுக்குப் பின்னரும் இராணுவமயத்தில் அக்கறை காட்டுகின்ற அரசாங்கத்தின் போக்கு, இராணுவத்தினரால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற அத்துமீறல்களையும் உரிமைமீறல்களையும் விசாரணை செய்வதற்கு இராணுவத்தினாலேயே நியமிக்கப்படுகின்ற விசாரணைமன்றங்களின் பிரயோசனமற்ற தன்மை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டிய தன் அவசியம், மதச்சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற பிரசாரங்கள் மற்றும் வன்முறை ஆர்ப்பாட்டங்களின் விளைவாக ஏற்படக் கூடிய பேராபத்துக்களை குறைத்து மதிப்பிடுகின்ற அரசாங்கத்தின் அலட்சிய மனப்பான்மை, மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு நம்பகத் தன்மையான தேசிய செயன்முறையொன்று இல்லாத பட்சத்தில் சர்வதேச விசாரணை வேண்டுமென்ற கோரிக்கைகள் தொடரக்கூடிய நிலைமை, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், போரினால் பாதிக்கப்பட்டு உணர்வதிர்ச்சிக்குள்ளான மக்களுக்கு உளவள ஆலோசனை வழங்க வேண்டியதன் அவசியம் என்பன உட்பட பெருவாரியான விவகாரங்கள் மீது கவனத்தைக் குவித்திருக்கிறது நவநீதம்பிள்ளையின் அறிக்கை.

போரின் முடிவுக்குப் பிறகு சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்பதே ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் மதிப்பீடாக இருக்கிறது.

இறுதியாக, போரின் முடிவு இலங்கையில் சகல சமூகங்களையும் தழுவியதாக - துடிப்பான ஒரு அரசைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கியிருந்த போதிலும், அதைப் பொருட்படுத்தாமல், அரசாங்கம் கூடுதலான அளவுக்கு எதேச்சாதிகாரமான திசையில் சென்று கொண்டிருக்கிறது என்று நவநீதம்பிள்ளை குறிப்பிட்டிருப்பது மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அரசாங்கத்தின் மீதான சர்வதேச சமூகத்தின் நெருக்குதல்கள் தற்போதைக்குத் தணியப் போவதில்லை என்பதே நவநீதம்பிள்ளை வெளிப்படுத்திய கருத்துக்களின் மூலமாக வெளிப்பட்டு நிற்கும் செய்தி. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## ரஜீவ விஜேசிங்கவின் கருத்துக்கள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம்தான் கடந்த இரு வாரங்களாக இலங்கையில் பரபரப்பான செய்தியாக இருந்தது. அவரது விஜயம் எவ்வாறான பெறுபேறைக் கொண்டுவரப் போகின்றது என்பதைத்தான் அனைவரும் ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்கள். இந்த நிலையில் கடந்த சமகாலம் இதழில் வெளியாகியிருந்த நவிபிள்ளையின் விஜயம்: வாய்ப்பா அச்சு றுத்தலா? என்ற கட்டுரை முக்கியமானது. அனைவரையும் கவர்ந்த ஒன்றாக இருந்தது.

பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க இந்தக் கட்டுரையை எழுதி யுள்ளார். நவநீதம்பிள்ளையின் இந்த விஜயத்தை இந்த நாட் டில் மனித உரிமைகள் தொடர்பில் கொள்கைகளையும் நடைமு றைகளையும் மேம்படுத்துவதற்கு அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு சிறந்த சந்தர்ப்பமாக நோக்க முடி யும். இந்தச் சந்தர்ப்பம் பயன்படுத்தப்படும் என்றும் நவநீதம் பிள்ளை ஒரு அச்சுறுத்தலாக நோக்கப்படமாட்டார் எனவும் நான் நம்புகின்றேன் என கட்டுரையின் ஆரம்பத்தில் ரஜீவ விஜ யசிங்க குறிப்பிட்டிருப்பது கட்டுரையின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துவதற்குப் போதுமானது.

பிள்ளையின் வருகையை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந் தாலும், அரசாங்கம் அதில் தவறிவிட்டதா கவே தெரிகின்றது. இலங்கை விஜயத்தின் இறுதியில் பிள்ளை வெளியிட்ட அறிக்கை இதனைத் தெளிவாகக் காட்டுகின்றது. அத்து டன் பிள்ளை விஜயம் செய்திருந்த காலப்ப குதியில் அமைச்சர்கள் மற்றும் அரச ஆதரவு டனான இனவாதக் கட்சிகளின் தலைவர்கள் வெளியிட்டிருந்த கருத்துகள் பிள்ளையின் விஜயம் குறித்த அவர்களுடைய மனநி லையை வெளிப்படுத்தியது.

கட்டுரையாளர் இறுதியாகக் குறிப்பிட்டி ருக்கும் ஒரு விடயம் இவ்விடயத்தில் கவ னிக்கத்தக்கது. அரசாங்கத்தின் செயற்திட் டங்கள் பற்றிக் குறிப்பிடும் கட்டுரையாளர் இது நவிபிள்ளைக்காகவல்ல, எமது சொந்தப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு அவை அவசியம் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரை யில் பிள்ளையைச் சமாளிப்பதற்காக எனப் புறப்பட்டு - அதனைக்கூட செம்மையாகச் செய்ய முடியாத ஒரு நிலையில் இருப்ப தைத்தான் அவதானிக்க முடிகின்றது.

அ.கலிஸ்டா, கல்முனை.

## விக்னேஸ்வரன் முன்னால் உள்ள சவால்கள்

வடமாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாக வெற்றிபெறும். ஆனால், அதன் பின்னர் அது சமாளிக்க வேண்டியிருக்கும் சவால்கள் தான் கடினமானவை என குமார் டேவிட் கடந்த சமகாலம் இதழில் எழுதியுள்ள கட்டு ரையில் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் குறிப் பிட்டிருக்கும் விடயங்கள் மிகவும் சரியா னவை என்பதுடன், கவனிக்கப்பட வேண்டிவையுமாகும்.

முக்கியமாக ஐந்து சவால்களை முதல மைச்சராகப் போகும் விக்னேஸ்வரன் எதிர்

## நூல் விமர்சனம்

நூல் விமர்சனங்கள் சமகாலத்தில் அடிக்கடி வரவேண்டுமென்று எதிர் பார்க்கும் பலருக்கு அநேகமாக ஏமாற்றமே கிடைக்கிறது. ஆசிரியர் குழு கவனத்திலேடுக்குமா?

கே.குருபரன், கிண்ணியா.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டியிருக்கும் என கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். இந்த ஐந்தும் முக்கியமானவை. ஆனால், இதனைவிட வேறு சவால்களும் இருப்பதாக அவர் கூறுகின்றார். இவை தொடர்பில் கட்டுரையாளர் தெரிவித்திருக்கும் தகவல்கள் ஆரோக்கியமான ஒரு விவாதத்துக்கு வழிவகுப்பதாக அமைந்திருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறுவது என்பது முதலாவது கட்டம் மட்டும்தான். இந்த மாகாண சபைத் திட்டத்தையே ஏற்கத் தேவையில்லை எனவும், இதன்மூலம் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லை என்றும் சொல்பவர்கள் மத்தியில் இதன்மூலம் எதனையாவது சாதித்துக்காட்ட வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைக்கு உள்ளது. முக்கியமாக விக்னேஸ்வரன் தன்னுடைய சட்டத்துறை ஆற்றலை இதற்குப் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

இவை அனைத்தும் அவருக்கு ஒரு சவாலாக இருக்கும் என்பது உண்மை. இதனை அவர் எவ்வாறு சமாளிக்கப்போகிறார் என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால், விக்னேஸ்வரன் சொல்வது போல இதுதான் மூன்றாம் கட்டப் போராகவும் இருக்கலாம். அதாவது, சர்வதேச ஆதரவுடனான ஒரு இராஜதந்திரப் போர்!

எம்.இராதாகிருஷ்ணன், நல்லூர், யாழ்ப்பாணம்.

## தலைவாவும் தலையிடியும்

தரமான அரசியல் கட்டுரைகளை மட்டுமன்றி சினிமா தொடர்பான தரமான கட்டுரைகளையும் சமகாலம் மாதம் இருமுறை இதழ் தாங்கி வெளிவருகின்றது என்பதற்கு கடந்த சமகாலம் இதழில் வெளிவந்திருக்கும் தலைவாவுக்கு தலையிடி வந்த காரணம் என்ற கட்டுரை சான்றாகவுள்ளது.

விஜயின் நடிப்பில் வெளிவந்திருக்கும் தலைவா படம் எதிர்கொண்ட பிரச்சினைகள், அதன் அரசியல் பின்னணி என்பவற்றை கட்டுரையாளர் காசிநாதன் அழகாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.

விஜயின் படங்கள் பொதுவாகவே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதுண்டு. அதேபோலத்தான் இந்தப் படமும் வெளிவருவதற்குத் தயாராக இருந்த நிலையில் கிடைத்த அச்சுறுத்தலையடுத்து குறிப்பிட்ட திகதியில் படம் வெளிவர முடியாத ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதன் பின்னணியில் இருந்த பிரச்சினை என்ன? இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டது எவ்வாறு என்பவற்றை கட்டுரையாளர் தெளிவாக எழுதியுள்ளார். இன்று சினிமா அரசியல் மயப்பட்டுப்போயிருப்பதை இந்தக் கட்டுரையை வாசிக்கும் போது புரிந்துகொள்ள முடிந்தது. இதுபோன்ற கட்டுரைகள் சமகாலத்தில் தொடர்ந்தும் வெளிவர வேண்டும்.

எம்.தர்சினி, ஸ்ரேஷன் வீதி, வெள்ளவத்தை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 05
2013, செப்டெம்பர் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



எமது இலட்சியங்களை, இலக்குகளை, கோட்பாடுகளை நாம் மறக்கின்ற போது மாத்திரமே தோல்வி வந்து சேருகிறது.
- பண்டித் ஜவஹர்லால் நேரு

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரக்குமூலம்....

வெலிவேரியாவில் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்துக்கு அண்மையாகத்தான் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். அவரின் குடும்பத்துக்கு நஷ்ட ஈடாக 50 இலட்சம் ரூபா அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. வெலிவேரியாவில் பலியானவர்களின் குடும்பங்களுக்கும் அதேயளவு தொகையை நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்று கோருவதற்கு எமக்கு உரிமை இருக்கிறது.



எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

2009 போர் வெற்றிக்குப் பொறுப்பான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் ஏனைய அதிகாரிகளையும் தூக்குமேடைக்குக் கொண்டு செல்லக்கூடிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவிபிள்ளையின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.



குணதாச அமரசேகர

இலங்கையைச் சுற்றிப்பார்க்க என்னுடன் வருமாறு நவநீதம்பிள்ளைக்கு அழைப்பு விடுக்கின்றேன். அவருக்கு இலங்கையின் சரித்திரத்தைப் படிப்பிப்பேன். மகா இராவணனைப் பற்றி அவருக்குக் கூறுவேன். இளவரசர் விஜயனுக்கு குவேனியை மணமகளாகக் கொடுத்தவர்கள் நாங்கள். நவநீதம்பிள்ளை இணங்குவாரேயானால் நாளைக்கென்றாலும் அவரைத் திருமணம் செய்துகொள்ள நான் தயார்.



பொதுமக்கள் தொடர்பு
அமைச்சர் மேர்வின் சில்வா

பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குழுவே வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான சிறப்பான வாய்ப்பைக் கொண்டிருக்கிறதென்று புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றதற்கு மத்தியிலும் அரசாங்கம் அத்தேர்தலை நடத்தத் தீர்மானித்தது. வெறுமனே வெற்றிபெற வேண்டுமென்பதற்காக அரசாங்கம் தேர்தல்களை நடத்துவதில்லை `என்பதை இது வெளிக்காட்டுகிறது.



இலங்கைப் பிரஜைகளைவிடவும் நாய்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது போலத் தெரிகிறது. தங்களது கடமைகளை உகந்த முறையில் செய்வதைவிடுத்து, நாய்களுக்கு கல்யாணம் செய்துவைக்கும் வேலைகளில் பொலிஸார் ஈடுபட்டிருக்கிறார்கள்.



ஐக்கிய தேசியக்கட்சி
பேச்சாளர் கயந்த கருணாதிலக

நவநீதம்பிள்ளையைச் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் தருமாறு கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் ஊடாக கேட்டிருந்தேன். 2010 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட எதிரணியின் பொது வேட்பாளர் என்ற அடிப்படையிலேயே இந்த வேண்டுகோளை நான் விடுத்தேன். ஆனால் எனக்கு அவரைச் சந்திக்க வாய்ப்புத் தரப்படவில்லை. நான்காவது ஈழப்போரின் போது இடம் பெற்றிருக்கக் கூடியவற்றுக்கு பொறுப்புடைமை பற்றி விசாரிக்க வேண்டுமென்பதில் நவநீதம்பிள்ளைக்கு உண்மையான அக்கறை இருந்தால், அந்தப் போரில் இராணுவத்துக்குத் தலைமை தாங்கிய என்னுடன் அவர் பேசியிருக்க வேண்டும். தனக்கு விருப்பமானவர்கள் கூறுவதைத்தான் அவர் கேட்பார் போலும்.



ஜனநாயகக் கட்சித் தலைவர் சரத்பொன்சேகா

சிங்களவர்கள் போவதற்கு வேறு நாடு கிடையாது. அவர்கள் இலங்கையில் ஆயிரக்கணக்கான வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஏனைய சமூகங்களுடன் அவர்கள் சகவாழ்வு வாழ்ந்திருக்கிறார்கள், சிங்களவர்களுடைய மனித உரிமைகளைப் பற்றி வாழ்வதற்கான அவர்களின் அடிப்படை உரிமைபற்றிக்கூட பேசுவதற்கு ஐக்கியநாடுகள் சபையோ, சர்வதேச அமைப்புகளோ கிடையாது.



ஜனசெத பெரமுனை தலைவர்
பத்தரமுல்ல சீலரத்ன தேரர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவிபிள்ளை மனித உரிமைகள் பேரவைக்கு உண்மையானதும் சரியான விபரங்கள் கொண்டதுமான ஒரு அறிக்கையைச் சமர்ப்பிப்பாரேயானால், புலம்பெயர்ந்த தமிழர்களினாலும் குறிப்பிட்ட சில சர்வதேச அமைப்புகளினாலும் சர்வதேச சமூகத்தினாலும் முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கையை அது விடுவிக்கும்.

தகவல், ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# ஒரு நோபல் சமாதானப் பரிசாளர் போருக்குப் போகிறார்!

சிரியாவுக்கு எதிராக இராணுவத் தாக்குதலை நடத்துவதற்கு அமெரிக்க காங்கிரஸின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி பராக் ஒபாமா முதலாவது தடையைத் தாண்டியிருக்கிறார்.

சிரியாவில் படைபலத்தைப் பிரயோகிப்பதற்கு அதிகாரமளிக்கும் தீர்மானமொன்றை அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு குழு செப்டெம்பர் 4ஆம் திகதி நிறைவேற்றியிருக்கிறது. தீர்மானம் மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக அளிக்கப்பட்ட வாக்குகளுக்கும் (10) எதிராக அளிக்கப்பட்ட வாக்குகளுக்கும் (7) இடையேயான சொற்ப வித்தியாசம் சிரியாவில் இராணுவ நடவடிக்கையில் இறங்குவது தொடர்பில் அமெரிக்கர்கள் மத்தியில் இருக்கக் கூடிய ஐயுறவை வெளிக்காட்டுவதாக இருக்கிறது. சிரியாவில் 60 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுமதிப்பதாகவே செனட் வெளியுறவுக் குழுவின் தீர்மானம் அமைந்திருக்கிறது.



தற்போதைய உள்நாட்டுப் போரில் சிரிய ஜனாதிபதி பஷார் அல்- அசாத்தின் படைகள் அவற்றின் எதிராளிகளுக்கும் மோதலில் சம்பந்தப்படாத குடிமக்களுக்கும் எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதற்கான தீர்க்கமான சான்றுகள் தங்களிடம் இருப்பதாக ஒபாமா நிருவாகம் கூறுகிறது. ஆகஸ்ட் 21 ஆம் திகதி சிரியத் தலைநகர் டமாஸ்கஸுக்கு அண்மையாக மேற்கொள்ளப்பட்ட சாரின் வாயுத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் பலியானார்கள்.

தங்களிடம் இருப்பதாக ஒபாமா நிருவாகத்தினர் கூறுகின்ற புலனாய்வுச் சான்றுகளை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையுடன் பகிர்ந்து கொள்வதற்கு அவர்கள் மறுக்கிறார்கள். வாயுத் தாக்குதல் குறித்து அமெரிக்கா கூறுவதை உலக நாடுகள் முற்று முழுதாக நம்புவதற்குத் தயாராயில்லை. இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதற்காக சிரிய ஆட்சியாளர்களைத் தண்டிக்க வேண்டுமென்று ஒபாமா கூறுகிறார்.

உலக அபிப்பிராயத்தைத் துச்சமென மதித்து ஜோர்ஜ் டபிள் யூ.புஷ் 2003 ஆம் ஆண்டில் ஈராக் மீது படையெடுத்ததைப் போன்று சிரிய விவகாரத்தில் செய்வதற்கு ஒபாமா தயங்குகிறார். அமெரிக்காவுக்கு உதவியாக சிரியா மீது தாக்குதல் நடத்துவதற்கு பிரிட்டனில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது.

சிரியா மீதான தாக்குதலுக்கு ஆதரவு கோரி பிரிட்டிஷ் பிரதமர் பாராளுமன்றத்தில் முன்மொழிந்த தீர்மானம் அண்மையில் தோற்கடிக்கப்பட்டது. அதையடுத்து ஒபாமாவும் அமெரிக்க காங்கிரஸின் ஆதரவைப் பெறும் வரை சிரியா மீதான தாக்குதல் திட்டத்தைப் பின்போட்டிருக்கிறார். காங்கிரஸின் ஆதரவைப் பெறும் முயற்சிகளின் முதற் கட்டமாக செனட் வெளியுறவுக் குழுவின் ஆதரவை இப்போது அவர் பெற்றிருக்கிறார்.

அமெரிக்காவின் ஐரோப்பிய நேச நாடுகள் பலவும் சிரியா மீதான தாக்குதல் திட்டத்துக்கு ஒத்துழைக்கத் தயங்குகின்றன. பிரான்ஸ் மாத்திரமே ஆதரவளிக்க வெளிப்படையாக முன்வந்திருக்கிறது.

சதாம் ஹுசெய்ன் பேரழிவு ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கிறார் என்று கூறிக்கொண்டுதான் பத்து வருடங்களுக்கு முன்னர் புஷ் தனது படைகளை அனுப்பி ஈராக்கை ஆக்கிரமித்தார். ஆனால், பல வருடங்கள் கடந்தும் கூட பேரழிவு ஆயுதங்களில் ஒன்று கூடக் கண்டு பிடிக்கப்படவில்லை. புஷ்ஷும் அன்றைய பிரிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தி ஆய்வு




டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் முழு உலகிற்குமே பொய் கூறியவர்களாக அம்பலப்பட்டு நின்றதுதான் மிச்சம்.

இன்று சிரியாவில் அசாத் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியிருப்பதாகக் கூறிக் கொண்டு அந்த நாட்டின் மீது தாக்குதலை நடத்த ஒபாமா திட்டமிடுகிறார். சதாம் ஹுசெய்ன் விவகாரத்தில் புஷ் கூறிய பொய் இன்று ஒபாமாவின் முன்னால் நின்று அவரை வெருட்டிக் கொண்டிருக்கிறது. அதனாலேயே நினைத்தவுடன் தாக்குதலை சிரியா மீது நடத்துவதற்குத் தைரியம் அவருக்கு வரவில்லை. அத்துடன் நேசநாடுகளும் ஈராக் விடயத்தில் நடந்துகொண்டதைப் போன்று சிரியா விவகாரத்தில் கண்ணை மூடிக் கொண்டு அமெரிக்காவின் திட்டத்துக்கு ஆதரவாகச் செயற்படத் தயாராயில்லை.

ஈராக் மீது படையெடுத்த புஷ்ஷின் செயலை மகா தவறு என்று கூறிக் கொண்டுதான் ஒபாமா வெள்ளைமாளிகைக்குள் பிரவேசித்தார். தனது முதலாவது பதவிக் காலத்தில் ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை விலக்கிக் கொண்ட ஒபாமா, இப்போது தனது இரண்டாவது பதவிக்காலத்தில் சிரியா மீது தாக்குதல் தொடுக்கக் கங்கணம் கட்டி நிற்கிறார்.

உலகவிவகாரங்களில் ஒருதலைப் பட்சமான அணுகுமுறையைக் கடைப்பிடித்து கர்வத்தனமாக நடந்துகொண்ட புஷ்ஷின் போக்கிலிருந்து வேறுபட்டுச் செயற்படுவதில் ஒபாமா அக்கறை காட்டினார் என்பதற்காகத்தான் அவருக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது. ஆனால், இப்போது அவரும் உலகின் அபிப்பிராயத்தை மதிக்காமல் செயற்பட தயாராகிறார். ஒரு நோபல் சமாதானப் பரிசாளர் போருக்குப் போகிறார்...! ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



கலாநிதி
ஜெஹான் பெரேரா



# சர்வதேச சமூகத்தின் அக்கறைகளை புதுப்பித்திருக்கும் நவி பிள்ளையின் விஜயம்

காணாமல் போனவர்களது கதியும் எஞ்சியிருப்பவர்களினது கவலையும் நாட்டின் வடக்கு, கிழக்குப்பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்கு நன்கு தெரிந்தவர். அவர்கள் காணாமல் போன தங்களது அன்புக்குரியவர்களைக் காண்பதற்கு ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். காணாமல் போன தங்களது குடும்ப உறுப்பினர்களைக் கண்டு பிடிப்பதற்கு சிலர் நீதிமன்றங்களை நாடியிருக்கிறார்கள். ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்திருக்கிறது. காணாமல் போனவர்களுக்கு நடந்தது என்ன என்பது தொடர்பில் உண்மையைக் கண்டறியாமல் காய ங்களை குணப்படுத்த முடியாதென்பதை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதனால், விசேட பொறிமுறையொன்று ஏற்படுத்த வேண்டுமென அது விதந்துரைத்திருக்கிறது.

மனித உரிமைகள் தொடர்பில் அரசாங்கத்தின் மீது கூடுதலான அளவிற்கு சர்வதேச நெருக்குதல்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று விரும்பியவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம் பிள்ளையின் இலங்கை விஜயத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்த விஜயம் பெருமளவிற்கு தாமதப்படுத்தப்பட்டிருந்தது. மிகவும் முன்கூட்டியே இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று நினைத்ததாக அவரே கூறியிருக்கிறார். அவரை வரவேற்கலாம் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு ஏற்படும் வரை அவரது விஜயத்தைப் பிற்போடுவதற்கான புரிந்துணர்வொன்று இருந்திருக்கிறது என்று தோன்றுகின்றது. வழமை நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று நவநீதம்பிள்ளை நேரில் காண்பதற்கு போதுமானளவு சாதகமான சான்றுகள் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்பியிருக்கக் கூடும்.

> இலங்கை எதிர்நோக்குகின்ற சவால்களின் சிக்கல் தன்மையை கச்சிதமாக விளங்கிக்கொண்டதாக அமைந்திருந்தது தனது விஜயத்தின் இறுதியில் கொழும்பு செய்தியாளர் மாநாட்டில் நவிபிள்ளை வெளியிட்ட அறிக்கை

அவர் வருவதற்கு முன்னதாக சர்வதேச விமர்சனங்களுக்கு உள்ளான விவகாரம் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட சில நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருந்தது. இதில் போர்க்கால கட்டத்தில் வடக்கு, கிழக்கு காணாமல் போன குடிமக்களைப் பற்றி விசாரித்தறிவதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொன்றும் அடங்கும்.

தனது விஜயத்தின் முடிவில் நவிபிள்ளை நாட்டின் வடக்கு, கிழக்கில் தன்னால் அவதானிக்கக்கூடிய தாக இருந்த உட்கட்டமைப்பு அபிவிருத்திகளைப்பற்றி சாதகமான முறையில் கருத்துகளை வெளியிட்டார். மனதில் ஆழப்பதியத்தக்கதாக வீதிகள் அபிவிருத்தி, அரசாங்கக் கட்டிட நிர்மாணம் மற்றும் சந்தைக் கட்டிடங்கள் அமைந்திருக்கின்றன. வடக்கிற்கு குறுகியகால விஜயமொன்றை மேற்கொள்பவரால் கூட இதைக் காணக்கூடியதாக இருக்கும். தன்னால் காணக்கூடியதாக இருந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மனதில் பதிந்ததாக அவர் வெளிப்படையாகவே கூறினார். தனது சொந்த ஆபிரிக்கா உட்பட உலகின் பல பகுதிகளுடன் ஒப்பிடும் போது இலங்கைப் போரின் முடிவின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய அபிவிருத்திகள் மிகவும் பாராட்டத்தக்கவை என்று அவர் கூறினார். இலங்கையைப் போன்ற ஆபிரிக்காவின் பிற



நாடுகள் போர்க்கால கட்டங்களைக் கடந்து வந்தவையேயாகும். இலங்கையை விட்டுப் புறப்படுவதற்கு முன்பதாக கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் நவிபிள்ளை வெளியிட்ட சமநிலையானதும் நன்கு ஆராய்ந்து தயாரிக்கப்பட்டதுமான அறிக்கை இலங்கை எதிர்நோக்குகின்ற சவால்களின் சிக்கல் தன்மையை கச்சிதமாக விளங்கிக்கொண்டதாக அமைந்திருந்தது.

பொதுவில் ஐக்கிய நாடுகள் தீர்மானங்களையும் குறிப்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் எந்தளவு தூரத்திற்கு செயற்பட்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதே நவிபிள்ளையின் இலங்கை விஜயத்தின் நோக்கம். நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளின் பிரகாரம் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்ததற்கு மேலதிகமாக திருகோணமலை கடற்கரையில் 5 மாணவர்களை சுட்டுக்கொலை செய்த சம்பவம் குறித்த விசாரணைகளையும் அரசாங்கம் ஆரம்பித்தது. அத்துடன், பொலிசை மேற்பார்வை செய்ய புதிய சட்டம், ஒழுங்கு அமைச்சொன்றையும் அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. வடக்கின் ஆட்சிமுறையில் இராணுவத்தின் பாத்திரத்தின் சின்னமாக விளங்கும் ஓமந்தை சோதனை நிலையத்தை அகற்றப் போவதாகவும் அரசாங்கம் நவிபிள்ளையின் விஜயத்தின் முடிவில் அறிவித்தது. அரசாங்கத்தைப் பற்றி நல்லதொரு எண்ணம் நவிபிள்ளையின் மனதில் ஏற்பட வேண்டுமென்பதற்காக அரசாங்கம் கடுமையாகப் பாடுபட்டது என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையில் நவிபிள்ளை தங்கியிருந்த பெரும்பாலான காலப்பகுதியில் அரசாங்கம் அவருக்கு நாட்டின் வெளிப்புற அமைதியையும் பொருளாதார அபிவிருத்தியையும் காண்பிக்கக் கூடியதாக இருந்தது. தொலைதூர கிராமம் ஒன்றிலிருந்து அலரிமாளிகைக்கு வந்திருந்த பாடசாலை சிறுவர்கள் முன்னிலையிலேயே நவிபிள்ளையை ஜனாதிபதி சந்தித்தார். அதனால் அலரிமாளிகைக்கான அவரின் வருகை சந்தோசமான ஒரு சூழ்நிலையில் அமைந்தது. ஆனால், மனித உரிமைகள் குழுக்கள் மேற்கொண்ட ஏற்பாடுகளின் விளைவாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்கள் தொடர்ந்து அனுபவிக்கின்ற உணர்வதிர்ச்சிக் கோளாறுகளையும் அவரால் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

நவிபிள்ளையின் விஜயத்தின் விளைவாக கடந்தகால விவகாரங்கள் முன்னணிக்கு கொண்டிருப்பது என்பது நீதி உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு திருப்தியைக் கொடுத்திருக்கிறது. பொதுவில் மனித உரிமைகளுக்காகவும் குறிப்பாக காணாமல் போனவர்கள் தொடர்பாகவும் குரல் கொடுக்கிறவர்கள் தங்களது இலட்சியங்களை உலகிற்கு வெளிப்படுத்துவதற்கு இது ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. போரின் மரபு எந்தளவு தூரத்திற்கு வெற்றிகொள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை வெளிக் காட்டுவதற்கு இது அரசாங்கத்திற்கும் ஒரு வாய்ப்பைக் கொடுத்தது.

காணாமல் போன குடும்பங்களினால் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்த கூட்டம் நவிபிள்ளை கலந்துகொண்ட மனதை உருக்கும் நிகழ்வுகளில் ஒன்று. 500பேரையே உள்ளடக்கக் கூடிய இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடம் நவிபிள்ளையிடம் தங்களது அன்புக்குரியவர்களுக்கு நேர்ந்த கதி குறித்து எடுத்தியம்ப வடக்கு, கிழக்குகளில் இருந்து வந்தவர்களினால் நிரம்பி வழிந்தது. பதவியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த அரசாங்கங்களின் நடவடிக் கைகளினால் தெற்கில் தங்களது அன் புக்குரியவைகளை இழந்த பலரும் கூட இந்தக் கூட்டத்திற்கு வந்திருந் தார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலு க்கு ஒரு சில நாட்கள் கழித்து காணா மல்போன பிரபல பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலி கொடவின் மனைவி யான சந்தியா எக்னெலி கொடவும் இவர்களில் ஒருவர். தங்களது மாளாத சோகத்திற்கு விடைதேட நவிபிள்ளையிடம் மன்றாட வந்த வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மனைவி மாருடனும், தாய்மாருடனும் திருமதி எக்னெலி கொடவும் இணைந்து கொண்டார்.

காணாமல் போனோரின் உறவினர் கள் தங்களது கதைகளைக் கூறும் போது கடும் துயரினால் கண்ணீர் விட்டு அழுதார்கள். அவர்கள் சொன் னதைக் கேட்டுக்கொண்டு இருந்தவர் களும் கூட கண்கலங்கினர். தங்களது அன்புக்குரியவர்களை நினைத்த போதும் சிலர் வாய்விட்டுக் கதறி யழவும் செய்தார்கள். 1988 ஜனதா விமுக்தி பெரமுனை கிளர்ச்சியின் போது காணாமல்போன இளைஞர்க ளில் ஒருவரின் தாயார் தனது கதை யைக் கூறுகையில், அன்றைய அர சாங்கம் தனக்கு ஒரு மரண அத் தாட்சிப்பத்திரத்தையும் 25 ஆயிரம் ரூபா பணத்தையும் தந்ததாகக் குறிப் பிட்டார். அரசாங்கத்தைப் பொறுத்த வரை தனது மகனின் பெறுமதி இது தானா என்று அந்தத் தாயார் கேள்வி எழுப்பினார். தங்களது அவலங் களை எடுத்தியம்புகிறவர்கள் எல் லோரையும் நவிபிள்ளை மிகவும் அவதானமாக செவிமடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

காணாமல் போனோர்களின் உறவி னர்களுக்கு இருக்கின்ற வேத னையை தான் புரிந்துகொள்வதாக நவிபிள்ளை கூறினார். அதைப் போன்ற வேதனை வேறெதுவும் இல்லை என்று கூறவும் அவர் தவற வில்லை. காணாமல் போனவர்கள் இறந்துவிட்டார்கள் என்று ஏற்றுக் கொள்வதற்கு அவர்களது உறவினர் கள் விரும்பப் போவதில்லை. காணா மல் போனவர்கள் இன்னமும் உயிர்வாழ்வதாக உறவினர்கள் சிலர் அந்தக் கூட்டத்தில் கூறியதையும் காண முடிந்தது. சிலர் காணாமல் போய் பல வருடங்கள் கடந்து விட்ட போதிலும் கூட அவர்கள் உயிருடன் இருக்கக் கூடும் என்று உறவினர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். தங்க ளது பிள்ளைகளை ஒரு மணித்தியா லம் பார்ப்பதற்கேனும் அரசாங்கம் அனுமதிப்பதை உறுதிசெய்யுமாறு நவிபிள்ளையிடம் அவர்கள் கெஞ்சி மன்றாடினார்கள். இது அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றிய கசப் பான யதார்த்தத்திற்கு அவர்கள் முகங்கொடுக்கக் கூடியதாக உளவள ஆலோசனை வழங்க வேண்டிய தேவையை உணர்த்தி நிற்கின்றது.

**நவிபிள்ளை தனது விஜயத்தின் விளைவாக இந்த நாட்டில் பெரிதும் வெளியில் தெரியாமல் இருக்கும் யதார்த்தங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இந்த யாதார்த்தங்கள் நாட்டு பிரஜைகளில் பெரும் பான்மையானோரின் கவனத்தில் இருந்து கூட தப்பி விடுகின்றன**

போர் முடிவடைந்த பிறகும் கூட பீதி தொடர்வதை தனது பேச்சின் போது நவிபிள்ளை குறிப்பிட்டார். வெள்ளை வானில் ஆட்கள் கடத்திச் செல்லப்பட்டதைப் பற்றி அவர் கூறி னார். பலவந்தமாக கடத்திச் செல் லப்பட்டு ஆட்கள் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களுக்கு மன்னிப்ப ளிக்கப்படக் கூடாது என்றும் அவர் எச்சரித்தார். எவ்வாறெனினும் ஆட் கள் காணாமல் போனதற்கு அர சாங்கம் மாத்திரம் காரணம் அல்ல. விடுதலைப்புலிகளினாலும் ஏனைய தீவிரவாதக் குழுக்களினாலும் கடத் திச் செல்லப்பட்டவர்கள் குறித்தும் நவிபிள்ளை குறிப்பிட்டார். விடுத லைப் புலிகளினால் கடத்திச் செல்லப் பட்டு காணாமல் போனதாகக் கூறப் படுபவர்களின் பெற்றோர்கள் குழு வொன்று இலங்கை மன்றக் கல்லூ ரிக்கு வெளியே குழுமி நின்றது. மண்டபத்தின் உள்ளே வருவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. மண்டபத்திற்குள் நுழைவதற்கு அவர்கள் முயற்சித்தபோது பொலி ஸார் தடுத்து நிறுத்தினர். நவி பிள்ளையுடனான பேச்சுகளில் கலந் துகொள்ள அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்பதே பொலிஸார் கூறிய காரணம்.

நவிபிள்ளை தனது விஜயத்தின் விளைவாக இந்த நாட்டில் பெரிதும் வெளியில் தெரியாமல் இருக்கும் யதார்த்தங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இந்த யதார்த்தங்கள் நாட் டில் வாழுகின்ற பிரஜைகளில் பெரும் பான்மையாளர்களின் கவனத்தில் இருந்து கூட தப்பிவிடுகின்றன. காணாமல் போனவர்களின் குடும் பத்தை அவர் சந்தித்தார். 'புனர்நிர் மாணமும் அபிவிருத்தியும் மனதில் பதியத் தக்கவையாக இருக்கின்றன. ஆனால், உணர்வதிர்ச்சிக்குள்ளான மக்களுக்கு உளவள ஆலோசனை வழங்குவது உட்பட மனித உரிமை கள் அக்கறைகள் பற்றி முழுமை யான கவனத்தை எடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்தளவு பெருந்தொகையான மக் கள் அழுது புலம்புவதை நேரில் காணும் அனுபவத்தை நான் ஒரு போதும் பெற்றதில்லை. கட்டுப்படு த்த முடியாத இந்தக் கவலைகளை ஒத்த சூழ்நிலைகளை நான் ஒரு போதும் காணவில்லை' என்று நவி பிள்ளை ஊடகவியலாளர்கள் மத்தி யில் கூறினார். ருவென்டாவில் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வ தேச விசாரணைக்கு தலைமை தாங் கிய ஒரு நீதிபதியிடம் வந்த வார்த் தைகள் இவை. போர் முடிவிற்கு வந் தபோதிலும் கூட மக்கள் மனதில்

(21ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவின் திட்டங்களைப் பாழாக்கிய நவிபிள்ளை



குசல் பெரேரா

அரசாங்கத்தின் மீது பல விவகாரங்களில் தெளிவான குற்றச் சாட்டுகளை சுமத்துவதாக அமைந்த நவிபிள்ளையின் கொழும்பு அறிக்கை



'உள்நாட்டுப் போருக்கு காணப்பட்ட முடிவு சகல சமூகங்களையும் அரவணைத்து புதிய துடிப்பான அரசொன்றைக் கட்டியெழுப்புவதற்கு வாய்ப்பை வழங்கிய போதிலும் கூட அதைப் பயன்படுத்த முன்வராமல் இலங்கை கூடுதலான அளவிற்கு எதேதச்சாதிகாரத் திசையில் சென்றுகொண்டிருப்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இது எனக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது'. இலங்கைக்கு ஒருவார கால விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை நாட்டை விட்டு புறப்படுவதற்கு முன்னதாக கொழும்பில் உள்ள ஐ.நா.அலுவலகத்தில் ஆகஸ்ட் 31 ஆம் திகதி நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறியிருந்தார்.

அரசாங்கம் தற்பெருமை பேசுகின்ற அபிவிருத்தியைக் கண்டுகளிப்பதற்கு நவிபிள்ளை இலங்கைக்கு வரவில்லை. அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பார்ப்பதற்கு அவர் விரும்புகிறார் என்பதற்காகத்தான் இலங்கைக்கு வருவதற்கு அவர் விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசாங்கம் சுமார் 3 வருடங்களாக மறுத்து வந்ததென்றுமில்லை. ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை நேரடியாகக் கண்டு கொள்ள நவிபிள்ளை விரும்பியதாலேயே அவரது இலங்கை விஜயத்திற்கான வேண்டுகோளுக்கு அரசாங்கம் முதலில் இணங்க மறுத்தது. இராஜதந்திர அரங்கில் இழைத்த மிக மோசமான தவறுகளை இல்லாமல் செய்வதற்கு - அதிலும் குறிப்பாக நவம்பரில் நடைபெற இருக்கும் பொதுநலவரசு உச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டு அரசியல்

மகாநாட்டுக்கு முன்னதாக - வாய்ப்பொன்றை வழங்கும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ நினைத்த காரணத்தினாலேயே இத்தடவை நவிபிள்ளையின் விஜயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் காரணத்தினால் இலங்கை முன்னென்றும் கண்டிராத ஒரு



உணர்ச்சிபூர்வமான விஜயமாக நவிபிள்ளையின் வருகை அமைந்திருந்தது. எனவே, மற்ற விடயங்களுக்கு முன்னதாக அவரது விஜயம் குறித்து சில கருத்துகளைச் சொல்வது பொருத்தமாக இருக்கும். தனக்கெதிராக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அவமதிப்பான கருத்துகள், ஏளனங்கள் குறித்தெல்லாம் அவர் குறிப்பிட்டிருந்தார். 'என்மீதான வசைபாடல்கள் கடந்த வாரம் அதிவிஷேடமான உச்ச நிலையை அடைந்திருந்தன. அதில் குறைந்தபட்சம் 3 அமைச்சர்கள் இணைந்துகொண்டார்கள்' என்று நவிபிள்ளை செய்தியாளர் மகாநாட்டில் கூறினார் என்பது கவனிக்கத்தக்கது.

அந்த வசைபாடல்களில் மிகவும் கேவலமானது பொதுமக்கள் தொடர்புகள் அமைச்சர் மேவின் சில்வாவிடம் இருந்து வந்தது. அவரது முட்டாள் தனமான பேச்சுக்கு பிரதான சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் பெரும் முக்கியத்துவத்தைக் காணக்கூடியதாக இருந்தது. இத்தகைய பொறுப்பற்ற ஊடகத்துறை செயற்பாட்டிற்காக அவை பொறுப்பை ஏற்றேயாக வேண்டும். எந்தவொரு நாகரிகமான சமுதாயத்திலுமே அரச விருந்தாளியொருவரை அமைச்சர் ஒருவர் அவமதித்திருந்தால் பொறுப்புள்ள ஊடகங்கள் அரசாங்கம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று ஆசிரிய தலையங்கங்களைத் தீட்டியிருக்கும் மேவின் சில்வாவினால் தெரிவிக்கப்பட்ட அவமதிப்பான கருத்தை பொறுப்பு வாய்ந்த ஊடகங்கள் தயவு தாட்சண்யம் இன்றி கண்டித்திருக்கும். பகிரங்கமாக மன்னிப்பைக் கேட்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கும். ஆனால், இலங்கையில் சிங்கள - ஆங்கில ஊடகங்கள் அத்தகைய பொறுப்பு வாய்ந்தவையாகவோ துறைசார் நெறிமுறையுடனோ நடந்துகொள்ளவில்லை. அவை மேவின் சில்வா தெரிவித்த அருவருப்பான கருத்துகளை பரபரப்பாக பெரிதுபடுத்தி வெளியிட்டதையே எம்மால் காணக்கூடியதாக இருந்தது. பொறுப்புணர்வுடைய எவருமே எனது கருத்தை மறுதலிக்க மாட்டார்கள்.

பெறவிருக்கும் பேரவையின் கூட்டத்தொடரில் சுமார் 20 பக்கங்களுக்கு நீளக்கூடிய விரிவான எழுத்து மூல அறிக்கையொன்றை அவர் வெளியிடவிருக்கிறார். அவ்வாறு அவர் வெளியிடவிருக்கும் அறிக்கையில் (போருக்குப் பின்னரான இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் நல்லாட்சி தொடர்பில்) அவர் எதை எதையெல்லாம் சொல்லவிருக்கிறார் என்பதற்கு கட்டியம் கூறுவதாக கொழும்பு ஊடகவியலாளர் மகாநாட்டில் அவர் தெரிவித்த கருத்துகள் அமைகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. கொழும்பில் அவர் விடுத்த அறிக்கை கபடமற்றது, தெளிவானது. வழமை நிலையைக் கொண்டுவருவதற்கு தடையாக பெருவாரியான காரணிகள் இருக்கின்றன. அவை குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்காலத்தில் முரண்நிலைக்கான விதைகளை அவை தூவக்கூடும். அக்காரணிகள் தனிநபர் சுதந்திரங்கள், மனித உரிமைகள் மீதான தடைகளும் சட்டத்தின் ஆட்சியின்மையும் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தில் இருந்து விடுபாட்டுரிமை கொண்டவர்கள் போன்று செயற்படக்கூடியவர்களாக இருக்கின்ற போக்குமேயாகும். ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் நவிபிள்ளையின் மொழி இராஜதந்திர ரீதியானதாகவும் கண்ணியமானதாகவும் இருந்த அதே வேளை, பல விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் மீது தெளிவான குற்றச்சாட்டுகளை சுமத்துவதாக அது அமைந்தது என்பதில் சந்தேகமில்லை. அவர் பல பிரச்சினைகளைக் கிளப்பியிருக்கிறார். அவற்றை பின்வருமாறு நிரல்படுத்தலாம்;

**இன்னமும் கூட போர் வெற்றியைப்பற்றி பேசுவதிலேயே காலத்தை கழித்துக்கொண்டிருக்கும் ராஜபக்ஷவின் ஆட்சி ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தனக்குரிய ஆணையை மீறி அபிப்பிராயங்களை வெளியிட்டிருப்பதாக குற்றஞ் சாட்டுகிறது**

இன்னமும் கூட போர் வெற்றி பற்றி பேசுவதிலேயே காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் ராஜபக்ஷவின் சிங்கள ஆட்சி நவிபிள்ளை தனக்குரிய ஆணையை மீறிவிட்டார் என்று கூறுவதைக் காண்கிறோம். இம்மாத பிற்பகுதியில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 24 ஆவது கூட்டத்தொடரில் நவிபிள்ளை இலங்கை தொடர்பில் வாய்மூல அறிக்கையொன்றை விடுக்கவிருக்கிறார். அடுத்த வருடம் மார்ச் மாதம் நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வடக்கு, கிழக்கில் தொடர்கின்ற இராணுவப் பிரசன்னம் விரைவாக குறைக்கப்பட வேண்டும்.
2. காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் ஆணைக்குழுவின் நியாயாதிக்கத்திற்குள் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் வெள்ளை வானில் ஆட்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் அடங்கவில்லை. முன்னர் நியமிக்கப்பட்டிருந்த இதையொத்த 5 ஆணைக்குழுக்கள் செயற்பட்டதைப் போன்று இந்த ஆணைக்குழுவும் செயற்பட அனுமதிக்கப்படக் கூடாது.
3. பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இது விடயத்தில் தயவு தாட்சண்யம் காட்டப்படலாகாது. பெண்களை வீட்டுத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களில் பாதிக்கப்படக் கூடிய நிலையில் இருக்கும் பெண்கள், பிள்ளைகள் எதிர்நோக்குகின்ற தொல்லைகள் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.
4. தடுப்புக்காவலில் உள்ளவர்கள் தொடர்பில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்கெதிராக வழக்குத் தாக்க செய்ய வேண்டும். அல்லது, புனர்வாழ்வுக்காக அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். அதிலேயே பயங்கரவாதத் தடைச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும்.
5. வடக்கில் போரினால் பாதிக்கப்பட்டு உணர்வதிர்ச்சிக்குள்ளான மக்களுக்கு உளவள ஆலோசனையும் மனோதத்துவவியல் ஆதரவும் வழங்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்க சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மீதான தடைகளை அதிகாரிகள் அகற்ற வேண்டும்.
6. 2006ஆம் ஆண்டு திருகோணமலை கடற்கரையில் 5 மாணவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன. 12 அதிரடிப்படையினர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அதே வருடம் மூதூரில் பிரெஞ்சு தொண்டர் நிறுவனத்தின் 17 உள்ளூர் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்படுகிற விசாரணைகள் உன்னிப்பாக அவதானிக்கப்படும்.
7. குடிமக்கள் இழப்புகள் தொடர்பாக குற்றச்சாட்டுகளை விசாரிக்க இராணுவத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு நம்பிக்கையை ஏற்படுத்தப் போதுமானதல்ல. நம்பகத்தன்மையான தேசிய விசாரணைச் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
8. அதிகாரப் பரவலாக்கலுக்கு பரந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டியது அவசியம். வடக்கு மாகாண சபைத் தேர்தல் சுதந்திரமானதாகவும், நேர்மையானதாகவும் நடத்தப்படவேண்டும்.

செய்தியாளர் மாகாநாட்டில் நவிபிள்ளை வெளியிட்ட அறிக்கை குறுகியதாக இருந்தாலும் வெலிவேரியாவில் குடிமக்கள் மீது இராணுவம் நடத்திய தாக்குதல், 2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறையிலும் வவுனியா சிறையிலும் தடுப்புக் காவல் கைதுகள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள், 2007ஆம் ஆண்டு வரையப்பட்ட சாட்சிகள் பாதுகப்பு சட்டமூலம் நிறைவேற்றப்படாதமை முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ குழுக்களுக்கு எதிரான பிரசாரங்களையும் வன்முறை ஆர்ப்பாட்டங்களையும் அரசாங்கம் குறைத்து மதிப்பிடுகின்றமை சுயதணிக்கையை நாடவேண்டிய நிர்ப்பந்தத்தை ஊடகங்களுக்கு ஏற்படுத்துகின்ற அச்சுறுத்தல்கள்,கட்டுப்பாடுகள், தகவல் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியம் போன்ற முக்கியமான விடயங்களில் அது அக்கறை காட்டியிருந்தது. தன்னைச் சந்தித்த மனித உரிமைகள் ஆர்வலர்கள் மற்றும் மக்களை பொலிஸாரும், இராணுவத்தினரும் விசாரித்தமை குறித்தும் நவிபிள்ளை கண்டனம் தெரிவித்திருந்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் என்றவகையில் இலங்கைக்கு நவிபிள்ளை மேற்கொண்ட விஜயத்தை வடமாகாண சபைத் தேர்தலையும் பயன்படுத்தி உச்ச பட்ச அனுகூலத்தை அடையலாமென்று ஜனாதிபதி ராஜபக்ஷ எதிர்பார்த்தார். அவரைப் பொறுத்தவரை தானும் தனக்கு நெருக்கியவர்களும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளும் இதுவரையில் செய்த இராஜதந்திர தவறுகளை கொழும்பில் பொதுநலவரசு உச்சி மகாநாட்டை நடத்துவதன் மூலம் இல்லாமல் செய்யலாம் என்று நம்பினார். அந்த மாகாநாட்டை பெரிய தொரு வாய்ப்பாக அவர் கருதினார். மனித குலத்திற்கெதிரான குற்றச் செயல்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் என்று கூறப்படும் அரசியல்வாதிகள் உயர் மட்ட இராணுவ அதிகாரிகளைத் தப்ப வைக்கக்கூடிய ஒரு வாய்ப்பாக இந்த உச்சிமகாநாட்டை அரசாங்கம் கருதிக்கொண்டிருந்தது. கொழும்பில் பொதுநலவரசு உச்சிமாகாநாடு நடத்தப்படாதிருக்கும் பட்சத்தில் அந்த அமைப்பின் சம்பிரதாயபூர்வ தலைவராக ராஜபக்ஷ வருவார். இந்த அந்தஸ்து பொதுநலவரசில் இங்கிலாந்து மகாராணியின் அந்தஸ்துக்கு அடுத்ததாகும். அத்தகைய ஒரு சர்வதேச அந்தஸ்து சர்வதேச சமூகத்திடம் இருந்து வருகின்ற குற்றச்சாட்டுகளில் இருந்து தன்னை விடுவிக்கும் என்று ஜனாதிபதி நம்புகிறார். ஒருவகையில் அந்தச் சிந்தனையில் நல்லதொரு தர்க்கம் இருக்கவே செய்கிறது.

1976ஆம் ஆண்டு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம் அணிசேரா உச்சி மகாநாட்டை பெரும் எடுப்பில் கொழும்பில் நடத்தியது. அணிசேரா இயக்கத்தின் தலைவியாக வந்ததில் திருமதி பண்டாரநாயக்கா பெருமைப்பட்டுக்கொண்டார். ஆனால், அடுத்த வருடப் பிற்பகுதியில் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பொதுத் தேர்தலில் அவர் முன்னென்றும் இல்லாத படுதோல்வியைச் சந்தித்தார். அதிலிருந்து அவர் ஒருபோதுமே மீண்டு எழ முடியவில்லை. திருமதி பண்டாரநாயக்கா அணிசேரா உச்சிமகாநாட்டை நடத்தியதிற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நவம்பரில் பொதுநலவரசு மகாநாட்டை நடத்தவிருப்பதற்கும் இடையே முக்கியமான வேறுபாடிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அது பாராளுமன்ற ஜனநாயகத்தில் பிரதமரை தலைவராகக் கொண்ட ஒரு அரசாங்கம். இது 30வருட கால போரில் வெற்றியைக் கண்டதனால் சிங்கள மக்களின் பேராதரவை அனுபவிக்கின்றதும் சமுதாயத்தை இராணுவமயமாக்குவதில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறதுமான சகல வல்லமையும் கொண்ட ஜனாதிபதி தலைமையிலான ஒரு ஆட்சி. மாகாண சபைத் தேர்தல்களாக இருந்தாலென்ன பாராளுமன்றத் தேர்தல்களென்றால் என்ன சகலவல்லமையும் கொண்ட நிறைவேற்று அதிகார பீடத்தின் செல்வாக்குடன் ஆளும் கட்சி தொடர்ச்சியாக வெற்றிபெற்றுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையை இங்கு காண்கின்றோம்.

ஜனாதிபதி ராஜபக்ஷவைப் பொறுத்தவரை இன்னொரு அரசியல் அனுகூலமும் இருக்கிறது. பிரதான சிங்கள எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சி பொதுநலவரசு உச்சி மகாநாட்டு விவகாரத்தைப் பாரதூரமாக எடுக்கவில்லை. அதனால், அந்த மகாநாடு தொடர்பில் இலங்கைக்குள் அக்கறையுடன் கவனம் செலுத்தப்படுவதாக இல்லை. புலம்பெயர்ந்த தமிழர் சமூகம் தான் சர்வதேச ரீதியில் பாரிய பிரசாரத்தை முன்னெடுத்து கொழும்பு உச்சி மகாநாட்டை உறுப்பு நாடுகள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கோரிக்கை முன்வைக்கிறார்கள். இந்தப் பிரசாரத்தின் காரணமாக புதுடில்லி மௌனம் சாதிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது. மகாநாட்டில் பங்கேற்பதா இல்லையா என்பது குறித்து திட்டவட்டமாக சொல்வதற்கு அது முன்வருவதாக இல்லை.

கொழும்பு மகாநாட்டை பகிஷ்கரிப்பது குறித்து பரிசீலனை செய்ய கனடா நிர்ப்பந்திக்கப்பட்டது. பிரிட்டனும் கூட அவ்வாறு நிர்ப்பந்திக்கப்பட்ட போதிலும் ஒருவாறாக அதில் இருந்து விடுபட்டிருப்பது போல் தெரிகிறது. புலம்பெயர் தமிழர்களின் நெருக்குதல்களுக்கு இணங்கிக் கொள்வதற்கு அவுஸ்திரேலியா மறுத்திருக்கிறது. இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு படையெடுக்கும் படகு அகதிகள் விவகாரம் அந்த நாட்டு அரசுக்கு ஒரு பாரிய பிரச்சினையாக இருப்பதே இதற்குக் காரணம். நியூசிலாந்தைப் பொறுத்தவரை குறைந்த மட்டத்திலான தூதுக் குழுவொன்றை அனுப்புவது குறித்து பரிசீலிக்கக் கூடும். நவிபிள்ளை கொழும்பில் பரிகாசம் செய்யப்பட்டதால் அவுஸ்திரேலியா கூட பிரச்சினைகளைக் கிளப்பலாம். 'முதலில் நான் ஒரு தென்னாபிரிக்க பிரஜை. ஒரு தென்னாபிரிக்கராக இருப்பதில் நான் பெருமையடைகிறேன்' என்று நவிபிள்ளை செய்தியாளர் மகாநாட்டில் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு எதிரான பொறுப்புடைமை தொடர்பிலான விவகாரங்கள் குறித்து கொழும்பு மகாநாட்டில் பெரும்பாலான பொதுநலவரசு தலைவர்கள் பிரச்சினை கிளப்பக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அவர்கள் விவாதிக்கக் கூடிய விவகாரங்கள் கொண்ட பட்டியல் ஒன்று நவிபிள்ளையின் கொழும்பு அறிக்கையில் உள்ளடங்கியிருக்கிறது. தனது அறிக்கை மூலம் அவர் ஏற்கனவே பகிரங்கப்படுத்திய விடயங்கள் ரினிடாட் - டுபாக்கோ, போர்ட் ஒவ் ஸ்பெயினில் 2009 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுநலவரசின் கோட்பாடுகள் மற்றும் பண்பு விழுமியங்கள் தொடர்பிலான தீர்மானத்தின் கீழ் வருகின்றன. அந்தத் தீர்மானம் ஜனநாயக ஆட்சிமுறை, மனித உரிமைகளுக்கு மதிப்பு, சட்டம் ஒழுங்கு பேணல், பால் சமத்துவம், நிறைவேற்று அதிகார பீடம், சட்டவாக்க சபை மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கிடையேயான சுயாதீனம் என்பனவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இந்தக் கோட்பாடுகளை மீறுகின்ற நாடுகள் பொதுநலவரசு அமைப்பில் இருந்து இடைநிறுத்தம் செய்ய முடியும். 2002இல் பிஜி இடைநிறுத்தப்பட்டது. பிறகு 2010 இல் இடம்பெற்ற இராணுவ சதிப் புரட்சியை அடுத்து அந்த நாடு 2ஆவது தடவையாக இடைநிறுத்தப்பட்டது. அதுபோன்றே, 1999 இல் பாகிஸ்தான் இடைநிறுத்தப்பட்டது. இந்த இடைநிறுத்தம் 4 வருடங்கள் தொடர்ந்தது. மீண்டும் 2007ஆம் ஆண்டு பாகிஸ்தான் 6 மாதங்களுக்கு பொதுநலவரசு அமைப்பில் இருந்து இடைநிறுத்தப்பட்டது.

வடமாகாணசபைத் தேர்தல் முடிந்த பிறகு அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பரவலாக்கல் ராஜபக்ஷவிற்கு இன்னொரு பிரச்சினையாக வரக் கூடிய வாய்ப்புகள் இருக்கிறது. தனது ஊடக அறிக்கையில் பிள்ளை அந்த விடயத்தையும் விட்டுவைக்கவில்லை. அதிகாரப்பரவலாக்கல் விவகாரத்தில் இருந்த ராஜபக்ஷ அரசாங்கம் இனிமேலும் தப்பிச் செல்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அனுமதிக்கப்போவதில்லை. பொதுநலவரசு மகாநாட்டில் ஜனநாயகம் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் பேசுவதற்கு இந்தியா நிர்ப்பந்திக்கப்படக் கூடும்.

நவிபிள்ளை ராஜபக்ஷவின் திட்டங்களை குழப்பியடித்திருக்கிறார். நவம்பர் உச்சிமகாநாட்டிற்கு முன்னதாக எவ்வாறு அவர் இந்த குழப்ப நிலையை திருத்தியமைக்கப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். பொதுநலவரசின் முக்கியமான உறுப்பு நாடுகள் மீது புலம்பெயர் தமிழ்ச் சமூகம் பிரயோகிக்கிற தீவிர நெருக்குதல்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பொழுது ராஜபக்ஷ ஆட்சியை மிகவும் கடுமையான பணி காத்திருக்கிறதென்றே கூறவேண்டும். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய அரசியல்



என்.சத்தியமூர்த்தி

# பொதுநலவரசு உச்சி மகாநாட்டிற்கு அவர் வருவாரா?



தற்போது இந்திய பொருளாதாரம் இருக்கும் நிலையில், இந்திய ரூபாவின் மதிப்பு குறித்த கவலைகள் தொடருமேயா னால் பிரதமர் மன்மோகன் சிங் தலைநகர் புதுடில்லியை விட்டு நாட்டின் பிறபகுதி களுக்கு சென்று வருவதற்குக்கூட நேரம் ஒதுக்குவது பிரச்சினையாகி விடும்

'வரும், ஆனா வராது.!' இது வடிவேலின் திரைப்பட 'காமெடி'. இலங்கை அரசைப் பொறுத்தவரை, 'நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கு இந்திய பிரதமர் மன் மோகன்சிங் வருவாரா, மாட்டாரா?' என்ற கேள்விக்கு விடை காமெடி விடயம் அல்ல. மாறாக, இந்தியாவின் முடிவை ஒட்டி, பொதுநலவாய மாநாட்டில் வேறு சில நாடுகளின் பங்கும் பங்களிப்பும் இருக்கும் எனலாம். சர்வதேச அரசியல் மற்றும் இராஜதந்திர வகையில் மாநாடு எதுவும் சாதித்துவிடப் போவதில்லை என்பது உண்மை. அதனால், மாநாட்டின் வெற்றி-தோல்வியும், அதன் அடிப்படையில் இலங்கை அரசிற்கும், குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், உள்நாட்டில் உயரும் மதிப்பும் மரியாதையும் கேள்விக்குறி ஆகிவிடும் என்பதும் உண்மை.

அண்மையில், இந்திய பாராளுமன்றத்தில் இது குறித்து கருத்துத் தெரிவித்த வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், பொதுநலவாய மாநாட்டில் இந்தியாவின் சார்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த அளவில், யார் கலந்து கொள் வார்கள் என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்று கூறினார். முன்னதாக, மாநாட்டுக்கான அழைப் பிதழை ஜனாதிபதி ராஜபக்ஷவின் சார்பில் பிரதமர் மன்மோகன் சிங் கிடம் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜீ. எல். பிரீஸ் அளித்தார். அதற்கு நன்றி தெரிவித்த மன்மோ கன் சிங், அந்த மாநாட்டில் தான் கலந்து கொள்வேன் என்று கூறிவிட வில்லை என்றே பத்திரிகைச் செய்தி கள் தெரிவித்தன. இது இலங்கை அரசுக்கு வருத்தம் அளித்துள்ளது.

### முதல் முறை அல்ல!

எதிர்வரும் பொதுநலவாய மாநாட் டில் இந்திய பிரதமர் கலந்து கொள்ள வில்லை என்றால், இதுவே முதல் முறையாக இருக்காது. பழைய கதை களை விட்டுவிட்டாலும், அவுஸ்திரே லியாவில் நடைபெற்ற பொதுநல வாய மாநாட்டில் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரியே இந்திய குழு விற்கு தலைமை வகித்து சென்றார். அப்போதும் பிரதமர் மன்மோகன் சிங் தான். இது தவிர, பல்வேறு கால கட்டங்களில், இந்தியாவின் வெளியு றவுத் துறை அமைச்சர்கள் கூட நாட் டின் பிரதிநிதி குழுவிற்கு தலைமை வகித்து சென்றுள்ளனர். இதற்கு அர சியல் மற்றும் இரு நாட்டு பிரச்சினை கள் மட்டுமே காரணமல்ல.

தற்போது இந்திய பொருளாதாரம் இருக்கும் சூழ்நிலையில், இந்திய ரூபாயின் மதிப்பு குறித்த கவலைகள் தொடருமேயானால், பொருளாதார மேதை என்று அறியப்படும் பிரதமர் மன்மோகன் சிங், தலைநகர் புது டில் லியை விட்டு நாட்டின் பிற பகுதிக ளுக்குச் சென்று வருவதற்குக் கூட நேரம் ஒதுக்குவது பிரச்சினையாகி விடும். நாளொன்றுக்கு அமெரிக்க டொலருக்கு எதிராக ஒரு இந்திய ரூபாய்கும் அதிகமாக அதிகரித்து வரும் காலகட்டத்தில், பிரதமர் சிங் தற்போதே நவம்பர் மாதம் வரை கணித்து முடிவு எடுத்துவிட முடி யாது.

அதே சமயம், செப்டெம்பர் மாதம் பிரதமர் மன்மோகன் சிங் அமெ ரிக்கா செல்வதற்கான ஆயத்தங்கள் நடந்து வருகின்றன. அப்போது அவர் ஐ.நா. சபையில் உரையாற்று வார். தற்போது இந்திய பொருளா தார வீழ்ச்சியை சரிக்கட்ட உதவுமாறு மேலை நாட்டு அதிபர்களோடு உரை யாடும் வாய்ப்புகளும் உள்ளன. அந்த வகையில் அவரது நியூயோர்க் பயணத்தோடு கொழும்பு பயணத்தை இப்போதே ஒப்பிட்டு விடமுடியாது.

தற்போதைய சூழலில் இந்திய அர சியலில் எந்தவொரு நோக்கரும் திடீர் மாற்றங்களை எதிர்பார்க்க வில்லை. அடுத்த ஆண்டு மே மாதம் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது என்பதால், அரசியல் கட் சிகள் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி மாற்றம் குறித்து அதிக ஆர்வம் காட் டவில்லை. என்றாலும், தற்போதைய இந்திய அரசியல்-பொருளாதார நிலையில் எதுவும் நடக்கலாம் என்ற எண்ணம் அடிமட்டத்தில் பரவத் தொடங்கி உள்ளது.

ஆளும் காங்கிரஸ் கட்சி கூட்டணி யின் தலைவரான சோனியா காந்தி பாராளுமன்றத்திற்கு இடைத் தேர்தல் வராது என்று அண்மையில் கூறியி ருந்தாலும், எதிர்வரும் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் தேர்தல் நடை பெறும் வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறானால் கூட, பிரதமர் மன் மோகன் சிங் வெளிநாடு செல்வதில் சிக்கல்கள் ஏற்படும். அதிலும் குறிப் பாக, இலங்கை இனப்பிரச்சினை தமிழ் நாட்டில் அரசியல் மற்றும் தேர் தல் பிரச்சினையாக கருதப்படும் கால கட்டத்தில், இலங்கை வருவதை மன்மோகன் சிங் தவிர்ப்பதற்கும் வாய்ப்புள்ளது.

### நிறைவேற்றப்படாத வாக்குறுதி!

இவை எல்லாம் எதிர்காலம் குறித்த எண்ணங்களே! ஆனால், பொதுநல வாய மாநாட்டில் பிரதமர் மன்மோ கன் சிங் கலந்து கொள்ளமாட்டார் என்பது போன்ற தற்போதைய செய் திகளுக்குப் பின்னால் இருப்பவை எல்லாம் நிறைவேற்றப்படாத உறுதி களே! இனப்போர் காலத்தில், போர் முடிந்த பின்னர் தனது அரசு பதிமூன் றாவது சட்டத்திருத்தத்திற்கும் அப் பால் சென்று ஓர் அரசியல் தீர்வை அளிக்கும் என்பன போன்ற உறுதி மொழிகளை ஜனாதிபதி ராஜபக்ஷ, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு பல்வேறு காலகட்டங்களில் அளித்தி ருந்தார்.

ஆனால், அந்த உறுதிமொழிகளில் இருந்து ஜனாதிபதி ராஜபக்ஷ சிறிது சிறிதாக மாறிவிட்டார் என்றே இந் தியா கருதுவதாக எண்ண இடமிருக் கிறது. போருக்குப் பிந்தைய காலகட் டத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவும் சரி, அவரது அரசியல் ஆலோசகர்களும் சரி, இதுபோன்ற எண்ணங்களையே பரப்பி வந்துள்ளனர்.

பிரதமர் மன்மோகன் சிங்கைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினை விடயத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ கொடுத்த வாக்குறுதியில் இருந்து மாறிவிட்டார் என்பது இதுவே முதல்

> பொதுநலவரசு மகா நாட்டில் மன்மோகன் சிங் கலந்து கொள்ள மாட்டார் என்பது போன்ற தற்போதைய செய்திகளுக்குக் பின் னால் இருப்பவை எல் லாம் நிறைவேற்றப் படாத வாக்குறுதிகளே

முறை அல்ல. இனப்போர் உச்சத்தில் இருந்த காலகட்டத்தில், கடந்த 2008 ஆம் ஆண்டில் கொழும்பில் நடந்த தெற்காசிய கூட்டமைப்பின் உச்சிமா நாட்டிற்கு அவர் வரவிருந்த காலகட் டத்தில் இருநாடுகளுக்கு இடையே யான பொருளாதார கூட்டாளி ஒப்பந்தம் (Comprehensive Economic Partnership Agreement, CEPA), இரு தலைவர்களாலும் கையெழுத்திடுவதற்கு தயாராக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது குறித்த பல கட்ட பேச்சுவார்த்தைகள் ஆண்டுக்கணக்கில் நடத்தப்பட்டு ஒப்பந்த ஆவணங்களின் மாதிரியிலும் இரு நாட்டு உயர் அதிகாரிகளும் கையெழுத்திட்டிருந்தனர். அந்த நிலையில், திடீரென்று கொழும்பில் உதித்த போராட்டங்களை காரணம் காட்டி இலங்கை அரசு அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துதிடுவதற்கு அதிக காலம் கேட்டுப் பெற்றுக் கொண்டது. அந்தப் பின்னணியில் தெற்காசிய மாநாட்டிற்காக இலங்கை விஜயம் செய்த மன்மோகன் சிங்கும் இது குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷவை எந்தவிதத்திலும் சங்கடப்படுத்தாமலே இரு தரப்பு பேச்சுவார்த்தைகளையும் நடத்தி முடித்தார்.

ஆனால், ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் அந்த ஒப்பந்தம் குறித்து இலங்கை அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை என்பதே உண்மை. அதே சமயம், இரு நாட்டு அதிகாரிகளும் இலங்கையின் தற்போதைய சங்கடங்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் முடிவு காண்பார்கள் என்றும் கூறப்பட்டது. மாறாக, அண்மையில் இந்தியா விஜயம் செய்த பொருளாதார வளர்ச்சித்துறை அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இருநாட்டு பொருளாதார உறவுகள் மேம்பட்டுள்ள தற்போதைய காலகட்டத்தில் இதுபோன்ற ஓர் ஒப்பந்தத்திற்கு அவசியமே இல்லை என்ற விதத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார். இனப்பிரச்சினை விவகாரத்திலும் இலங்கை அரசின் தற்போதைய நிலை இந்த விதத்திலேயே அமைந்துள்ளது என்று இந்தியா கருதுகிறது என்றே கூற வேண்டும்.

### வட மாகாண தேர்தலும், நவி பிள்ளை விஜயமும்

நவம்பர் மாதத்தைய உச்சி மாநாட்டிற்கு நாட்கள் இருக்கும் நிலையில், இடையில் எதிர்வரும் வட மாகாண தேர்தல் மன்மோகன் சிங் வருவது குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்திக்கொள்ள உதவும். தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும் வாய்ப்பு உள்ள நிலையில், அந்த வெற்றி தேர்தலில் உறுதி செய்யப்பட்டால், அத்தகைய சூழ் நிலையில் இந்தியா என்ன செய்யும்?

> வடக்கு தேர்தல் அதிக பிரச்சினைகளும் முறைகேடுகளும் இல்லாமல் நடைபெற்றதாக சர்வதேச சமூகம் கருதுமேயானால், அது இந்தியாவின் முடிவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். தேர்தலின் நம்பகத்தன்மை குறித்த இந்தியாவின் கருத்துகளும் கூட சர்வதேச சமூகத்தின் முடிவுக்கு ஒரு காரணியாக அமையும்

இல்லை என்று சொல்லாமல், அரசு தரப்பு தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் புகார் கூறலாம். அதுபோன்றே, உடன் நடைபெறவுள்ள வடமேற்கு மற்றும் மத்திய மாகாண தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட்ட எதிர் அணி இத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைக்கலாம். அங்கெல்லாம், முறையான தேர்தலில் கூட, ஆளும் கூட்டணி வெற்றி பெறாது என்று எதிர்க்கட்சிகள் எதிர்பார்ப்பதாகத் தெரியவில்லை.

இன்னும் சொல்லப்போனால், தேர்தல் காலத்தில், உள்நாட்டில் பிரசாரம் செய்யாமல் இந்தியாவில் சில நாட்களை செலவிட்டதன் மூலம், எதிர்க் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க எதிர் அணியின் வெற்றி குறித்த தனது நம்பிக்கையின்மையைத் தெரிவித்து விட்டார் என்றே நினைக்க வேண்டும். இதனை, ஜனாதிபதி ராஜபக்ஷவின் வெளிநாட்டு விஜயங்களோடு ஒப்பிட்டுப் பேசுவது எதிர் அணிக்கு எந்தப் பலனையும் பெற்றுத்தரப் போவதில்லை.

கூட்டமைப்பும் சரி, தமிழ் மக்களும் சரி, தேர்தல் முறைகேடுகளையும், தேர்தல் வன்முறைகளையும் இனப்பிரச்சினையின் ஓர் அலகாக எண்ணி செயல்பட்க் கூடாது. இனப்பிரச்சினை இல்லாத சிங்களவர் பகுதிகளிலும் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்த அரசு என்றல்ல, எந்த அரசு பதவியில் இருந்தாலும், சிங்களவர் பகுதியில் இத்தகைய குற்றச்சாட்டுகள் தொடர்ந்துள்ளன. தமிழர் பகுதிகளில், கடந்த 2001-ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னின்று நடத்திய தேர்தல் முறைகேடுகளுக்கு முன்னர் வேறு எதையும் ஒப்பிட்டுப் பார்ப்பதே கேலிக்குரிய விடயம்.

அதுபோன்றே, 2005-ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை தமிழர்கள் புறக்கணிக்க வைத்ததன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கமும் அவர்களுக்கு ஆதரவான கூட்டமைப்பும் வேறு எந்த ஒரு கட்சியையும் அரசையும் தேர்தல் முறைகேடுகள் குறித்து குற்றம் சாட்டும் தகுதியை இழந்து விட்டது. தற்போது, அவர்களுடைய குற்றச்சாட்டுகளில் உண்மை இருப்பதாக எடுத்துக் கொண்டாலும் கடந்த காலம் அவர்களது கண் முன்னே தோன்றி மறையும் என்று எதிர்பார்க்கலாம்.

எது எப்படியோ, வடக்கு மாகாண தேர்தல் அதிக பிரச்சினைகளும் முறைகேடுகளும் இல்லாமல் நடைபெற்றதாக சர்வதேச சமூகம் கருதுமேயானால், அது இந்தியாவின் முடிவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். இன்னும் சொல்லப்போனால், தேர்தலின் நம்பகத்தன்மை குறித்த இந்தியாவின் கருத்துகளும் கூட சர்வதேச சமூகத்தின் முடிவிற்கு ஒரு காரணியாக அமையும்.

இந்தப் பின்னணியில் ஒரு வார இலங்கை விஜயத்தை மேற்கொண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் தலைவர் நவநீதம்பிள்ளை தமிழ்ப் பகுதிகளுக்கும் சென்றார். விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி ராஜபக்ஷ, பாதுகாப்புத் துறைச் செயலர் கோத்தாபய மற்றும் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார். அது போன்றே, எதிர்க்கட்சித் தலைவர் ரணில், பிரச்சினைக்குள்ளாகி உள்ள முஸ்லிம் சமுதாய அரசியல் தலைவர்களில் ஒருவரான ரவூப் ஹக்கீம் போன்றோரையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

நவி பிள்ளையின் விஜயம், ஜெனீவா மனித உரிமை கவுன்சில் முன்னால் உள்ள இலங்கைப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அறிவதற்காகவே என்பதே உண்மை. அதற்காகத்தான் இலங்கை அரசே அவரை வரவேற்றுள்ளது. ஆனால், கொழும்பில் பேசிய நவி பிள்ளை, இலங்கையில் தற்போதைய மனித உரிமை நிலைமை குறித்து முழுமைக்கும் தான் ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்க இருப்பதாகக் கூறியுள்ளார். இந்த அறிக்கை குறித்து இந்தியாவின் முடிவும் சர்வதேசத்தின் கருத்தும் கூட மன்மோகன் சிங் பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதில் ஒரு வித பங்கு வகிக்கும்.

### தமிழ் நாடு அரசியல்

இந்தப் பின்னணியில், தமிழ் நாட்டில் பொதுநலவாய மாநாடு குறித்த அரசியல் எதிர்ப்பும், மறுபடியும் உயிர்த்தெழுமோ என்ற நிலையில் உள்ள மாணவர் போராட்டமும் பல்லில்லாமல் போகலாம். அதிலும் குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் கூட்டமைப்பு ஆட்சி அமையுமேயானால், தமிழ் நாடு அரசியல்வாதிகளும் மாணவர்களும் எதிர்ப்பது, இலங்கை அரசை மட்டுமா அல்லது புதிதாக பதவியேற்றுள்ள வட மாகாணத்தின் கூட்டமைப்பு ஆட்சியையுமா என்ற கேள்வியும் எழும்.

பொதுநலவாய மாநாடு குறித்தும் அதில் இந்தியா உட்பட்ட உறுப்பு நாடுகள் பங்கேற்பது குறித்தும் கூட்டமைப்பு எந்தக் கருத்தும் கூறவில்லை. தற்போது அரசு எதிர்கொள்ளும் எதிர்ப்புகள் எல்லாம், புலம்பெயர்ந்த தமிழர்களின் சில அமைப்புகளின் கருத்தே. அதிலும் குறிப்பாக, 'தனி நாடு கேட்கும் தமிழர்கள்', அவர்கள் இருப்பதாக கூறிக்கொள்ளும் தன்னாட்சி அரசு மற்றும் அவர்களின் கருத்தின் படி செயல்படும் தமிழ் நாடு அரசியல் தலைமைகளின் கருத்தே இலங்கைத் தமிழ் மக்களின் கருத்தாக இந்தியாவில் எதிரொலித்து வருகிறது. இதுபோன்ற நிலைமை தொடர்வதற்கு இந்திய அரசு விரும்பும் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்திய பாராளுமன்றத்தில் பேசிய அமைச்சர் சல்மான் குர்ஷித், பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கு பெறுவது குறித்து முடிவு எடுக்கப்படவில்லை என்ற விதத்தில் கருத்துக் கூறவில்லை. மாறாக, உச்சிமாநாட்டில் இந்தியா சார்பில் யார் பங்குபெறுவார்கள் என்பது குறித்து மட்டுமே தற்போதைய கேள்வியாக இருக்கிறது என்று கூறலாம். அது வெறும் கேள்வியா, அல்லது கேள்விக்குறியா என்பது எதிர்வரும் வாரங்களில் தெரியவரும். ■

---

*(13ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

தொடர்ந்து இருக்கின்ற கவலையையும், அவநம்பிக்கையையும், துருவமயத்தையும் நவிபிள்ளை கண்டார்.

சில சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பின் போது அரசாங்கத்துடன் நேர்மறையான ஊடாட்டத்தை செய்து கொள்வதில் தனக்கு நாட்டம் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். கடந்த காலத்தில் அன்றி சமகால நிலைவரங்களிலேயே தான் கவனத்தைச் செலுத்துவதாக அவர் கூறினார். அரசாங்கத்தின் வேண்டுகோள்களின் பேரிலேயே அவ்வாறு செய்வதாகவும் அவர் சொன்னார். கடந்த காலத்தில் அக்கறை காட்டுவதைத் தவிர்க்காமலேயே நிகழ்காலத்தின் மீது கவனம் செலுத்தக்கூடிய வழிவகைகள் இருக்கின்றன. உதாரணமாக, காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தற்போதைய தருணத்தில் செயற்படுவதையே ஆணையாகக்கொண்ட நிறுவனமாகும். ஆனால், இது கடந்தகால விவகாரங்களையே கையாளுகின்றது. இந்த ஆணைக்குழு அதன் பணிகளை எந்தப் பாணியில் செய்கிறது என்பதும் அது அதன் ஆணைக்குப் பொருத்தமான முறையில் நேர்மையுடனும் சுயாதீனமாகவும் செயற்படுகிறதா என்பதுமே நவிபிள்ளையின் அக்கறைக்குரிய விடயங்களாக இருக்கும்.

தமிழ்ச் சமூகத்தின் நினைவில் ஓயாது ஊடாடும் முக்கியமான விவகாரங்கள் மீது சர்வதேச சமூகத்தின் அக்கறையைப் புதுப்பித்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் இலங்கைக்கான விஜயம் இந்த விவகாரங்கள் முழு நாட்டினதும் அக்கறைக்குரிய விவகாரங்களாகும். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய ஒரு சூழ்நிலையை நவிபிள்ளையின் விஜயம் ஏற்படுத்தும் என்று நம்புவோமாக. ஆனால், தீர்வு இலங்கைக்குள் இருந்தே வரவேண்டியிருக்கும். சர்வதேச சமூகத்திடம் இருந்து மாத்திரம் தீர்வு வரப்போவதில்லை. சர்வதேச சமூகம் நெருக்குதலைக் கொடுக்கக்கூடிய ஒரு பாத்திரமாகவே செயற்படக் கூடியதாக இருக்கும். நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க வலுவானதும் சுயாதீனமானதுமான தேசிய பொறிமுறையொன்று அவசியமானதாகும். சர்வதேச சமூகத்தின் நெருக்குதலுக்குப் புறம்பாக இதுவிடயத்தில் இலங்கைக்குள் இருந்து இடையறாது கோரிக்கைகள் வெளிவரவேண்டியது மிகமிக அவசியமானதாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சீனாவின் சிறுபான்மை இனத்தவரின் கதை

# தனித்துவ அடையாளம் புரிந்துகொள்ளச் சிரமமான புதிர்நிலை



குமார் டேவிட்

சீனாவில் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட 55 சிறுபான்மை இனங்கள் இருக்கின்றன. இவற்றில் திபெத்தியர்களையும் உய்குர் இனத்தவர்களையும் தவிர, ஏனைய சகல சிறுபான்மையினத்தவர்களுடனும் முரண்நிலை ஏற்படாதிருப்பதை உறுதிசெய்வதில் சீனா வெற்றிகண்டு வந்திருக்கிறது. திபெத்தியர்களும் உய்குர்களும் பெரிய சிறுபான்மையினரே தவிர, மிகப்பெரிய சிறுபான்மையினத்தவர்கள் அல்ல. ஆனால், நாட்டு சனத்தொகையில் 92 சதவீதத்தினராக விளங்கும் ஹான் இனத்தவர்களில் இருந்து இவர்கள் மதத்தால், மொழியால், இனத்தால் வேறுபடுகிறார்கள். உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட சிறுபான்மை இனத்தவர்களில் மிகப்பெரிய குழுவினர் ஷுவாங் இனத்தவர்களாவர். இவர்களின் சனத்தொகை ஒரு கோடி 80 இலட்சம். இது சீனாவின் சனத்தொகையில் 1.3 சதவீதம் மாத்திரமே. இவர்கள் தென் குவாங்ஸி மாகாணத்தைச்சேர்ந்த புராதன சுதேசிகளாவர். ஒருங்கிணைந்து வாழ்கிறார்கள். பிரதானமாக வடமேற்கு நிங்ஸியா மாகா




சீனாவின் ஐந்து சுயாட்சிப் பிராந்தியங்கள் (திபெத், ஸின்ஜியாங், உள்மொங்கோலியா, நிங்ஸியா, குவாங்ஸி)

இனத்துவ அரசியல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ணத்தில் வாழும் ஹுய் இனத்தவர்களும் மஞ்சூரியாவைச் சேர்ந்த மஞ்சூக்களும் தொலைதூர மேற்கு மாகாணமான ஸின் ஜியாங்கில் வாழும் உய்குர்களுமே அடுத்த பெரிய சிறுபான்மை இனத்தவர்களாவர். இந்த மூன்று இனத்தவரினதும் சனத்தொகை தலா ஒருகோடியாகும். 70 இலட்சம் சனத்தொகையைக் கொண்ட திபெத்தியர்கள் சீனாவின் பத்தாவது பெரிய சிறுபான்மையினத்தவர்கள். இவர்கள் நாட்டு சனத்தொகையில் அரைச் சதவீதத்தினர் மாத்திரமே. (ஹுய் இனத்தவர்களும் உய்குர்களும் முஸ்லிம்கள். அத்துடன் ஹான் மக்களிடமிருந்து இன ரீதியாக வேறுபடுகிறார்கள்)

இருபத்து மூன்று மாகாணங்களையும் நான்கு பிரமாண்டமான மாநகர சபைகளையும் விட சீனா ஐந்து சுயாட்சிப் பிராந்தியங்களையும் கொண்டிருக்கிறது. இந்தப் பிராந்தியங்கள் இனத்துவ அடையாளங்களைப் பாதுகாப்பதற்காக மாகாணங்களுக்கு இருக்கிற அதிகாரங்களையும் விட கூடுதலான அதிகாரங்களைக் கொண்டவையாக இருக்கின்றன. சுயாட்சிப் பிராந்தியங்களில் இனரீதியில் திபெத்தியர்களை (90 சதவீதம்) பெரும்பான்மையாகக் கொண்டது. நிங்ஸியாவும் குவாங்ஸியும் முறையே ஹுய் இனத்தவர்களையும் ஷுவாங் இனத்தவர்களையும் மூன்றில் ஒரு பங்கினராகக் கொண்டவை. ஆனால், மூன்றில் இரண்டு பங்கினராக இருக்கும் ஹான் சீனர்கள் சுயாட்சிப் பிராந்திய அந்தஸ்தை ஆதரிப்பதில்லை. ஸின் ஜியாங்கில் உய்குர்களுக்கும் ஹான் இனத்தவர்களுக்கும் இடையேயான விகிதாசாரம் ஏறக்குறைய சம அளவானது. அதே வேளை, ஐந்தாவது சுயாட்சிப் பிராந்தியமான உட்புற மொங்கோலியாவில் (Inner Mongolia) மொங்கோலியர்கள் 20 சதவீதத்திற்கும் குறைவானவர்கள். சிறுபான்மை இனத்தவர்களை நேர்மையீனமாக நடத்துவதாக குற்றச்சாட்டுகள் வந்துவிடக்கூடாது என்ற அக்கறையில் சீன கம்யூனிஸ்ட் கட்சி இந்த ஐந்து சுயாட்சி

**வீதிகள், பாலங்களை அமைப்பதிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் பணத்தை செலவு செய்வது தனித்துவ அடையாளத்தைப்பற்றி அக்கறைப்படுபவர்களை திருப்திப்படுத்தப் போவதில்லை. வடமாகாணசபைத் தேர்தலில் படுதோல்வியை சந்திக்கும்போது இந்த உண்மையின் முதல் ருசியை இலங்கை அரசு தெரிந்துகொள்ளும்**

பிராந்தியங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. சிங்கள பெரும்பான்மையினத்தவர்களும் இலங்கை அரசாங்கமும் கொண்டிருக்கின்ற மனோநிலை இதற்கு மறுதலையானது.

யுனான் மாகாணம் உண்மையிலேயே ஒரு பலவண்ணக் காட்சி போன்றது. அது 17 சிறுபான்மை இனக்குழுக்களைக் கொண்டது. இந்த இனங்கள் மாகாணத்தின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்காக (ஒரு கோடி 60 இலட்சம்) அமைகின்றன. எஞ்சிய மூன்றில் இரு பங்கினரும் ஹான் இனத்தவர்கள். (3கோடி 20 இலட்சம்). சீனாவின் உள்ளூராட்சி அரசாங்க முறை சிக்கலானது என்ற போதிலும், (மாகாண மட்டத்துக்குக் கீழே நான்கு நிருவாக மட்டங்கள் இருக்கின்றன) திபெத்தையும் ஸின் ஜியாங்கையும் தவிர, மற்றும்படி முரண்நிலை ஏற்படக்கூடிய சாத்தியங்களை கணிசமானளவுக்கு தவிர்க்கக் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மை இனங்களின் இயற்கையான தனித்துவத்தைக் குறித்து நிற்கின்ற காரணிகளுக்கு போதுமானளவுக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன், இனங்களுக்கிடையிலான அமைதியின்மை என்பது ஒரு பாரதூரமான பிரச்சினையாகவும் இல்லை.

பட்டுப்பாதை (Silk Road)யின் விந்தைகளை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். இப்பாதை சிறப்பு வாய்ந்த புராதன வர்த்தக, தொடர்பாடல் மற்றும் கலாசார மார்க்கமாகும். இதுவே பௌத்தமதம் சீனாவைச் சென்றடைய உதவியது. மக்கள் குடியேற்றங்களைக் கொண்ட ஆரவாரம் மிகுந்த பல சந்தை நகரங்கள் பட்டுப்பாதையில் அமைந்திருந்தன. அருகாமையில் இருந்த நாட்டுப்புற மக்கள் தங்கள் உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக இந்த நகரங்களுக்கு கொண்டுவந்தன. இடத்துக்கு இடம் செல்கிற மக்கள் கூட்டத்தினரை பட்டுப்பாதை வர்த்தகர்கள் வரவேற்றார்கள். இந்த வனப்புமிகு ஓவியத்தில் கீறல்களும் இருந்தன. சாம்ராச்சியங்களும் பழங்குடியினரும் நாடோடிகளும் மேலாதிக்கத்துக்காக ஒருவர் மீது மற்றவர் படையெடுத்தனர். மேலாதிக்கமும் மாறி மாறி அமைந்தது. ஆளப்படுபவரும் ஆள்பவரும் இனத்தால்,மதத்தால் வேறுபட்டபோது பதற்றநிலை உருவானது. மக்கள் குடியரசுக்கும் திபெத்தியர் மற்றும் உய்குர்களுக்கும் இடையிலான இன்றைய உறவுமுறை இதே போன்ற உரு அச்சில் பொருந்துகிறது. அதாவது, திபெத்தியர்களும் உய்குர்களும் வேறுபட்ட மதங்களைப் பின்பற்றுவதுடன் ஹான் மக்களில் இருந்து இன ரீதியாகவும் வேறுபடுகின்றனர். (இனரீதியில் உய்குர்கள் பெரிய துருக்கிஸ்தான் என்று அழைக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள்) 60 வருடங்களுக்கு முன்னர் மாத்திரமே சீனா இந்தப் பிராந்தியங்கள் மீதான அதன் பிடியை வலுப்படுத்திக் கொண்டது. அதனால், உய்குர்களும் திபெத்தியர்களும் சம்பந்தப்பட்ட தேசிய இனப்பிரச்சினை ஒரு லெனினின் விவேகத்துடனும் கூருணர்வுத் திறத்துடனும் கையாளப்பட வேண்டும். அத்தகைய ஆற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியிடம் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

ஏனைய சிறுபான்மை இனங்களிலிருந்து திபெத்தியர்களும் உய்குர்களும் வேறுபட்டவர்களாக இருப்பதற்குக் காரணம் என்ன? முதலாவது தனித்துவமானதும் தெளிவாகத் தெரிகிறதுமான இனத்துவ அடையாளக் காரணி மதமேயாகும். உய்குர்கள் முஸ்லிம்கள். திபெத்தியர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுகிறார்கள். பெரிய சீனாவில் கடைப்பிடிக்கப்படுகிற பௌத்தத்தையும் விட இது வித்தியாசமானது. அதிர்ஷ்டவசமாக, ஹான் சீனர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் எந்த மதத்தின் மீதும் ஆர்வம் கொண்டவர்களாக இல்லை. அதனால் மதங்களுக்கிடையிலான பிணக்குகள் இல்லை. இதை மறுதலையாகச் சிந்தித்துப் பாருங்கள். பொதுபலசேனாவையும் முஸ்லிம்களையும் நினைத்துப் பாருங்கள்- விடயம் தெளிவாக விளங்கும். திபெத்தியர்களும் உய்குர்களும் சீனமொழியை (புடொங்குவா) விட வேறுபட்ட மொழிகளையே பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். இது அவர்களின் தனித்துவ அடையாளத்தைக் குறித்து நிற்கும் இரண்டாவது முக்கிய காரணியாகும்.

> சுயாட்சிப் பிரதேசங்களில் பொருளாதார விஸ்தரிப்பில் பெய்ஜிங் கொட்டுகிற நிதியை ராஜபக்ஷாக்கள் வடக்கில் செலவிடுகிற நிதியுடன் ஒப்பிட்டால் இது ஒரு சமுத்திரத்தில் ஒரு துளி என்றுகூடக் கூறமுடியாது. பொருளாதார மாற்றத்தின் அளவு மலைப்பைத் தருவதாக இருக்கின்ற போதிலும் கூட, இந்தத் தந்திரம் சீனாவில் பயனைத்தரவில்லை. யாழ்ப்பாணத் தமிழர்களைப் போன்றே திபெத்தியர்களும் உய்குர்களும் துயரம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்

திபெத்தும் ஸின்ஜியாங்கும் இடையிடையே சீனாவின் ஆதிபத்தியத்தின் கீழ் இருந்தாலும், மக்கள் சீனக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரமே மாற்ற முடியாத வகையில் ஒருங்கிணைக்கப்பட்டன. அல்லது நீங்கள் விரும்பினால் 'அடிமை நிலைப்படுத்தப்பட்டன' என்று வைத்துக்கொள்ளுங்கள். அரசியல் ஒடுக்குமுறையுடன் பொருளாதார அபிவிருத்தியைக் கலந்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமென்று பெய்ஜிங்கில் உள்ள அதிகாரவாதிகள் நினைத்துச் செயற்பட்டது நிலைவரங்களை மேலும் சிக்கலாக்கிவிட்டது. வீதிகள், பாலங்களை அமைப்பதிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் பணத்தைச் செலவு செய்வது தனித்துவ அடையாளத்தைப் பற்றி அக்கறைப்படுபவர்களைத் திருப்திப்படுத்தப் போவதில்லை. வடமாகாண சபைத் தேர்தலில் படுதோல்வியைச் சந்திக்கும் போது இந்த உண்மையின் முதல் ருசியை இலங்கை அரசாங்கம் தெரிந்துகொள்ளும்.

திபெத்திலும் ஸின் ஜியாங்கிலும் பொருளாதார விஸ்தரிப்பில் பெய்ஜிங் கொட்டுகிற நிதியை ராஜபக்ஷாக்கள் வடக்கில் செலவிடுகிற நிதியுடன் ஒப்பிட்டால், இதை ஒரு சமுத்திரத்தில் ஒரு துளி என்றும் கூடக் கூற முடியாது. பொருளாதார மாற்றத்தின் அளவு மலைப்பைத் தருவதாக இருக்கின்ற போதிலும் கூட, இந்தத் தந்திரம் சீனாவில் பயனைத் தரவில்லை. யாழ்ப்பாணத் தமிழர்களைப் போன்றே திபெத்தியர்களும் உய்குர்களும் துயரமும் விசனமும் கொண்டவர்களாகவேயிருக்கிறார்கள். புராதன பட்டுப்பாதை நெடுகிலும் 50 வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட பழைய நகரங்கள் இன்று 5 இலட்சம் தொடக்கம் 30 இலட்சம் வரையான மக்களுடனான மிடுக்கான நவீன பெருநகரங்களாக மாறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. சுற்றிவரவுள்ள மலைகளில் இருந்து மிகவும் விவேகமான முறையில் வடிவமைக்கப்பட்ட நீர் விநியோகத்திட்டங்களையும் நேர்த்தியான விவசாயத்திட்டங்களையும் காணமுடியும்.

மின்சார நிலையங்களும் கனரக தொழிற்சாலைகளும் (அலுமினியம், நிலக்கரி, சீமெந்து மற்றும் கட்டிட நிர்மாணத்துக்கான பொருட்களும்) நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு காலத்தில் ஒட்டகங்கள் செல்லும் பாதைகளாக இருந்த பிராந்தியங்கள் எங்கும் குறுக்கு மறுக்காக பாரிய மின்விநியோக அமைப்புத் திட்டங்களும் ரயில்வே வலையமைப்புகளும் காணப்படுகின்றன. உணவு, உடை மற்றும் வீட்டுப் பாவனைத் தளபாடங்கள் எங்கு பார்த்தாலும் சுபிட்சம். உலகில் மிகப்பெரிய காற்று மின் ஆலை ஸின்ஜியாங் எல்லையோரம் விரிந்து கிடக்கிறது. சீனாவின் இயற்கைவாயு சேம வளத்தின் மூன்றில் ஒரு பகுதியும் நிலக்கரிச் சேமவளத்தின் நான்கில் ஒரு பகுதியும் ஸின் ஜியாங்கிலேயே இருக்கின்றன. உலகின் மூன்றாவது பெரிய வாசனைத் திரவிய உற்பத்திப் பகுதியாகவும் ஸின் ஜியாங் விளங்குகிறது. ஆசியாவில் கறிவகைகளுக்குப் பயன்படுத்தப்படும் தக்காளியில் 70 சதவீதம் ஸின் ஜியாங்கிலிருந்தே கிடைக்கப்பெறுகிறது. பார்வைக்கு தரிசு போன்று தோன்றினாலும், இந்த மாகாணம் வளங்கள் நிறைந்ததாகும்.

எவ்வாறெனினும், இந்தப் பொருளாதார வளர்ச்சியெல்லாம் இனப்பதற்ற நிலையைத் தணிக்கவில்லை, மாறாக தீவிரமடையவே வைத்திருக்கிறது. இதற்கு மூன்று காரணங்கள். ஹான் சீனர்கள் பெரும் எண்ணிக்கையில் படையெடுப்பதை

*(28ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவின் மணிமேகலை

## கருணாநிதியின் வர்ணனை



**‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்’ என்ற பொன்வரிகள் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையின் தனிச்சிறப்பு**

‘இந்தியாவின் மணிமேகலை சோனியா காந்தி’ என்று பாராட்டியிருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. 2-ஜி வழக்கில் கனிமொழி கைது செய்யப்பட்ட பிறகு இப்போதுதான் முதன் முறையாக சோனியா காந்தியை மனமார வாழ்த்தியிருக்கிறார். அதுவும் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தலைவர் விஜயகாந்தின் பிறந்த நாள் விழாவிற்கு ராகுல் காந்தியே நேரடியாக போன் போட்டு வாழ்த்துத் தெரிவித்த நிலையில், தி.மு.க.

## சென்னை மெயில்





முத்தையா காசிநாதன்

தலைவரின் இந்தப் பாராட்டு அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தி விட்டது. அது மட்டுமன்றி, தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா, புதிய நில எடுப்பு மசோதா ஆகியவற்றில் தி.மு.க. ஆதரவளித்தது. இந்தியாவை உலுக்கிக் கொண்டிருக்கும் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியும், வளர்ச்சியுடன் சண்டை போட்டுக்கொண்டிருக்கும் இந்தியப் பொருளாதாரமும் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோதும் ‘எத்தனையோ சவால்களை சந்தித்த இந்தியா இந்த சோதனையிலும் வெற்றிபெறும்’ என்று ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு தோள் கொடுத்து நிற்கிறார்கள் தி.மு.க. எம்.பிக்கள். இன்னும் சொல்லப்போனால் பாராளுமன்றத்தில் பேசிய தி.மு.க. எம்.பி. டி.கே.எஸ். இளங்கோவன், ‘இந்த நிலைக்குக் காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இருக்கும் போது இந்தியாவில் நடக்கும் ஜூடிஸியல் ரூல்’ என்று பேசினார். அதை வழிமொழிந்த நிதியமைச்சர் சிதம்பரம், ‘அது உண்மைதான். உச்சநீதிமன்றத்தின் கண்ணியம் பாதிக்காத வகையில் இதுபற்றி அனைவரும் அமர்ந்து பேசி முடிவு எடுக்க வேண்டும்’ என்றார். இரு கட்சிகளுக்கும் ஏற்பட்ட இந்த பாசத்திற்குக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காரணம் இல்லாமல் இல்லை. தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் கனவுத்திட்டம். அந்தத் திட்டத்தை தி.மு.க. ஆதரிக்குமா, ஆதரிக்காதா என்ற கேள்வியை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா எழுப்பி தி.மு.க. தலைவருக்கு சிக்கலை ஏற்படுத்தி வந்தார். அந்த

> காங்கிரஸ் தலைவர்களே உணவு பாதுகாப்பு மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறியதற்கு பெருமை தேடிக் கொள்ளாத நிலையில் கலைஞர் கருணாநிதி பாராட்டியதை தமிழக காங்கிரஸார் கண்டு கொள்ளவில்லை

மசோதா வாக்கெடுப்பிற்கு போகும் முன்பு இருவருக்கும் இந்த விவகாரத்தில் காரசாரமான அறிக்கைப் போர் நடைபெற்றது. 'தி.மு.க. கொடுத்திருக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொண்டால்தான் ஆதரவு' என்று கலைஞர் கருணாநிதியும், 'நாங்கள் கொடுத்துள்ள திருத்தங்களைக் கொண்டு வந்தால்தான் ஆதரிப்போம்' என்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் விளக்கம் கொடுத்தார்கள். இறுதியில் பாராளுமன்றத்தில் மசோதா மீது வாக்கெடுப்பு வந்தபோது இரு தரப்பிலும் சொல்லப்பட்ட சில முக்கியத் திருத்தங்களை மட்டும் ஒப்புக்கொண்டது மத்திய அரசு. அதனால், தி.மு.க. உணவுப் பாதுகாப்பு மசோதாவை ஆதரித்து வாக்களித்தது. ஆனால் அ.தி.மு.க. எதிர்த்து வாக்களித்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட கலைஞர் கருணாநிதி, சோனியா காந்தியை மணிமேகலை என்று மனம் குளிர வாழ்த்தினார். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற பொன் வரிகள் ஐம்பெரும் இலக்கியங்களில் ஒன்றான 'மணிமேகலை'யின் தனிச் சிறப்பு!

இந்த வாழ்த்தினைப் பார்த்த தமிழக முதல்வர் 'இந்த மசோதாவை ஆதரித்ததன் மூலம் தமிழக மக்களுக்கு மாபெரும் துரோகத்தை தி.மு.க. இழைத்திருக்கிறது' என்று சாடினார். 'வாழ்த்துக்கும்' 'சாடலுக்கும்' தமிழக அரசியல் களத்தில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு. இந்த விடயத்தைப் பொறுத்தமட்டில், 'தி.மு.க., காங்கிரஸ், தே.மு.தி.க' ஆகிய மூன்று கட்சிகளும் ஓரணியில் நின்று பாராளுமன்றத் தேர்தலை சந்திக்கக்கூடாது என்பது அ.தி.மு.க.வின் நகர்வு. அப்படியொரு தோற்றம் உருவானால் அது பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வின் 'வெற்றி இமேஜை' பாதிக்கும் என்று நினைத்தது அ.தி.மு.க. தலைமை. இந்த சமயம் பார்த்து காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி விஜயகாந்திற்கு பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னார். அது 'காங்கிரஸும், தே.மு.தி.க.வும்' ஓரணியில் என்ற இமேஜை உருவாக்கியது. அ.தி.மு.க. வின் வியூகத்திற்கு இது மேலும் உதவியது. இது போன்ற நேரத்தில் சோனியாவின் கனவுத்திட்டமான உணவுப் பாதுகாப்பு மசோதாவை எதிர்க்க வைத்து விட்டோம் என்றால் தி.மு.க.வின் எதிர்காலக் கூட்டணி கேள்விக்குறியாகி விடும் என்பது அ.தி.மு.க.வின் திட்டம். அந்த வியூகத்தை முறியடிக்கவே தி.மு.க. உணவுப் பாதுகாப்பு மசோதாவை ஆதரித்தது. ஆனால் 'ராகுல் காந்தி' மற்றும் 'தமிழக காங்கிரஸ் தலைவர்கள்' விஜயகாந்தை வாழ்த்தியதில் கோபமடைந்தது. அதற்கு செக் வைக்கும் விதத்தில் சோனியா காந்தியை 'இந்தியாவின் மணிமேகலை' என்று பாராட்டினார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

காங்கிரஸ் தலைவர்களே உணவுப், பாதுகாப்பு மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறியதற்கு பெருமை தேடிக் கொள்ளாத நிலையில், கலைஞர் கருணாநிதி பாராட்டியதை தமிழக காங்கிரஸார் கண்டுகொள்ளவில்லை. இன்னும் சொல்லப்போனால், அதற்காக தி.மு.க. தலைவருக்கு யாரும் நன்றியும் சொல்லவில்லை. அதன்பிறகு, மறைந்த காங்கிரஸ் தலைவர் மூப்பனாரின் நினைவு தினம் வந்தது. அதற்கு விஜயகாந்த் போனார். ஒவ்வொரு வருடமும் மூப்பனார் நினைவு தினத்திற்குப் போவது அவரது வழக்கம் என்றாலும் இந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசனும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஞானதேசிகனும் முந்தியடித்துக் கொண்டு விஜயகாந்துடன் போட்டோவிற்கு போஸ் கொடுத்தார்கள். இந்த நிகழ்வுகளை தி.மு.க. சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறது. வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க. எக்காரணத்தைக் கொண்டும் வெற்றி பெற்று விடக்கூடாது என்ற எண்ணத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர்களே இருக்கிறார்கள் என்ற முடிவிற்கு தி.மு.க. வந்திருக்கிறது. அதற்கு வலு சேர்க்கும் வகையில் தான் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை இணைத்துக் கொள்கிறார்கள். அதற்கும் விஜயகாந்த் துணை போகிறார் என்ற எரிச்சல் அக்கட்சித் தலைமைக்கு ஏற்பட்டது.

இப்படியொரு சூழ்நிலையில்தான் ஆகஸ்ட் 31ஆம் திகதி விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல். திருமாவளவனின் பொன் விழா ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய தி.மு.க. தலைவர் கருணாநிதி அடுத்து வரப் போகும் அரசியல் மாற்றங்கள் குறித்து 'வெளிப்படையாக'ப் பேசினார். மூன்று காட்சிகள் பற்றி அக்கூட்டத்தில் விளக்கிப் பேசினார். ஒன்று திருமாவளவன் தி.மு.க.வுடன் இருப்பார் என்ற அறிவிப்பு. 'திருமாவளவன் நம்மோடு இணைந்திருக்கிறார், அவர் நம்மை விட்டுப் பிரியப் போவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துமில்லை, பிரிய நாம் விடப் போவதும் இல்லை'' என்றார் ஆணித்தரமாக. 'அ.தி.மு.க. அரசின் அராஜகங்களை எதிர்த்து அனைவரும் போராட வாரீர்' என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே. மணி கலைஞர் கருணாநிதிக்கு கடிதம் எழுதியிருந்த நிலையில் இந்த அறிவிப்பை ஒரு 'அதிசயம்' போல் பார்க்கிறார்கள் விடுதலைச் சிறுத்தை அமைப்பினர். இரண்டாவது 'விஜயகாந்த்-காங்கிரஸ்' நெருங்கிச் செல்வது குறித்த தி.மு.க.வின் நிலைப்பாடு. அதுபற்றிப் பேசிய கலைஞர் கருணாநிதி, 'தி.மு.க.வை அதன் தோழமைக் கட்சிகளோடு சேர்ந்து கருவறுத்து விடலாம் என்ற எண்ணத்தோடு சிலர்

இந்த எச்சரிப்பிலும் அர்த்தம் இருக்கிறது என்பது அரசியல் அரிச்சுவடி தெரிந்தவர்களின் வாதம். இதுபற்றி நம்மிடம் பேசிய தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர், 'தி.மு.க.வுடன் தோழமையாக இருக்கின்ற கட்சிகள் என்று கலைஞர் கூறுவது காங்கிரஸைத்தான். ஏனென்றால் உணவுப்பாதுகாப்பு மசோதா, நில எடுப்பு மசோதா போன்ற விடயங்களில் இரு கட்சிகளும் சமீப காலமாக நெருங்கி வந்துள்ளன. காங்கிரஸுடன் நெருங்கிச் செல்வது போல் தோற்றம் கொடுத்து, தி.மு.க.வை வீழ்த்த நினைக்கிறார் விஜயகாந்த் என்ற கோபம் கலைஞருக்கு வந்திருக்கிறது. விஜயகாந்தின்

# அரசியல்வாதிகளை மிரட்டும் செப்டெம்பர் ஜுரம்

நோக்கம் எல்லாம் 2016இல் எப்படி முதலமைச்சராவது? அதற்கு இப்போதே தி.மு.க.வுடன் கூட்டணி போகக்கூடாது என்பதுதான் என்று தலைவர் நினைக்கிறார். அதற்காக விஜயகாந்த் காங்கிரஸைப் பயன்படுத்துகிறார். ஜி.கே.வாசன் உதவுகிறார் என்று கலைஞர் கருதுகிறார். 'விஜயகாந்த்- காங்கிரஸ்' நெருக்கத்தின் குட்டு வெளிப்பட வேண்டும் என்பதற்காகவே திருமாவளவன் பிறந்த நாள் கூட்டத்தில் கலைஞர் அப்படியொரு எச்சரிக்கையை விட்டார்'' என்றார்.

மூன்றாவதாக பா.ம.க. பற்றியும் அதே பேச்சில் கருத்துக் கூறியிருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. அதில், ''நம்மை தொடவே மாட்டோம் என்று சொன்ன ஒரு தலைவர் கூட, ஏதாவது செய்ய வேண்டும் எல்லோரும் சேர்ந்து என்று எனக்கு மடல் எழுதும் அளவிற்கு வந்திருக்கிறது (திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி இல்லை என்ற டாக்டர் ராமதாஸ் முன்பு கூறியது)'' என்று கூறிவிட்டு, ''எல்லோரும் சேர்ந்துதான் இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த அநாகரிக, அநியாய, அராஜக ஆட்சியை அகற்ற வேண்டும். அதற்கு இந்தப் பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில் சபதம் ஏற்போம்'' என்று பகிரங்க அழைப்பு விடுத்திருக்கிறார். திருமாவளவனுக்கு உத்தரவாதம், விஜயகாந்திற்கு எச்சரிக்கை, ராமதாஸுக்கு பாஸிட்டிவ் சிக்னல் என்று மூன்று முக்கிய கோணங்களில் திருமாவளவன் பிறந்த நாள் விழாவில் பேசியிருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. ஆனால், தி.மு.க. தலைமை விரும்புவது ''தி.மு.க., தே.மு.தி.க. மற்றும் காங்கிரஸ்'' அடங்கிய கூட்டணி. அக்கூட்டணிக்கு வித்திடும் வகையில் காங்கிரஸ் கட்சியும், விஜயகாந்தும் செயல்பட வேண்டுமே தவிர, தி.மு.க.வை தனிமைப்படுத்தும் விதத்தில் செயல்படாதீர்கள் என்ற எச்சரிக்கைதான் திருமாவளவன் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சபதம்! அதனால்தான் ''எல்லோரும் சேர்ந்துதான் இன்றைய அ.தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும்'' என்று அழைப்பு விடுத்துள்ளார். அதன் பின்னணியில் இருப்பது 2004 பாராளுமன்றத் தேர்தல் போல் ஒரு ''மெகா கூட்டணியை'' 2014 பாராளுமன்ற தேர்தலுக்கு அமைக்க வியூகம் வகுக்கிறது தி.மு.க. என்பதுதான்!

இதற்கு மறுதினம், அதாவது செப்டம்பர் 1ஆம் திகதி தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் செயற்குழு நடைபெற்றது. விஜயகாந்த் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் ஒன்பதாவது வருடத்தில் அடியெடுத்து வைக்கும் தே.மு.தி.க. விழாவினை சிறப்பாகக் கொண்டாடுவது என்று முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மொத்தம் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் தே.மு.தி.க.வின் பாராளுமன்ற தேர்தல் நிலைப்பாடு பற்றி முடிவு எடுக்க இந்த செயற்குழு விஜயகாந்திற்கு

மனப்பால் குடிக்கிறார்கள். அப்படி மனப்பால் குடிப்பவர்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக இருக்கிறார்கள்-கட்சிகளின் தலைவர்களாக! கட்சிகளின் தலைவர்கள் எளிதாக உருவாகி விடுகிறார்கள். அவர்களுக்குத் தேவை ஒரு பக்க விளம்பரம்! ஒரு பக்கத்தில் அவர்கள் பிறந்த நாளோ அல்லது மணவிழா நாளோ- இந்த நாளையெல்லாம் போட்டு ஒரு பக்கத்தை நிரப்பி சமுதாயத்திலே வீரன், தீரன், சூரன் என்றெல்லாம் ஆக்கி விடுகிறார்கள். பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தியாகத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். துரோகத்திற்கு துணை போகக்கூடாது' என்று எச்சரித்துள்ளார். சமீபத்தில் நடந்து முடிந்த பிறந்த நாள் விஜயகாந்துடையது என்பது இங்கே கூர்ந்து கவனிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் அளிக்கிறது என்ற 14ஆவது தீர்மானம் ஆகும். அது மாதிரி நிலைப்பாடு எடுக்கும் போது விஜயகாந்த், 'தமிழக நலன்' மற்றும் 'ஏழை எளியவர்களின் முன்னேற்றத்தை' மனதில் வைத்து முடிவு எடுக்க வேண்டும் என்று தே.மு.தி.க. செயற்குழுவின் தீர்மானம் விஜயகாந்திற்கு 'நிபந்தனை' விதித்துள்ளது. அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க முடியாது என்ற நிலையில், தே.மு.தி.க. காங்கிரஸுடன் கைகோர்ப்பதா? அல்லது தி.மு.க.பக்கமாக திசை மாறுவதா என்பது பற்றி இனி விஜயகாந்த் தீவிர ஆலோசனையில் இறங்குகிறார். அதற்கான சமிக்ஞைகள் வருகின்ற செப்டம்பர் மாதம் 29ஆம் திகதி தூத்துக்குடியில் நடைபெறும். தே.மு.தி.க.வின் ஒன்பதாவது வருட தொடக்க விழாப் பொதுக்கூட்டத்தில் எதிரொலிக்கலாம். வருகின்ற செப்டம்பர் 26ஆம் திகதி பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்படும் நரேந்திர மோடி தமிழகம் வருகிறார். திருச்சியில் மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். பா.ஜ.க.வுடனும் தே.மு.தி.க. கூட்டணி வைக்கலாம் என்று கிளம்பியுள்ள பிரசாரத்திற்கு இடையில் மோடி பேச்சையும் கேட்டு விட்டு 'அரசியல் நிலைப்பாட்டை' எடுப்போமே என்று விஜயகாந்த் நினைத்திருக்கக்கூடும். அதனால்தான், மோடி வந்து திரும்பிய பிறகு செப்டம்பர் 29ஆம் திகதி தன் கட்சிப் பொதுக் கூட்டத்தை வைத்திருக்கிறார் விஜயகாந்த்.

எது எப்படியிருப்பினும், செப்டம்பர் மாதம் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் கூட்டணிக்கான 'அச்சாரம்' போடும் மாதமாகத் திகழும் என்று தெரிகிறது. ஏனென்றால், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விருது நகரில் செப்டம்பர் 15ஆம் திகதி கூட்டம் போடுகிறார். தி.மு.க. செப்டம்பர் 17ஆம் திகதி வேலூரில் முப்பெரும் விழாவினை (தி.மு.க., அண்ணா, பெரியார் ஆகியோர் பிறந்த தினங்கள்) நடத்துகிறார். பா.ஜ.க.வின் சார்பில் நரேந்திர மோடியை வைத்து திருச்சியில் செப்டம்பர் 26ஆம் திகதி இளைஞர்கள் சங்கமத்திற்கு தயார் ஆகிறார்கள். தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தோ செப்டம்பர் 29ஆம் திகதி பொதுக்கூட்டம் போடுகிறார். அனைவரது பாதையும் பாராளுமன்றத்தை நோக்கிப் போகிறது. ஆனால், எந்தெந்தப் பாதையில் போகப் போகிறார்கள் என்பதை ஓரளவு வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் இந்த செப்டம்பர் மாதம் தமிழக அரசியலில் முக்கியத்துவம் பெறுகிறது. ■

---

*(24ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

திபெத்தியர்களும் உய்குர்களும் வெறுக்கிறார்கள். நவீனமயமாக்கம் கிராமிய மற்றும் நாடோடி சமூகங்களை நிர்மூலம் செய்கிறது. அத்துடன், கைத்தொழில் மயமாக்கல் இயற்கையான சுற்றாடலை மலினப்படுத்துகிறது.

ஐரோப்பாவும் அமெரிக்காவும் அவற்றின் முழு மலர்ச்சிக் காலத்தில் 50 அல்லது 100 வருடங்களில் சாதிக்க முடிந்ததை விடவும் கூடுதலான பொருளாதார வளர்ச்சியை சீனாவின் இந்தப் பிராந்தியங்கள் கண்டிருக்கின்ற போதிலும் கூட, உள்ளூர் சிறுபான்மையினத்தவர்களுக்கும் குடிபெயர்ந்துவந்த ஹான்சீனர்களுக்கும் இடையேயான இனமோதல்களின் வடிவில் சில வருடங்களுக்கு ஒரு தடவை கொந்தளிப்பு ஏற்படுகிறது.


சீனாவின் வெற்றிகளிலும் பின்னடைவுகளிலும் இருந்து மற்றையவர்களுக்கு நிறையவே பாடங்கள் இருக்கின்றன. மிகவும் முக்கியமானது, மாகாணங்கள் குறிப்பாக, சிறுபான்மையினத்தவர்களின் பாரம்பரிய தாயகங்களில் மக்கள் தங்களது விவகாரங்களைத் தாங்களே கையாளக்கூடியதாக உயர்ந்த மட்ட சுயாட்சி வழங்கப்பட்டு, அதிகாரம் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும். இதுவே சீனாவின் பெரும்பான்மையான இனத்துவ பிராந்தியங்களின் வெற்றியின் இரகசியமாகும். கூடுதலான அளவுக்கு மத்தியமயப்படுத்தப்பட்டதும் ·ஆதிக்கம் செலுத்துகின்றதுமான ஒரு கட்சி அரசின் அழுத்தத்துக்கு மத்தியிலும், சிறுபான்மையினத்தவர்களின் தனித்துவ அடையாளங்கள் மூழ்கடிக்கப்படாதிருப்பதையும் பிளவை உண்டாக்குகிற போக்குகள் தடுக்கப்படுவதையும் சிறுபான்மையினங்களுக்கு உறுதி செய்யக்கூடியதாக உண்மையான-போதுமான அதிகாரப் பரவலாக்கம் நடைமுறையில் இருக்கிறது. கடந்த மூன்று தசாப்தங்களில் காணப்பட்ட அபார பொருளாதார வளர்ச்சி 30 கோடி மக்களை வறுமையில் இருந்து மீட்டிருக்கிறது. ஆரம்பத்தில் இந்தப் பொருளாதார வளர்ச்சி வளமிக்க கிழக்கு மற்றும் தெற்கு கரையோர பிராந்தியங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தாலும், கடந்த தசாப்தத்தில் முதலீடும் முன்னேற்றமும் நாட்டின் உள்பகுதிகளுக்கும் தூரமேற்கிற்கும் ஊடுருவியிருக்கின்றன. (எவ்வாறெனினும் சீனா பரந்தளவில் நடுத்தரவருமானமுடைய நாடாகுவதற்கு இன்னமும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது)

திபெத்திலும் ஸின்ஜியாங்கிலும் சீனாவின் தேசியக் கொள்கையின் தோல்வி வேறுபட்ட பாணி பிரச்சினையொன்றை வெளிக்காட்டுகிறது. தனித்துவ அடையாள அக்கறைகள் அவற்றின் சுயாதீனமான இருப்பைக் கொண்டுள்ளன. பொருளாதார முனையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு அள்ளி வழங்கினாலும், அந்த தனித்துவ அடையாள அக்கறைகள் பிரத்தியேகமாக கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

ஏதேச்சாதிகாரம் தனித்துவ அடையாளத்துக்கும் பழைய வரலாற்று ரீதியான பதற்றங்களுக்கும் வெளிப்படையான அரசியல் பரிமாணத்தைச் சேர்ப்பதன் மூலமாக முரண்நிலையை மேலும் ஊக்குவிக்கிறது. இதை பெய்ஜிங்கும் கொழும்பும் கடுமையான முறையில் கற்றுக்கொண்டிருக்கின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய அரசியல்



# இன்றைய சூழலில் இந்திய - பாகிஸ்தான் போர் தேவையா?



அ.மார்க்ஸ்

**பாகிஸ்தான் அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவது என்பதே மன்மோகன் சிங் அரசின் நிலைப்பாடாக இதுவரை இருந்து வந்துள்ள போதிலும் இன்றுள்ள அரசியல் சூழலில் இதை அவர்களால் வெளிப்படையாக பேச இயலாதுள்ளது**

தேவை என்கிற குரல்தான் இப்போது உரத்து ஒலிக்கிறது. அப்படியான ஒரு கருத்தை உருவாக்குவதற்குத்தான் இந்திய ஊடகங்களும் துணை நிற்கின்றன. தொலைக்காட்சி விவாதங்களிலும் இத்தகைய குரல்களுக்குத்தான் அதிக இடம் அளிக்கப்படுகின்றன. இது தேர்தல் நேரம் வேறு. பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.க.வைப் பொறுத்தமட்டில் பாகிஸ்தானையும் சீனாவையும் உடனடி எதிரிகளாகக் கட்டமைப்பது என்பது அதன் அரசியல் நிகழ்ச்சி நிரலில் ஒன்று. அதிலும் முஸ்லிம் நாடான பாகிஸ்தானுடன் ஒரு யுத்தத்தை நடத்திப் பணிய வைப்பதென்பது அதன் உள்நாட்டு அரசியல் நோக்கத்திற்கு உகந்த ஒன்று என்பதை விளக்க வேண்டியதில்லை.

ஆளும் கட்சியான காங்கிரஸைப் பொறுத்தமட்டில், அதற்கு ஊழல், பொருளாதார நெருக்கடி, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி என ஏகப்பட்ட பிரச்சினைகள். இந்தச் சூழ்நிலையில், இத்தகைய போர் வெறிப் பேச்சுகள் அதற்கும் கூட இவற்றிலிருந்து கவனத்தைத் திருப்ப உதவியாக இருக்கிறது. இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்போது பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி பாகிஸ்தானைக் கடுமையாக எச்சரித்துள்ளார். எங்களின் பொறுமையைத் தவறாக எடைபோட்டுவிடாதீர்கள் எனக் கூவியுள் எல்லையோர அத்துமீறல்களுக்கு உடனடியாக எதிர்வினைகள் புரிய இராணுவத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார். அதே நேரத்தில் இந்திய இராணுவத் தளபதி விக்ரம் சிங், பிரதமரைச் சந்தித்து எல்லைப் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார். அமெரிக்காவில் நடக்கவுள்ள ஐ.நா. பொது அவைக் கூட்டத்தின்போது மன்மோகனும் முஷாரஃபும் சந்தித்துப் பேச உள்ள சம்மிட் நடைபெறுமா என்பது இப்போது கேள்விக்குறியாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட் 6 அன்று இந்திய வீரர்கள் ஐவர் கொல்லப்பட்டதற்குப் பின் இந்த எல்லையோர மோதல்களில் பாகிஸ்தான் வீரர்கள், ஒரு கேப்டன் உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளனர். இதை ஒட்டி பாகிஸ்தானிலுள்ள இந்தியத் தூதுவரை அழைத்து, அதன் அயலுறவுச் செயலர் இந்தக் கொலைகளைக் கண்டித்துள்ளார். பாக் தேசிய அசெம்பிளியில் கண்டனத் தீர்மானமும் இயற்றப்பட்டுள்ளது. எனினும், ஆக்கபூர்வமான முறையில் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை என்பதும் தீர்மானத்தில் ஓரங்கமாக உள்ளது.

மன்மோகன் அரசின் நிலைப்பாடு என்பதுங்கூட பாக் அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவது என்பதாகவே இதுவரை இருந்தபோதிலும் இன்றுள்ள அரசியல் சூழலில் இதை அவர்கள் வெளிப்படையாகப் பேச இயலாதுள்ளது. இந்திய வீரர்கள் ஐவர் எல்லையில் கொல்லப்பட்ட அன்று பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி, பாக் இராணுவ உடையில் வந்த சுமார் 20 பேர் சுட்டதில் 5 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டார்கள் என்று அறிவித்தது. பா.ஜ.க.வினால் மட்டுமன்றி இந்திய ஊடகங்கள் பலவற்றாலும் கடுமையாகக் கண்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தாக்கிக் கொன்றவர்கள் பாக் இராணுவ வீரர்கள்தான் என அடுத்த நாள் அவர் அவசர அவசரமாக அறிவிக்க வேண்டியதாயிற்று.

உண்மையில் அவர் முதலில் வெளியிட்ட அறிக்கைதான் எதார்த்தமானது மட்டுமல்ல, ராஜதந்திர ரீதியில் சரியானதுங்கூட. பாக் அரசியலைப் புரிந்தவர்களுக்குத் தெரியும், பாக் இராணுவம், இந்திய இராணுவத்தைப் போல அமைச்சரவைக்கு முழுமையாகக் கட்டுப்பட்ட ஒன்று அல்ல. இந்தத் தாக்குதல் பாக் இராணுவ வீரர்களாலேயே நடத்தப்பட்டிருந்தாலுங்கூட அது நவாஸ் ஷெரீஃப் அரசின் ஒப்புதலுடன் நடந்ததாகக் கொள்ள இயலாது. பிரதமர் நவாஸ் ஷெரீஃப் அண்டை நாடுகளுடன் நல்லுறவை விரும்புகிற செய்தி எல்லோரும் அறிந்த உண்மை. ஆனால், பாக் இராணுவத்திற்கு அந்த எண்ணம் கிடையாது. எனவே, ஷெரீஃபின் திட்டத்தை முறியடிக்க இராணுவம் தன்னிச்சையாகச் செய்திருக்கலாம் என்கிற வாய்ப்பும் உண்டு. பாக் அரசியலில் இதெல்லாம் சகஜம். ஆனால், பாக் இராணுவமே கூட இன்று இந்தியாவுடன் ஒரு தீவிரமான போரை விரும்புகிறதா என உறுதியாகச் சொல்லிவிட இயலாது. ஏனெனில், பாக் மண்ணை வேராகக் கொண்டு உருவாகியுள்ள பயங்கரவாத அமைப்புகள் இந்தியாவிற்கு மட்டுமல்ல, பாக்கின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்குமே பெரிய சவாலாக புரிந்துகொள்ள இயலும். நவாஸ் ஷெரீஃப் அரசின் முழுமையான ஒப்புதலுடன் பாக் இராணுவம் இந்தத் தாக்குதலை நடத்தி இருந்தால் பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்வது உட்பட பாக் அரசுடன் நேரடி மோதல் என்கிற ஒரு அணுகல் முறையை மேற்கொள்வது ஒருவேளை சரியாக இருந்திருக்கலாம். ஆனால், அத்தகைய சாத்தியம் இல்லை என்பது தான் பாக் அரசியலை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுள்ள எல்லோருடைய கருத்தும். ஐந்து இந்திய வீரர்கள் கொல்லப்பட்டது வெளியானவுடன் ஷெரீஃப் அதிர்ச்சியும் வருத்தமும் தெரிவித்த செய்தி பத்திரிகை

**எல்லைப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகள் ஏற்படாதவரை எல்லையில் படைகள் ஒன்றையொன்று சுட்டுக்கொள்வது என்பது தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக எல்லையோரங்களில் சுடுவது என்பதை இந்தியாவே தொடங்கியது என்பதையும் கவனிக்கத் தவறலாகாது**

உள்ளது. பழங்குடிப் பகுதியில் டெஹ்ரீக்-ஏ-தாலிபான் ஏ- பாகிஸ்தான் அமைப்புடன் பாக் நடத்தும் போரில் அது மிகப்பெரிய இழப்புகளைச் சந்தித்துள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் பாக் இராணுவத்திற்கு தோல்விதான்.

பாக் இராணுவத்திற்குள்ளேயே தீவிரவாதிகளுக்கு ஆதரவும் உள்ளது. தீவிர இயக்கங்களின் நோக்கங்களின் மீது ஒரு பகுதியினருக்கு மரியாதையும் உள்ளது. எனவே, இராணுவத் தலைமையின் ஒப்புதல் இல்லாமல் இராணுவத்தின் அப்பகுதியினரின் சாகசங்களில் ஒன்றாகவும் இது நடந்திருக்கலாம், அல்லது பாக் இராணுவத்தின் மறைமுகமான ஆதரவுடன் தீவிரவாதிகளும் இதைச் செய்திருக்கலாம்.

இத்தனை சாத்தியக் கூறுகளும் உள்ள நிலையில் அந்தோணியின் தொடக்க அறிவிப்பு எத்தனை எதார்த்தமானது என்பதை யாரும் களில் வந்தது. பிரதமரான பிறகு நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சியில் அவர் விடுத்த செய்தியிலுங்கூட இந்தப் பிரச்சினையின் அடிப்படையில் இந்தியாவுடனான உறவுகளை முறித்துக்கொள்ளும் அளவிற்கான பேச்சுகளைத் தவிர்க்குமாறு அவர் கூறியதும் கவனிக்கத்தக்கது.

இந்தியாவுடன் ஷெரீஃப் முயற்சிக்கும் சுமுகமான உறவை முறிக்கும் நோக்குடன்தான் பாக் இராணுவம் இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்றால், இதை ஒட்டி நாம் பேச்சுவார்த்தையை முறித்துக்கொள்வது என முடிவெடுப்பது பாக் இராணுவத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகிவிடும் என்பதை நாம் மறந்துவிடலாகாது. பதிலாக எல்லை ஓரத்தில் பாதுகாப்பை தீவிரப்படுத்தும் அதே நேரத்தில் பாக் அரசுடன் பேச்சுவார்த்தையைத் தொடர்வதுமே பாக் இராணுவத்தின் நோக்கத்தை முறியடித்து அதைத் தனிமைப்படுத்த உத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும். இந்தியாவுடன் சுமுக உறவைப் பேண வேண்டும் என எண்ணுகிற வர்களே பாகிஸ்தரனில் அதிகம் உள்ளனர் என்பதை நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

பாக் இராணுவத்தின் ஒரு பிரிவு தன்னிச்சையாகவோ, இல்லை பாக் இராணுவத்தின் உதவியுடன் தீவிர வாதிகளோ இந்தத் தாக்குதலை நடத்தி இருந்தாலும் கூட உடனடி மோதல் என்பது நிச்சயம் இந்தியா விற்குச் சாதகமாக இருக்காது. எல்லையில் நடைபெறும் போர் தீவிரவாதிகள் எளிதில் இந்திய எல்லைக்குள் ஊடுருவுவதற்கே உதவும்.

தவிரவும், இராணுவ ரீதியில் எல்லா அம்சங்களிலும் நாம் பாக்கை விட வலிமையாக உள்ளோம் என்கிற நிலை பாக் அணுகுண்டு வெடித்த அன்றோடு முடிவுற்று விட்டது. இன்று இரண்டுமே அணு வல்லமை உள்ள நாடுகள். 2001-02 காலகட்டத்தில் இந்தியப் பாராளுமன்றத்தின் மீதான தாக்குதலை ஒட்டி ஆப்ரேஷன் பராக்கிரம் என்ற பெயரில் இந்தியா தாக்குதலை நடத்தியபோது இந்தியத் தரப்பில் 1000க்கும் மேற்பட்ட வீரர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், அதேநேரத்தில் இந்தியா மீதான பயங்கரவாதத் தாக்குதல்கள் குறையவும் இல்லை. கிஷ்ட்வார் (2001), ரகுநாத் ஆலயம் (2002), நந்திமார்க் (2003) முதலான தாக்குதல்களை எல்லாம் நாம் முறியடித்துவிட இயலவில்லை. வாஜ்பேயி முஷாரஃப் பேச்சுவார்த்தையை ஒட்டி 2003க்குப் பின் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்தத்திற்குப் பின்புதான் எல்லையில் இவ்வாறு அவ்வப்போது தாக்குதலில் இரு தரப்பிலும் வீரர்கள் கொல்லப்படுவது குறைந்தது.

2000த்தில் இதுபோன்ற எல்லையோரத் தாக்குதல்களில் இந்தியத் தரப்பில் 114 வீரர்களும் 36 சிவிலியன்களும் கொல்லப்பட்டனர். 2001இல் இது 37 வீரர்கள் 17 சிவிலியன்களாக இருந்தது. 2002இல் கொல்லப்பட்ட இந்திய வீரர்கள் 81, சிவிலியன்கள் 74. 2003இல் இது 29 வீரர்கள் 38 சிவிலியன்கள். போர் நிறுத்தத்திற்குப் பின் இந்த எண்ணிக்கை சுழியாகியது.

எல்லைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகள் ஏற்படாதவரை இதுபோன்று எல்லையில் படைகள் ஒன்றையொன்று சுட்டுக்கொள்வது என்பது நடந்து கொண்டுதான் இருக்கும். உண்மையில் எல்லை தாண்டிய பாதுகாப்பு மற்றும் அயலுறவுத் துறை சார்ந்த சுமார் நாற்பது உயரதிகாரிகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். தேர்தலுக்குப் பின் ஒருவேளை பா.ஜ.க. தலைமையில் கூட்டணி அரசு அமைந்தால் அதில் தமக்கு ஒரு பதவி என்பதைக் காட்டிலும் வேறு எந்த நல்ல நோக்கத்தையும் இந்த



அறிக்கை கொண்டிருக்கவில்லை.

அதேநேரத்தில் ஆகஸ்ட் 12 அன்று அமைதிக்கான இந்திய பாகிஸ்தான் படைவீரர்களின் முன்முயற்சி (Indo Pak Soldiers Peace Initiative) என்கிற அமைப்பின் இந்தியக் கிளை வெளியிட்ட அறிக்கை இதற்கு முற்றிலும் மாறாக இருந்தது. ஐந்து இந்திய வீரர்கள் கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டித்த இவர்கள், மோதல் என்பது பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது, பேச்சுவார்த்தைகள் ஒன்றே இன்றைய தேவை எனக் குரல் எழுப்பினர். இரு நாடுகளிலும் உள்ள மக்கள் அதிகாரம் பெறுவதற்கும், வளம் பெறுவதற்கும் அமைதி ஒன்றே வழி என அந்த அறிக்கையில் முன்னாள் படை வீரர்கள் முழங்கினர்.

மக்கள் நலனை முன்நிறுத்துபவர்கள் பேச்சு வார்த்தைக்கு முன்னுரிமை அளிப்பதும், சொந்த மற்றும் அரசியல் நலன் சார்ந்து பேசுவோர் பேச்சு வார்த்தைகள் கூடாது எனச் சொல்வதும் புரிந்துகொள்ளக் கூடியதுதான். ■

பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக எல்லை ஓரங்களில் சுடுவது என்பதை இந்தியாவே தொடங்கியது என்பதையும் நாம் கவனிக்கத் தவறலாகாது. இன்று பாகிஸ்தானுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் எனப் படு தீவிரமாகப் பா.ஜ.க. பேசி வந்த போதும் அது ஆட்சியில் இருந்த போது இந்த விடயத்தில் ஓரளவு பொறுப்பாக இருந்தது என்றே சொல்ல வேண்டும். 2001 பாராளுமன்றத் தாக்குதலை ஒட்டி பாக் மீது போர் தொடுக்க வேண்டும் என்கிற கருத்துகளை முறியடிக்கத் தான் எத்தகைய முயற்சிகளெல்லாம் செய்ய வேண்டி இருந்தது என்பது குறித்து அன்றைய அமைச்சர் ஜஸ்வந்த் சிங் தனது நூலில் குறிப்பிடுகிறார். அதேபோல இந்திய பாக் உறவில் வாஜ்பேயி முஷாரஃப் பேச்சுவார்த்தையும், அதன் விளைவான போர்நிறுத்தமும் இந்திய பாக் உறவில் ஒரு மைல் கல் எனலாம்.

சென்ற ஆகஸ்ட் 4 அன்று பாக் உடனான பேச்சுவார்த்தையை உடனே நிறுத்த வேண்டும் என முன்னாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# ஒரு துருவவாதத்தின் முடிவு



சிந்தாமணி மகாபத்ரா



சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு தோன்றிய ஒரு துருவ உலக ஒழுங்கு (Unipolar world order) ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது போலத் தோன்றுகிறது. முன்னாள் பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் ஒருவரினால் 'உச்ச வல்லமை கொண்ட அரசாக' (Hyper power) வர்ணிக்கப்பட்ட எஞ்சியிருக்கும் ஒரே வல்லரசான அமெரிக்கா அதன் வல்லமையும் செல்வாக்கும் உலகம் பூராகவும் விரைவாக அருகிக்கொண்டு போவதைக் காண்கிறது.

உண்மையில் இந்த 'உச்ச வல்லமை கொண்ட அரசின்' பாதிக்கப்படக் கூடிய தன்மை 21ஆம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் - அதாவது 2001 செப்டெம்பரில் நியூயோர்க்கிலும் வாஷிங்டனிலும் அல்-கயெடா இயக்கம் படுமோசமான பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடுத்த போது அம்பலமாகிக் கொண்டது. தலிபான்களின் ஆட்சியில் இருந்த ஆப்கானிஸ்தானில் அல்-கயெடா தளங்கள் மீது ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் நிருவாகம் தொடுத்த பதிலடித்தாக்குதல் திணறடிப்பதாகவும் கூடுதலானளவுக்கு அச்சந்தருவதாகவும் இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

உலகின் ஒரேயொரு வல்லரசு என்றவகையில் தங்களால் உலக விவகாரங்களில் எவ்வாறு நடந்து கொள்ள முடியுமென்பதை புஷ் நிருவாகம் சில வருடங்கள் காட்டிக் கொண்டது. ஒருதுருவ உலக ஒழுங்கில் அமெரிக்கா அதன் ஒருதலைப் பட்ச போக்கை (Unilateralism) பல நடவடிக்கைகளின் ஊடாக வெளிக் காட்டிக் கொண்டது. காபூலில் தலிபான் ஆட்சி அகற்றல், ஆப்கானிஸ்தானில் இருந்த பல அல்-கயெடா முகாம்கள் நிர்மூலம், அணுவாயுத வல்லமை கொண்ட பாகிஸ்தானைப் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்கப் போக்கிற்கு இசைவாகச் செயற்பட நிர்ப்பந்தித்தமை, சர்வதேச சமூகத்தின் பரந்தளவிலான எதிர்ப்புக்கு மத்தியிலும் ஈராக்கில் சதாம் ஆட்சியை அகற்றும் நோக்குடனான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டமை, லிபியத் தலைவர் கேணல் மும்மர் கடாபிக்கு இருந்த அணுவாயுத அபிலாஷையைக் கைவிடச் செய்தமை, காலநிலை மாற்றம் தொடர்பான கியோட்டோ உடன்படிக்கையில் இருந்து வெளியேறியமை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இணைந்துகொள்ள மறுத்தமை என்பன அந்த நடவடிக்கைகளில் அடங்கும்.

ஆனால், தனக்கு அடுத்தபடியாக அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படக்கூடியவருக்கு வெள்ளைமாளிகையை விட்டுச் செல்வதற்கு ஜனாதிபதி புஷ் தயாராகிக் கொண்டிருந்த தருணத்தில், ஒரு தலைப்பட்ச போக்கிற்காக வாஷிங்டன் செலுத்த வேண்டிய விலை அளவு கடந்ததாக மாறிவிட்டது. உலகளாவிய ரீதியில் அமெரிக்காவுக்கு சவால்விடுக்கக்கூடிய ஒரு வல்லாதிக்க நாடாக சீனா தோன்றிவிட்டது. ரஷ்யாவின் கோடிப் புறத்தில் குறிப்பாக, ஜோர்ஜியா, உக்ரேன் போன்ற நாடுகளில் வாஷிங்டன் கூடுதலான அளவுக்கு தலையிடுவதை மாஸ்கோவினால் தடுக்கக்கூடியதாக இருக்கிறது. அணுவாயுத நாடுகள் அணியில் வடகொரியா இணைந்து கொண்டுள்ளது. அமெரிக்காவின் முன்னணி நேச நாட்டில் பாதுகாப்பான பகுதியில் ஒசாமா பின்லேடன் மறைந்து வாழக்கூடியதாக இருந்தது, நிதிச்சந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையில் முன்னென்றுமில்லாத குழப்பநிலை ஏற்பட்டு, அமெரிக்க பொருளாதாரம் தடுமாறத் தொடங்கியது.

ஜோர்ஜ் புஷ்ஷுக்குப் பிறகு ஜனாதிபதியாக வந்த பராக் ஒபாமா தனது நிருவாகத்தின் வெகு ஆரம்பக் கட்டத்திலேயே அடுத்துவரும் நாட்களில் நடக்கப்போவதை நன்கு உணர்ந்து கொண்டார். உறுதியளித்ததன் பிரகாரம் ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் வாபஸை அவர் பூர்த்தி செய்து கொண்டார். சூளுரைத்ததன் பிரகாரம் ஆப்கானிஸ்தானில் இறுதிக் கட்டத்தை ஆரம்பித்திருக்கிறார். சிரியாவில் அசாத் ஆட்சிக்கு எதிராக வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் (நேட்டோ) இராணுவ நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கவும் அவர் மறுத்தார். எகிப்தின் தற்போதைய அரசியற் கொந்தளிப்பில் நேரடியாகத் தலையிடுவதிலிருந்து ஒதுங்கியிருக்கிறார். சிரிய நெருக்கடியில் உறுதியான முறையில் செயற்படுவதற்கு அவரை இணங்கச் செய்வதில் உள்நாட்டு மற்றும் சர்வதேச நெருக்குதல்கள் தவறிவிட்டன. ஈராக் மக்களை 'விடுதலை' செய்வதற்கெனக் கூறிக்கொண்டுதான் அமெரிக்கா அந்த நாட்டில் தலையிட்டது. ஆனால், ஈராக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனித அழிவுகளையும் அவலங்களையும் கண்ணைத் திறந்து பார்ப்பதற்கே அவர் தயங்குகிறார்.

ஆசிய- பசுபிக் பிராந்தியத்தில் சீனாவும் தென்கொரியாவும் தயக்கமேதுமில்லாமல் தன்முனைப்புடன் செயற்படுவதை ஒபாமா நிருவாகம் அமைதியாக பொறுத்துக் கொண்டிருக்கிறது. இது மிகவும் முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். சீனாவுடன் எந்தவொரு மோதலையும் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பதில் அமெரிக்காவுக்கு இருக்கிற நிர்ப்பந்தங்களை விளங்கிக் கொள்வது சிரமமானதல்ல. அமெரிக்காவில் பாரதூரமான நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கும் ஒரு நேரத்தில், அமெரிக்காவின் பெரும் எண்ணிக்கையான திறைசேரி உண்டியல்களை சீனா வாங்கியது என்பதை ஒபாமா நிருவாகத்தினால் அலட்சியம் செய்ய முடியவில்லை. அதேவேளை, சீனா இன்று உலகின் மிகப்பெரிய ஏற்றுமதி நாடாகவும் இறக்குமதி நாடாகவும் பிரதான உற்பத்தி நிலையமாகவும் வளர்ந்திருக்கிறது. அமெரிக்கப் பொருளாதாரத்தின் மீட்சி என்பது (பல்வேறு விடயங்களுக்கு மத்தியில்) சீனப் பொருளாதாரத்தின் செயற்பாட்டிலும் சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பிலுமே தங்கியிருந்தது.

சீனாவின் மறைமுகமான அல்லது நேரடியான ஆதரவை வடகொரியா அனுபவித்தவரை, அந்த நாடு அணுவாயுதத் திட்டம் தொடர்பிலான அமெரிக்க எச்சரிக்கைகளையும் யோசனைகளையும் அலட்சியம் செய்தே வந்தது. தென்கொரியாவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் முன்னெப்போதையும் விட இன்று கூடுதலான அளவுக்கு பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தென்கொரியாவின் கடற்படைக் கப்பலொன்றை வடகொரியா மூழ்கடித்து பல கடற்படைவீரர்களைக் கொன்றபோது கூட, வாஷிங்டன் மிகவும் நிதானமாகவே செயற்படவேண்டியிருந்தது.

ஷென் காகு தீவுகள் தொடர்பாக டோக்கியோவுக்கும் பீக்கிங்கிற்கும் இடையேயான 'சுயாதிபத்திய' சர்ச்சையில் ஒருநிலைப்பாட்டை எடுக்கப்போவதில்லை என்பதை திட்டவட்டமாக ஜப்பானியர்களுக்கு அமெரிக்கா கூறிவிட்டது. சீனாவுடன் இருக்கிற கடல் பிராந்திய சர்ச்சையில் பிலிப்பைன்ஸுக்கு ஆதரவளிக்க அமெரிக்கா எதையும் செய்யவில்லை. பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதாக வெறுமனே கூறிக் கொண்டது. தென் சீனக்கடல் முழுவதன் மீதும் சுயாதிபத்திய உரிமையை சீனா கோரியபோது அமெரிக்கா வெறுமனே கப்பல் 'போக்குவரத்துச் சுதந்திரம்' தொடர்பில் பாரம்பரியமான நிலைப்பாட்டை மாத்திரம் கூறிக்கொண்டது. தென் சீனக் கடல் தகராறுகளுக்கு தீர்வுகளை பல்தரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென்று வாஷிங்டன் யோசனையை முன்வைத்த போது இரு தரப்பு அணுகுமுறையை மாத்திரமே கடைப்பிடிக்கப் போவதாக பெய்ஜிங் உரத்த குரலில் பிரகடனம் செய்தது. இறுதியாக, ஈரானுக்கு எதிராக அமெரிக்கா விதித்த தடைகளும் அந்த நாடு அதன் அணுத் திட்டங்களைக் கைவிடும் நிலையை ஏற்படுத்தத் தவறிவிட்டன. இஸ்லாமிய உலகம் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. உலக பொருளாதாரத்தில் பெரும்பகுதியைச் சூழ்ந்துவிடும் ஆபத்துக் கொண்ட அந்தத் தீயை அணைப்பதற்கு தலைமைத்துவத்தை வழங்க அமெரிக்காவினால் இயலவில்லை. அமெரிக்காவில் இயற்கைவாயு கண்டுபிடிக்கப்பட்டமையும் எண்ணெய் மற்றும் வாயு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பும் சக்தி ஆற்றல் வாய்ந்த தொழில்நுட்பமும் அமெரிக்காவின் சக்தியை (energy) பாதுகாப்பானதாக வைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அமெரிக்கப் பொருளாதாரம் மிகவும் உயர்ந்த அளவுக்கு உலகமயப்பட்டுவிட்டது. அதனால், பாதிக்கப்படாமல் அந்தப் பொருளாதாரம் இருக்க முடியாது.

ஏற்கனவே ஆழமான மந்த நிலைக்குள் சிக்கியிருக்கும் ஐரோப்பிய பொருளாதார சக்தி சந்தையின் உறுதிப்பாடு இல்லாமல் மீட்சிபெற முடியாது. ஐரோப்பிய பொருளாதார மீட்சிக்கு அமெரிக்காவிடம் 'மார்ஷால் திட்டம்' எதுவும் இல்லை. ஐரோப்பியர்களுக்கு உதவக்கூடிய வல்லமையை இப்போது சீனாவே பெற்றிருக்கிறது. போருக்குப் பின்னரான வரலாறு தலைகீழாக மாறியிருக்கிறது. ஒரு துருவ அமைப்பு மரணப்படுக்கையில் இருக்கிறது போன்றே தோன்றுகிறது. ■

***(சிந்தாமணி மகாபத்ரா - டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அமெரிக்க கற்கைகள் திட்டத்தின் தலைவராவார்).***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்திய நாணயத்தின் பெறும
# நம்பிக்கை இழக்கும் முதலீட்




பிரபலமான பொருளியல் நிபுணரான மன்மோகன் சிங் தலைமையிலான இந்திய அரசாங்கம் நாட்டின் பொருளாதார நிலை குறித்து பெரும் கவலை கொண்டதாக இருக்கிறது. 1990களில் பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து இந்தியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவியவர் மன்மோகன் சிங். இன்று நிலைவரங்கள் அவருக்கும் 1997 இல் ஒரு கனவு பட்ஜெட்டை சமர்ப்பித்ததன் மூலம் பெயர்பெற்ற நிதியமைச்சர் பி.சிதம்பரத்திற்கும் சாதகமானதாக இல்லை.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் இந்தியத் தொழிலதிபர்கள் மத்தியில் போதுமானளவிற்கு நம்பிக்கையைத் தோற்றுவிக்க இயலாததாக அரசாங்கம் இருக்கிறது. பொருளாதாரத்தை அரசாங்கம் கையாளுகின்ற முறை குறித்து முதலீட்டாளர்களும் தொழிலதிபர்களும் கடுமையாக விமர்சனங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்திய நாணயத்தின் மதிப்பு தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டு வருகிறது. 3.5 சதவீதத்திற்கும் கூடுதலாக வீழ்ச்சி கண்டு அதன் பெறுமதி ஒரு அமெரிக்க டொலருக்கு எதிராக 68.75 ரூபாவாக இருக்கிறது. இது முன்னென்றும் இல்லாத ஒரு வீழ்ச்சியாகும். இந்திய மத்திய வங்கி சில நடவடிக்கைகளை எடுத்தபோதிலும் நாணயத்தின் தொடர்ச்சியான வீழ்ச்சியை தடுத்து நிறுத்த முடியாமல் இருக்கிறது. இது தொடர்பில் இந்திய அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் கடுமையான கருத்து வேறுபாடுகள் தோன்றியிருக்கின்றன. மத்திய வங்கி ஆளுநரும் நிதியமைச்சரும் வெளிப்படையாகவே முரண்பாடான கருத்துகளை தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.







எம்.பி.வித்தியாதரன்

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் பெரும் கவலை தோன்றியிருப்பதால் இந்திய பொருளாதாரத்திற்கு பெரும் சவால்கள் தோன்றும் ஆபத்து இருக்கிறது. உலக சந்தைகளும் சஞ்சலமானவையாகவே காணப்படுகின்றன. 1995 அக்டோபருக்குப் பிறகு மிகப்பெரியளவில் இந்திய ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைந்திருப்பது இதுவே முதல் தடவையாகும். இவ்வருடம் 20 சதவீதத்திற்கும் அதிகமான வீழ்ச்சியை இந்திய ரூபா கண்டிருக்கிறது. இது ஆசிய நாணயங்கள் மத்தியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி வீழ்ச்சி
# டாளர்கள்




மிகப்பெரிய வீழ்ச்சியாகும். இந்த நிலைவரத்தை எவ்வாறு கையாளுவது குறித்து அரசாங்கமும் மத்திய வங்கியும் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆகஸ்ட் 27 வரை 8 தொடர்களில் ஏறத்தாள 100 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இந்தியப் பங்குகளை விற்பனை செய்துவிட்டார்கள். இவ்வருடத்தின் முதல் அரைக்கூறின் இந்தியாவின் மூலதன வருகைக்கான உறுதியான காரணியாக இந்திய பங்குகள் விளங்கியதால் தற்போதைய நிலைவரம் ஆட்சியாளர்களுக்கு பெரும் கவலையைத் தோற்றுவித்திருக்கிறது.




மேலும் தொடர்ந்து பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழப்பார்களேயானால் இந்தியப் பொருளாதாரம் மீதான நம்பிக்கை மேலும் தாழ்ந்த நிலைக்குச் சென்றுவிடும். அதனால், பாரதூரமான பொருளாதார நெருக்கடி எதிர்நோக்க வேண்டிய அபாயம் தங்களைக் காத்திருப்பதாக வர்த்தகர்கள் அஞ்சுகிறார்கள். இதனால் பங்குகளின் விலையும் நாணயத்தின் பெறுமதியும் மேலும் கீழ் நிலைக்குச் செல்லக்கூடும். ரூபாவை உறுதியானதாக வைத்திருப்பதற்கும் சந்தைகளை நம்ப வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் பெரும் சிரமங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியப் பொருளாதார வளர்ச்சி கடந்த 4 வருட நிலைவரங்களை எடுத்துநோக்கும் போது மிகவும் மந்தமானதாக தற்போது காணப்படுகிறது. இவ்வருடம் ஜனவரி - மார்ச் காலாண்டில் 4.8 சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி ஏப்ரல் - ஜூன் காலாண்டில் 4.4 ஆகக் குறைந்திருக்கிறது. கடந்த 3 மாதங்களில் பங்குச் சந்தையின் வீழ்ச்சி 10 சதவீதத்திற்கும் அதிகமானதாக இருந்தது.

சிரியாவிற்கு எதிராக அமெரிக்கா தலைமையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்ற நிலையில் இந்தியாவின் பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுப்பதில் அரசாங்கம் கண்டுவரும் தோல்வி பதற்றங்களை அதிகரித்திருக்கிறது. ஆசிய சந்தைகளை சிரிய நிலைவரம் தடுமாற வைத்திருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விலையில் உணவுத் தானியங்கள் அரசின் தேர்தல் பரிசு

பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் ஒருவருடத்திற்கும் குறை வான காலமே இருக்கிறது. அரசாங் கம் அதன் சகல வல்லமைகளையும் பயன்படுத்தி தேர்தல் போரை நடத்து வதற்கு தன்னைத் தயார் செய்து கொண்டிருக்கிறது. மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக் குக் கூட்டணி கடந்த தேர்தலில் அதன் துருப்புச் சீட்டாக தேசிய கிராமிய வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டத்தைப் பயன்படுத்தியது. வேலையில்லாதோருக்கு 90 நாட்கள் வேலை வழங்குவதற்கான உறுதி மொழியை இந்த சட்டமூலம் வழங்கி யது. இந்தத் திட்டம் மன்மோகன் சிங் 2ஆவது தடவையாக பிரதமராக வருவதை உறுதிசெய்தது. அமெரிக் காவுடனான அணு உடன்படிக் கையை ஆட்சேபித்துக் கொண்டு ஐக் கிய முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு வழங்கிய இடது சாரிக் கட்சி களும் பாரதிய ஜனதா தலைமையி லான தேசிய ஜனநாயக கூட்டணியும் மன்மோகன் சிங் மீண்டும் பிரதமராக வரமாட்டார் என்றே நம்பிக்கொண்டி ருந்தன. ஆனால், அவர்களின் கணிப் பீடுகள் எல்லாம் பொய்யாகப் போயின.

இப்போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் இன்னொரு திட்டத்தை இதுவரை கொண்டுவந்தி ருக்கிறது. இத்திட்டம் தங்களை மீண் டும் ஒருதடவை ஆட்சியதிகாரத்திற் குக் கொண்டுவருமென்று அந்தக் கூட்டணியின் தலைவர்கள் எதிர் பார்க்கிறார்கள். தேசிய உணவுப்பா துகாப்புத் திட்டம் அதுவாகும். நாட் டின் சனத்தொகையில் ஏறத்தாழ 67 சதவீதமானோருக்கு பெருமளவுக்கு மானிய அடிப்படையிலான உணவுத் தானியங்களை வழங்குவதே திட்டத் தின் நோக்கமாகும். காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை மனதுக் குப் பிடித்தமான இத்திட்டம் அர சாங்கத்தைப் பற்றி மக்கள் மனதில் இருக்கக் கூடிய எண்ணத்தை மாற்றி விடும் என்று காங்கிரஸ் தலைவர்கள் நினைக்கிறார்கள்.


உணவுப் பாதுகாப்புத் திட்டம் தொடர்பில் கடந்த ஜூலை மாதம் அரசாங்கம் ஒரு ஒழுங்கு விதியை பிரகடனம் செய்திருந்தது. இப்போது அந்த ஒழுங்குவிதி உணவுப்பாது காப்புச் சட்டத்தினால் பதிலீடு செய் யப்பட்டிருக்கிறது. பாராளுமன்றக் கூட்டங்கள் பல நாட்களாக எதிர்க்கட் சிகளின் உறுப்பினர்களினால் குழப்பி யடிக்கப்பட்ட போதிலும் கூட அர சாங்கம் லோக் சபாவில் உணவுப் பாதுகாப்புச் சட்டமூலத்தை நீண்ட விவாதத்திற்குப் பிறகு ஒருவாறாக நிறைவேற்றியிருக்கிறது. எதிர்க்கட்சி களினால் பிரயோகிக்கப்பட்ட 150 இற்கும் அதிகமான திருத்தங்கள் இறு தியில் நிராகரிக்கப்பட்டன. இந்தச் சட்டமூலத்தை எதிர்ப்பதற்கு மேற் கொள்ளப்படக்கூடிய எந்தவொரு நகர்வும் தங்களுக்கு அனுகூலமான தாக அமைந்துவிடக்கூடும் என்று அஞ்சிய சகல பிரதான கட்சிகளும் அதை ஆதரித்தன. சட்டமூலத்தை எதிர்ப்பது ஏழைகளுக்கு எதிரான ஒரு நடவடிக்கையாக நோக்கப்படும் என்று கருதிய கட்சிகள் தேர்தலை மனதில் கொண்டு அவற்றின் ஆத ரவை பாராளுமன்றத்தில் வழங்கின.

உணவுப் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது அதன் பயனாளிகளுக்கு மாதாந்தம் 5 கிலோ கிராம் அரிசி, கோதுமை அல்லது வேறு தானியங்கள் கிலோ ஒன்று 3 ரூபா, 2 ரூபா, 1 ரூபாவிற் குக் கிடைக்கும். மத்திய அரசாங்கத் திடம் விதந்துரைக்கப்படுகின்ற பிர மாணங்களின் அடிப்படையில் மாநில அரசுகளினால் இந்தத் திட் டத்தின் பயனாளிகள் இனங்காணப் படுவர்.

இந்தச் சட்டமூலம் மீதான விவா தம் லோக்சபாவில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரை யாற்றிய திருமதி சோனியா காந்தி இந்தியா அதன் பிரஜைகள் சகல ருக்கும் உணவுப்பாதுகாப்பை உத்தர வாதம் செய்யக்கூடிய பொறுப்பை நிறைவேற்றும் ஆற்றலைக்கொண்டி ருக்கிறது என்பதை இத்திட்டம் உல கிற்கு உணர்த்தியிருக்கிறது என்று குறிப்பிட்டார். பட்டினியையும் மந்தபோசாக்கையும் இல்லாதொழிப் பதென்ற காங்கிரஸ் கட்சியின் உறுதி மொழியை இச்சட்டம் நிறைவேற்றி வைத்திருக்கிறது என்றும் அவர் கூறி னார்.

உணவுப் பாதுகாப்புத் திட்டம் உணவு மானியங்களுக்கான வரு டாந்த செலவை 1இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாவாக அதிக ரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் கைது செய்யப்பட்டது பெரிய முன்னேற்றகரமான நடவடிக் கையாக இருந்த போதிலும் பாது காப்புப் பிரிவினர் மெத்தனமாக இரு ந்துவிட முடியாது. நான்கு மாநிலங் களில் படுமோசமான போரை பாது காப்புப்படைகளில் நடத்திக்கொண்டி ருக்கும் மாவோவாத கெரில்லாக்களு டன் இந்திய முஜாஹிதீன் போன்ற பயங்கரவாதக் குழுக்களுக்கு இருக் கக்கூடிய தொடர்புகளின் எல்லை களை அறிந்துகொள்ளக்கூடிய வாய் ப்பை யாசினின் கைது பாதுகாப்புத் துறைக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பயங்கரவாதத்திற்கு எதிரான மிகப்பெரிய வெற்றி



அண்மைக்காலத்தில் இந்தியா விற்கு கிடைத்திருக்கக்கூடிய மிகவும் நல்லதொரு செய்தி என்றால் அது இந்திய முஜாஹிதீன் இயக்கத்தின் சூத்திரதாரியான யாசின் பட்காலின் கைதேயாகும். மத்தியில் உள்ள அர சாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும்

noolaham.org | aavanaham.org

**யாசினின் கைது நான்கு மாநிலங்களில் பாதுகாப்புப்படைகளுடன் படுமோசமான மோதல்களில் ஈடுப்பட்டுக்கொண்டிருக்கும் மாவோயிஸ்ட் கெரில்லாக்களுக்கும் பயங்கரவாத குழுக்களுக்கும் இடையே இருக்கக்கூடிய தொடர்புகள் அம்பலத்திற்கு வரக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பதாக நம்பப்படுகிறது**

மிகப்பெரிய தலையிடியாக இந்திய முஜாஹிதீன் இயக்கம் இருந்து வருகிறது. இதுவே இந்தியாவில் தோன்றிய முதலாவது பிரதான பயங்கரவாதக் குழு என்று கருதப்படுகிறது. கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரியான 31 வயது யாசின் அந்த இயக்கத்தை வழிநடத்திக்கொண்டு வந்தார். விரக்தியடைந்திருக்கும் முஸ்லிம் இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்து யாசின் பயிற்சி அளித்து வந்தார். புனே, மும்பை, ஹைதராபாத், டில்லி மற்றும் பெங்களூர் உட்பட இந்தியாவில் பல பகுதிகளிலும் தொழிற்சாலைகளில் இடம் பெற்று வந்த குண்டுவெடிப்பு பின்னணியில் இந்திய முஜாஹிதீன் இயக்கம் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

யாசினின் முகம் பல கண்காணிப்புக் கமராக்களில் பதிவாகி இருந்தது. ஆனால், பாதுகாப்புப் படைகளினாலும், 12 மாநிலங்களின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுகளினாலும் அவரைக் கைதுசெய்ய முடியாமல் இருந்தது. உத்தரப்பிரதேசம், பீஹார், டில்லி, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காளம் ஆகியனவே அந்த மாநிலங்களாகும். 'குண்டுகளை வெடிக்க வைக்கும் பிசாசு' என்று வர்ணிக்கப்படும் யாசினை 5 வருடங்களாக மேற்கொண்ட கடுமையான தேடுதல் நடவடிக்கைகளின் பிறகு இறுதியாக இந்திய பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யக்கூடியதாக இருந்தது. 2008 ஆம் ஆண்டில் இருந்து இடம் பெற்று வந்த பல குண்டுவெடிப்புகளின் சூத்திரதாரியாகவும் முக்கிய சந்தேக நபராகவும் யாசின் இருந்ததாகவும் கூறப்படுகிறது. பீஹார் பொலிஸாருடன் சேர்ந்து புலனாய்வுப் பிரிவுகள் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கை ஒன்றின் போதே யாசின் கைது செய்யப்பட்டார். ஆகஸ்ட் 28ஆம் திகதி இந்திய - நேபாள எல்லையோரம் அவர் பதுங்கியிருந்ததை படையினர் கண்டுபிடித்தனர். இதற்கு முன்பதாக ஆகஸ்ட் 16ஆம் திகதி இன்னொரு பயங்கர சூத்தரதாரியான அப்துல் கரீம் ருண்டா கைது செய்யப்பட்டார். லஷ்கர் - ஈ-தொய்பா இயக்கத்தின் குண்டு தயாரிப்பு நிபுணர் என்று ருண்டா வர்ணிக்கப்படுகிறார். பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளைப் பொறுத்தவரை சகல முனைகளில் இருந்தும் கடுமையான கண்டனங்களை எதிர்நோக்கி வந்த அரசாங்கத்திற்கு இந்த இரு கைதுகளும் பாரிய ஒரு வெற்றியாக அமைந்திருக்கின்றன.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதில் இருநாடுகளினதும் பிரதமர்கள் அக்கறை கொண்டிருப்பதற்கு மத்தியிலும் உறவுகள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும் நேரத்திலும் இவ்விரு பயங்கரவாதத் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.


இருவரும் இந்திய புலனாய்வுப் பிரிவுகளினாலும் பொலிஸாரினாலும் விசாரிக்கப்பட்டு வருகின்றார்கள். பாகிஸ்தானின் புலனாய்வுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.யினாலும் லஷ்கர் - ஈ-தொய்பா அமைப்பினாலும் பயங்கரவாதம் எவ்வாறு கையாளப்படுகிறது என்பது பற்றிய பல இரகசியங்களை இவர்கள் வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தியாவில் மேற்கொள்ளப்படுகிற பயங்கரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தானில் இருந்து ஆதரிப்பவர்கள் யார், வழிநடத்துபவர்கள் யார் என்ற தகவல்களையும் இவர்கள் வெளியிட்டிருப்பவர்களாக தெரிவிக்கப்படுகிறது. மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு அமைக்கப்பட்ட இந்தியாவின் பிரதான புலன்விசாரணை அமைப்பான தேசிய விசாரணைப் பிரிவு (National Investigation Agency) இவ்விரு பயங்கவாத விசாரணைகள் இனிமேல் பொறுப்பேற்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

யாசின் என்ற அஹமட் சித்திபாப என்ற ஷாரூக், றியாஸ் பட்கால் உடன் சேர்ந்து இந்திய முஜாஹிதீன் இயக்கத்தை ஆரம்பித்தார். இவர்கள் இருவரும் கர்நாடகாவில் பட்கால் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். யாசினை கண்டுபிடித்துத் தந்தால் பத்து இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று தேசிய விசாரணைப் பிரிவு அறிவித்திருந்தது. அவருடன் சேர்ந்து இந்திய முஜாஹிதீன் அமைப்பின் இன்னொரு முக்கிய உறுப்பினரான அசாதுல்லா அக்தார் என்ற ஹாடியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நான்கு மாநிலங்களில் பாதுகாப்புப் படைகளுடன் படுமோசமான மோதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மாவோவாத கெரில்லாக்களுக்கும் பயங்கரவாதக் குழுக்களுக்கும் இடையே இருக்கக் கூடிய தொடர்புகள் குறித்த விபரங்களை பாதுகாப்புத்துறையினர் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை யாசினின் கைது ஏற்படுத்தியிருப்பதாக நம்பப்படுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரிக் அலி வாழ்வும் சிந்தனையும்



அலியின் தந்தையும் தாயும் கம்யூனிஸ்ட்டுகள். தந்தை ஊடகவியலாளரும்கூட. தாயார் ஒரு பெண்ணியவாதி, மனித உரிமைகள் போராளி. அலியின் வளர்ப்பும் வாழ்க்கைப் பின்னணியும் அவரை ஒரு இடதுசாரித் தீவிரவாதியாக உருவாக்கின.

2013 ஆகஸ்ட் 9ஆம் திகதிய புரண்ட்லைன் சஞ்சிகையில் தாரிக் அலியின் நேர்காணல் ஒன்று வெளியிடப்பட்டது. 18 பக்கங்களில் விரியும் இந்த நேர்காணலைச் செய்தவர் சசிகுமார் என்ற ஊடகவியலாளர். தாரிக் அலியின் வாழ்க்கைக் குறிப்புகளையும் சசிகுமார் இக்கட்டுரையில் தருகிறார். தாரிக் அலி தம் இளமைக்கால லண்டன் வாழ்க்கையைப் பற்றி 'வீதிப்போராட்ட ஆண்டுகள்' என்ற நினைவுக்குறிப்பு நூலை எழுதியிருக்கிறார் என்ற செய்தியும் இந்நேர்காணல் கட்டுரையின் மூலமே நான் அறிந்துகொண்டேன். சசிகுமாரின் நேர்காணல் கட்டுரை பற்றிய அறிமுகத்தையும் எனது பிரதிபலிப்புகளையும் தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம். தாரிக் அலியின் வாழ்க்கை பற்றிய குறிப்புகளையும் அவரது பன்முக ஆளுமையையும் முதல் இரண்டு பக்கங்களில் சசிகுமார் தந்துள்ளார்.

ஆங்கிலத்தில் கொஸ்மோ பொலிற்றன் (Cosmopolitan) என்றோர் சொல் உள்ளது. லண்டன் ஒரு கொஸ்மோ பொலிற்றன் நகரம் என்று கூறும் பொழுது உலகின் பலபாகங்களிலும் இருந்து வந்த மக்கள் யாவரும் செறிந்து வாழும் நகரம் என்ற பொருள் உள்ளது. கொஸ்மோ பொலிற்றன் ஆய்வறிவாளன் (Cosmopolitan Intellectual) என்று சொன்னால் இச்சொல்லின் இன்னோர் அர்த்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படும். தேசிய முற்சாய்வுகள், தப்பெண்ணங்களில் இருந்து விடுபட்ட ஒரு ஆய்வறிவாளன்; உலகின் எந்தப் பகுதியையும் தன் வாழிடமாகக் கருதும் மனப்பாங்கு உடைய ஒருவர் என்பதே இத்தொடரின் அர்த்தம். தாரிக் அலி சர்வதேசியத்தை தழுவிக் கொண்டுள்ள கொஸ்மோ பொலிற்றன் ஆய்வறிவாளன் என்ற சித்திரத்தை இந்நேர்காணல் மூலம் பெறமுடிகிறது.

இன்றைய பாகிஸ்தானின் லாகூர் நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட தாரிக் அலி 'உலகப் பிரஜையாக' சர்வதேசியவாதியாக, புரட்சியாளராக மாறிய கதையை சசிகுமார் விபரிக்கிறார். இந்தியா ஒன்றுபட்ட தேசமாக இருந்தபோது பிறந்தவர் தாரிக் அலி. 1960களில் இளைஞரான தாரிக் அலியின் தீவிரவாத அரசியல் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்களால் சகித்துக்கொள்ள முடியாத எல்லையைத் தாண்டிய ஒரு கட்டம் எழுந்தது. அவரைக் கைதுசெய்து சிறையின் உள்ளே தள்ளும் ஆயத்தம் நடைபெற்றுக்கொண்டிருப்பதான செய்தியை இராணுவப் புலனாய்வுப் பிரிவில் வேலை செய்த உறவினர் ஒருவர் அலியின் குடும்பத்தவரின் காதில் போட்டு வைத்தார். தாரிக் அலி இங்கிலாந்திற்கு தப்பி ஓடினார். அங்கே 1963 -65 காலத்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தத்துவம், அரசியல், பொருளாதாரம் ஆகிய பாடங்களைப் படித்துப் பட்டம் பெற்றார். அவர் ஒக்ஸ்போர்ட் மாணவர் மன்றத்தின் தலைவராக 1965 இல் தெரிவு செய்யப்பட்டார். சேகு வராவின் ஆதரவாளர், வியட்நாம் யுத்த எதிர்ப்பாளர், அரசியல் போராளி என்ற பேரும் பிரபலமும் 1960களிலேயே அவருக்குக் கிடைத்துவிட்டன. 1960களில் 'றோலிங் ஸ்ரோண்ஸ்' என்ற பொப்பிசைக் குழுவின் Street Fighting man என்ற பாடலும், பீடில்ஸ் குழுவின் power to the people என்ற பாடலும் பிரபலமும் புகழும் பெற்றிருந்தன. இப்பாடல்களுக்கு ஆதர்சமாக இருந்த ஹீரோ வேறு யாருமல்ல, தாரிக் அலியே தான். றோலிங்ஸ் ரோண் Mick Jagger இன் பாடலைத் தழுவி Street Fighting years (வீதிப்போராட்ட ஆண்டுகள்) என்று தன் சுயசரிதைக்கு தாரிக் அலி தலைப்பிட்டார் என்றும் சசிகுமார் விவரித்துச் செல்கிறார்.

தாரிக் அலியின் அரசியல் தீவிரவாதம் அவரின் பெற்றோர்களிடமிருந்து பெற்றது என்று சசிகுமார் குறிப்பிடுகிறார். நிலமானியப்பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் தாரிக் அலி. அவரின் பாட்டனார் அன்றைய பஞ்சாப் மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தவர். அலியின் தந்தையும் தாயும் கம்யூனிஸ்டுகளாக இருந்தனர். தந்தை ஒரு ஊடகவியலாளர். தாய் பெண்ணியவாதி, மனித உரிமைப் போராளி. அலியின் வளர்ப்பும் அவரது வாழ்க்கைப் பின்னணியும் அவரை ஒரு இடதுசாரித் தீவிரவாதியாக உருவாக்கின.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் நடந்த நிகழ்வொன்றில் பங்கு பற்றுவதற்காக வந்த தாரிக் அலி, ஊர் சுற்றும் பயணம் ஒன்றையும் நிகழ்த்தினாராம். அவரோடு கூடவே சென்ற சசிகுமார் சுவாரஷ்யமான சம்பவம் ஒன்றைப் பற்றி விவரிக்கிறார். இடதுசாரிகள் பொதுவாகவே சமய நம்பிக்கையில்லாதவர்கள். எந்த விடயத்தையும் மதச்சார்பற்ற நோக்கில் பார்க்கும் இயல்புடையவர்கள். மதச்சார்பற்ற நோக்கை ஆழ்ந்த சமய நம்பிக்கை கொண்டுள்ள ஒருவர் கூட பின்பற்ற முடியும். சமய நம்பிக்கை தனிப்பட்ட விடயம். ஆனால், சமய நம்பிக்கையைக் கொண்ட ஒருவர் பொதுவாழ்வில், அரசியல் சமயத்தைக் கலக்காமல் விடுவதே மதச்சார்பின்மை என்பதன் பொருள். வரலாற்றுப் புகழ்மிக்க கொடுங்களூர் என்ற தொல்லியல் ஆய்வு மையத்திற்கு தாரிக் அலி போனார். கொடுங்களூர் கி.பி.629 வரை நீளும் பழமையான வரலாற்றையுடைய கடற்கரைத் துறை. பண்டைய நாளில் அது உறோம், மேற்காசியா ஆகியவற்றுடனான கடல் வர்த்தகத்திற்கான துறையாக விளங்கியது. தொல்லியல் ஆய்வுப் பகுதிக்குள் சேருமான் ஜும்மா பள்ளிவாயலின் அழிபாடுகள் உள்ளன. அப்பள்ளிவாயல் இந்தியாவின் முதலாவது இஸ்லாமியத் தொழுகைத்தலம். அது மட்டுமல்லாமல், உலகின் இரண்டாவது பள்ளிவாயல் என்ற வரலாற்றுப் புகழும் அதற்குண்டு. இன்று அந்த இடத்தில் பிரமாண்டமான பள்ளிவாசல் கட்டிடம் எழுந்து நிற்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்னரே பழைய கட்டிடத்தை உடைத்து புதிய பள்ளிவாயலைக் கட்டத் தொடங்கிவிட்டார்களாம். 1905ஆம் ஆண்டில் இருந்தபடி பழைய பள்ளிவாயலின் தோற்றத்தைக் காட்டும் புகைப்படம் இப்போது புதிய பள்ளிவாயலின் உள் மண்டபத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறது. இன்று சில தூண்கள், நுழைவாயிலின் உடைந்து போன படிக்கட்டுகள் என்று சில அடையாளங்களே எஞ்சியிருக்கின்றன. ஜும்மா பள்ளிவாயலின் நிர்வாகசபைத் தலைவர் டாக்டர் மொகமட் சையித், தாரிக் அலியை வரவேற்க வந்திருந்தார். தன்னை அவர் அறி



**மதச்சார்பற்ற நோக்கை ஆழ்ந்த சமய நம்பிக்கை கொண்ட ஒருவரால் கூட பின்பற்ற முடியும். சமய நம்பிக்கை தனிப்பட்ட விடயம். ஆனால் சமய நம்பிக்கையை கொண்ட ஒருவர் பொது வாழ்வில், அரசியலில் சமயத்தை கலக்காமல் விடுவதே மதச்சார்பின்மை என்பதன் பொருள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் செய்து கொண்டார். சம்பிரதாயபூர்வமான உரையாடல்கள் எதுவும் இன்றி உள்ளே சென்ற விருந்தாளியான தாரிக் அலி சொன்ன முதல் வார்த்தைகள் இவை.

'நீங்கள் வரலாற்றையல்லவா அழித்திருக்கிறீர்கள்' டாக்டர் முகமட்சையைத் அறிவாளி, படித்தவர். அவர் ஒரு அறுவை சிகிச்சை நிபுணரும் கூட. அவர் அடுத்த கணமே தன்னைச் சுதாகரித்துக்கொண்டு 'ஆமாம் பெருந்தவறுதான்' என்று ஒப்புக் கொண்டார். சூழலின் தகிப்பை அவர் தணித்தார். தொலைநோக்கு இல்லாமல் செய்த தவறை நாம் திருத்துகிறோம். பழைய கட்டிடத்தை அதே மாதிரியில் கட்டப்போகிறோம். அமைப்பு வரைபடம் யாவும் தயாரிக்கப்பட்டு விட்டன என்றும் சொன்னார்.

தாரிக் அலி பாரம்பரியச் சொத்து ஒன்றின் அழிவைக் கண்டு அதிர்ச்சியுற்றார். அவர் தன் மனதில் பட்டதை ஒளிவுமறைவு இன்றிக் கூறினார். தாரிக் அலியின் The clash of Fundamentalism (அடிப்படை வாதங்களின் மோதல்) என்ற நூலின் முதலாவது அத்தியாயத்தின் முதலாவது வசனம் 'நான் கடவுள் நம்பிக்கை உடையவனாக ஒருபோதும் இருந்ததில்லை' என்று தொடங்குவதாக சசிகுமார் மேற்கோள் காட்டுகிறார். குறைந்தது ஒரு வாரம்கூட அந்த நம்பிக்கையோடு நான் வாழ்ந்தது கிடையாது. ஐந்து வயது முதல் பத்து வயது வரையான இளமைக் காலத்தில் கூட அப்படி இருந்தது இல்லை. அவரின் பெற்றோரின் கொள்கைகளும், அவர் வாழ்ந்த சூழலும் அவரை சமயப்பற்று அற்றவராகவும் பகுத்தறிவுவாதியாகவும் மாற்றிவிட்டன.

தாரிக் அலி எழுத்தாளர், வரலாற்றாசிரியர், அரசியல் விமர்சகர், நாடகாசிரியர், சினிமா இயக்குநர் என்று பன்முக ஆளுமைமிக்கவர். நியூ லெப்ட் றிவியு (NEW LEFT REVIEW) என்ற புகழ்பெற்ற ஆங்கில ஆய்வு இதழின் ஆசிரியர் குழுவில் நீண்ட நாட்களாகப் பணியாற்றி வருபவர். 1990களிலேயே சனல்-4 இற்காகப் பல விவரணப் படங்களைத் தயாரித்தவர் என்று அவரின் பன்முகப்பட்ட ஆளுமையை எடுத்துக்காட்டும் தகவல்களை சசிகுமார் தருகின்றார்.

## அமெரிக்க ஏகாதிபத்தியம்

அமெரிக்க ஏகாதிபத்தியமும் புதிய உலக ஒழுங்கும் என்ற விடயம் பற்றி சசிகுமாரும், தாரிக் அலியும் உரையாடுகிறார்கள். புதிய உலக ஒழுங்கு என்ற தொடரை The New world disorder என்று தாரிக் அலி மாற்றிப் போடுகிறார். அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு துருவ உலகு (Unipolar World) ஒன்றைக் கட்டமைத்து அதன் அதிபதியாகிவிட்டது. அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கு எவ்வித பங்கமும் வந்துவிடப் போவதில்லை என்கிறார். கருத்தியல் மட்டத்திலும், இராணுவப் பலத்திலும் அமெரிக்கா தன் மேலாண்மையை வைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், பொருளாதாரத்துறையில் சீனா அமெரிக்காவிற்கு மிகப்பெரிய போட்டி நாடாக ஆகிவிட்டது என்று தாரிக் அலி கூறுகிறார்.



அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கு எந்தவித பங்கமும் வந்துவிடப் போவதில்லை. கருத்தியல் மட்டத்திலும் இராணுவ பலத்திலும் அமெரிக்கா அதன் மேலாண்மையை வைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் பொருளாதார துறையில் சீனா அமெரிக்காவிற்கு போட்டி நாடாகி விட்டது. சீனா அமெரிக்காவின் அரசியல் எதிரியல்ல.

சீனா பற்றிக் கூறும் போது தாரிக் அலி ஒரு முக்கியமான விடயத்தைக் கூறுகிறார். சீனா பொருளாதாரத்தில் அமெரிக்காவிற்கு போட்டியாக உள்ளது. ஆனால், முக்கியமான விடயம் சீனா அமெரிக்காவின் Political rival (அரசியல் எதிரி) அல்ல என்கிறார். சீனாவின் அடிப்படை நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவரை சீனா அமெரிக்காவிற்கு எதிராக சுண்டு விரலைக்கூட அசைக்கப் போவதில்லை என்று தாரிக் அலி கூறியிருப்பது இலங்கையர்களைப் பார்த்து அவர் கூறியிருக்கும் ஆலோசனை போன்றே வாசகர்களுக்குத் தோன்றலாம்.

நேர்காணலில் இலங்கையைப் பற்றி ஒருவரி கூட இல்லை என்பதை நான் குறிப்பிட வேண்டும். லத்தின், அமெரிக்கா, எகிப்து, சீனா, ஈராக், ஆப்கானிஸ்தான் என்று உலகின் பிராந்தியங்கள் பலவற்றின் பிரச்சினைகளை நேர்காணலில் அவர் அலசுகிறார். இவையாவும் இலங்கைக்கும் தொடர்புடைய படிப்பினைகளைக் கொண்ட விவகாரங்களே என்பதையே இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அமெரிக்க மேலாண்மை பற்றி அழுத்திக்கூறும் தாரிக் அலி அமெரிக்காவிற்கு எதிரான பெரிய சவால் எதுவும் உலக அரங்கில் இல்லை என்கிறார். Giovanni, Arrighi, விஜே பிரசாத் ரதிகா தேசாய் போன்றோருடைய எழுத்துகளில் அமெரிக்காவின் சரிவு பற்றிச் சொல்லப்பட்டிருப்பதையும், அதன் சரிவும் வீழ்ச்சியும் தவிர்க்க முடியாதன என்று கூறியிருப்பதையும் சுட்டிக்காட்டி U.S. declinism என்ற கருத்தில் தமக்கு உடன்பாடில்லை என்றும் கூறுகிறார்.

அமெரிக்காவிற்கு பதிலடி கிடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்போகிறது. அடிப்படைவாதம் எழுச்சிபெறுகிறது என்றவாறு சார் மஸ் யோன்சன் கூறிய Blow back theory பற்றி உங்கள் clash of fundamentalism நூலில் நீங்களே குறிப் பிட்டிருப்பதாக ஞாபகம் என்று சசிகு மார் வினவுகிறார். தாரிக் அலியின் பதில் இவ்வாறாக அமைகிறது. ஆமாம், சார்மஸ்யோன்சன் கூறியது சரியே. பதிலடி என்பது ஒரு பதில் குறி. தவிர்க்க முடியாத எதிர்வினை. அதனால் என்ன பிரயோசனம்? 9/11 ஒரு அதிர்ச்சி தரும் நிகழ்வு. இரட்டைக் கோபுரங்களில் சிக்கிய நூற்றுக்கணக்கானோர் செத்து மடிந்த னர். பதிலடிகளின் எதிர்மறை விளை வுகளை தாரிக் அலி சுட்டிக்காட்டுகி றார். 9/11 தாக்குதல் ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்கு நல்லதொரு சாட்டாக அமைந்தது. யாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார் த்தால் பயங்கரவாதத் தாக்குதல்கள் அமெரிக்காவின் பலத்தை அதிகரிக் கவே செய்தன என்கிறார் தாரிக் அலி. பழிவாங்கல் நடவடிக்கை கோபம் கொண்ட சிறுகுழுக்களின் வேலை, கசப்புணர்வின் வெளிப்பாடுதான் பழிவாங்கல் வேலை. கோபம் கொண்ட சிறு குழுக்கள் தம்மைத் தற் கொலைப் போராளிகளாக்கிப் பயங்கரவாதச் செயல்களைச் செய்ய வேண்டும். அமெரிக்கா ஒரு பேரரசு. எல்லாப் பேரரசுகளும் இப்படியான ஆபத்துகளை எதிர்கொண்டு சமா ளித்தன. இந்தியா பயங்கரவாதச் சவாலை எதிர்கொள்ளவில்லையா? பயங்கரவாதம் பேரரசுகளை நிலை குலையச் செய்வதில்லை. அரசின் அடக்குமுறை இயந்திரத்தை மேலும் பலமடையச் செய்வதற்கே அது உத வுகிறது என்கிறார் தாரிக் அலி.

### சீனாவும் ஐக்கிய அமெரிக்காவும்

சீனா அமெரிக்காவின் அரசியல் எதிரியல்ல என்று தாரிக் அலி கூறியி ருப்பதை மேலே குறிப்பிட்டேன். சீனாவின் பொருளாதாரப்பலம் உலக அரங்கில் அதற்குத் தனித்துவமான நிலையை வழங்கியுள்ளது. ஐரோப் பிய யூனியன், ஜப்பான் என்பன அமெரிக்காவை எதிர்க்கும் சக்தியற் றவை. ஏனெனில், அவற்றிடம் இறைமை இல்லை. இந்த நோக்கில் சீனாதான் உலகின் ஒரே ஒரு இறை மையுள்ள நாடு. ஏனென்றால், சீனாவை மட்டும் அமெரிக்காவால் கட்டுப்படுத்த முடியவில்லை. இன் னும் சில இறைமையுள்ள நாடுகள் இருக்கலாம் என்று கூறும் தாரிக் அலி, அமெரிக்காவுக்கும் சீனாவுக் கும் பரஸ்பர தங்கியிருத்தல் உள்ளது. அமெரிக்கா பொருளாதார ரீதியில் தனித்து இயங்கும் கொள்கையை (Economic Isolationism) கடைப் பிடித்தால் சீனாவின் மீது அது பெரும் பாதிப்பை உண்டாக்கும் என்று கூறு கிறார். சீனா தன்னால் தனித்து இயங்க முடியும் என்ற கருத்தோடு செயற்படு கின்றது. ஆபிரிக்கா, தென்னமெரி க்கா, இந்தியா ஆகியவற்றுடன் அது வர்த்தகத்தை விரிவாக்கிச் செல்கிறது. ஆதலால் முரண்பாடுகள் உள்ளன என்பது வெளிப்படை. முரண்பாடு களை அமெரிக்காவும் சீனாவும் பேச் சுவார்த்தை மூலம் தீர்வு செய்து கொள்வதல்லாமல் சண்டையைத் தொடக்கப்போவதில்லை என்றும் தாரிக் அலி கூறுகிறார்.

### கருத்தியல் பிளவு?

சீனா முதலாளித்துவப் பாதையில் வெகுதூரம் முன்னேறிச் சென்றுவிட் டது. சீன சமூகத்திற்குள்ளே கருத்தி யல் பிளவு (Ideological divide) உள்ளது. என்பதற்கான எந்தவித அடையாளமும் கிடையாது. சீன அறி வாளிகளுடன் பேசிப்பார்த்தால் இந்த உண்மை தெரியவரும். அவர் கள் அமெரிக்காவையும் மேற்குல கையும் கண்களை மூடிக்கொண்டு பின்பற்றவும் பாவனை செய்யவும் விரும்புகிறார்கள். சீனர்கள் உருவாக் கிவரும் புதிய நகரங்களின் கட்டடப் பாணியைப் பார்த்தால் உண்மை புரி யும். கருத்தியல் மட்டத்தில் போலச் செய்வதும், பாவனையும் எல்லை மீறிப் போய்விட்டன. சீன அரசு இயந்திரத்தோடு தொடர்புடைய அறி வாளிகளுக்கு மில்டன் பிரீட்மன், எவ்.ஏ.ஹெய்க் (F.A.HAYEK) ஆகி யோர் தான் வழிபாட்டிற்குரிய தத்து வஞானிகள். ஆகவே சீனாவிற்குள் கருத்தியல் சவால் மேற்கிளம்புவது சாத்தியமில்லை என்ற முடிவுக்கே தாரிக் அலி வருகின்றார்.

சீனாவிற்கு இன்று தேவைப்படும் கருத்தியல் ஒன்று உள்ளதென்றால், அது சீனத் தேசியவாதம் தான் என்று தாரிக் அலி கூறுகிறார். சீனத் தேசிய வாதம் சீனர்களை முட்டாள்தனமான வேலைகளில் ஈடுபடத் தூண்டுகிறது. நோபல் பரிசு பெற்ற லியு ஷியா போவை (Liuxiabo) கைது செய்த தன் மூலம் சீனா அவரை ஒரு தியாகி ஆக்கிவிட்டது. ஆனால், யார் இந்த லியு ஷியாபோ? சீனாவை ஏகாதி பத்தியம் ஆக்கிரமிப்புச் செய்தால் அது நன்மைக்கே என்று ஒருமுறை கூறியவர்தான் இந்த லியு ஷியாபோ. அவரைத் தியாகியாக்கியது மட்டு மன்றி நோபல் பரிசுக்குப்

(62ஆம் பக்கம் பார்க்க...)

**கூட்டிக்கழித்துப் பார்த்தால் பயங்கர வாதத் தாக்குதல் கள் அமெரிக்கா வின் பலத்தை அதிகரிக்கவே செய்தன. பயங்கர வாதம் பேரரசுகளை நிலைகுலையச் செய்வ தில்லை. அரசின் அடக்குமுறை இயந் திரத்தை மேலும் பலமடையச் செய்வ தற்கே அது உதவி யிருக்கிறது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகமும் கல்வியும்

மலையக தமிழ்ச்சமூகம் அறிவுசார் உலகில் வாழ்வதற்கு தங்களைத் தயார் படுத்தவும் சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்தவும் நல்லதொரு உபாயம்

# தேவைப்பாடு, சவால்கள், சாத்தியப்பாடுகள்

## மலையக பல்கலைக்கழகம்



இரா.ரமேஷ்

மலையக பல்கலைக்கழகம் தொடர்பான கருத்தாடல்கள் கடந்த காலங்களில் மிகத் தீவிரமாக முன்வைக்கப்பட்டமை யாவரும் அறிந்த விடயமாகும். பல்கலைக்கழக பின்புலத்தைக் கொண்ட புத்திஜீவிகள் மாத்திரமன்றி அதற்கப்பால் மலையக சமூகத்தைச் சேர்ந்த கல்விமான்களும் இது தொடர்பான சாதகமான கருத்துகளை தர்க்க ரீதியாக முன்வைத்ததுடன், அவை மலையக பல்கலைக்கழகம் தொடர்பான கருத்தாடலை பெரிதும் சக்திப்படுத்தின. இருந்தபோதிலும் ஒரு சில எதிர்மறையான கருத்துகளும்முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் இக்கட்டுரையானது சமகாலத்தில் மலையக பல்கலைக்கழகத்தின் தேவையினையும் அதனை தாபிப்பதில் காணப்படும் சாத்தியப்பாடுகளையும் சவால்களையும் முன்வைப்பதாக அமைகின்றது. உண்மையில் மீண்டும் மலையக பல்கலைக்கழகம் தொடர்பானசிந்தனைகளைகட்டியெழுப்புவது காலத்தின் தேவை என்பதனை உணர்த்தும் வகையிலேயே இக்கட்டுரை அமைந்துள்ளது.

காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களை அடைந்து கொள்ள முடியாத சமூகம் வளர்ச்சியடைவது கடினமாகும். ஒரு சமூகம் வளர்ச்சியடைய வேண்டுமாயின் காலத்துக்குக்காலம் அதன் வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்கள் ஏற்படுவது இன்றியமையாதது என்பது சமூக விருத்தியில் அக்கறைகொள்ளும் ஆய்வாளர்களின், அறிஞர்களின் கருத்தாகும். அவ்வாறாயின் ஒரு சமூகத்தில் இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துவது யார்? என்ற கேள்வி எழுகின்றது. உண்மையில் அச்சமூகத்திலிருந்து கல்விச் செயற்பாடுகளின் மூலம் மேலெழுச்சி பெற்று வருகின்ற ஆற்றல் மிகு கல்விமான்கள், சிறந்த சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரசியல் தலைவர்கள், புலைமையாளர்கள் என அறிவினால் உந்தப்பட்ட பல்வேறு பங்குதாரர்களைக் குறிப்பிட முடியும். இத்தகைய சமூக முன்னோடிகளை உருவாக்குவதில் உயர்தர கல்வி நிலையமொன்றின் பங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியமையாததாகும். உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது இத்தகைய அறிவியலாளர்களை உருவாக்குவதில் உயர்கல்வி நிறுவனங்கள், விசேடமாக பல்கலைக்கழகக் கல்வி நிறுவனங்கள் மாபெரும் பங்காற்றியுள்ளன என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

தற்காலத்தில் ஒரு சமூகத்தின் அபிவிருத்தியை அளவிடுவதில் உயர் கல்வியில் அச்சமூகம் அடைந்துள்ள ஏற்றங்கள் பிரதானமான ஒரு குறிகாட்டியாகபயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக உலக வங்கியின் ஆய்வு முடிவுகளின்படி சமூக அபிவிருத்தியை தீர்மானிப்பதில் உயர்கல்வி முதலிடம் பெறுவதாக அறிய முடிகின்றது. இவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது மலையக சமூகத்தின் குறைவிருத்திக்கும், பின்னடைவுக்கும் உயர்கல்வித் துறையில் அவர்களின் மிக குறைந்த பங்களிப்பும், அவர்களுக்கென தனியான உயர்கல்வி நிறுவனமொன்றின்மையும் பெரியளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை உணர முடிகிறது. அண்மைக்காலங்களில் மலையக சமூகத்துக்கான தனியான பல்கலைக்கழகம் ஒன்றுக்கான அவசியம் மற்றும் தேவை குறித்த கருத்தாடல்கள் இடம் பெற்று வருகின்றமை, அது தொடர்பான பொது கலந்துரையாடல்களையும், ஆய்வுகளையும் தூண்டியுள்ளன என்பதில் தவறில்லை.

உண்மையில், வரலாற்று ரீதியாகவே பெருந்தோட்ட மக்கள் முன் பள்ளிக்கல்வி, பாடசாலைக்கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, ஆசிரியர் கல்வி, தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஒப்பீட்டளவில் பின்தங்கிய சமூகமாகவே காணப்படுகின்றனர். கடந்த ஒரு தசாப்த காலமாக மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களின் விளைவாக ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியில் குறிப்பிடத்தக்க ஏற்றங்களை காணமுடிந்துள்ளது. ஆயினும் தேசிய ரீதியான குறிகாட்டிகளுடன் ஒப்பிடும்போது பெரிதும் வேறுபடுவதுடன், பெரிய

## சமூக அபிவிருத்தியை தீர்மானிப்பதில் உயர் கல்வி முதலிடம் பெறுவதாக உலக வங்கியின் ஆய்வுகளின் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது

தொரு இடைவெளியினையும் காட்டுகின்றன.

இப்பின்புலத்திலேயே இம்மக்களின் பல்கலைக்கழக கல்விநிலை குறித்தும் ஆய்வுசெய்ய வேண்டியுள்ளது. இன்றைய சுமார் 80,000 பேரைக் கொண்ட பல்கலைக்கழக கல்விமுறையில் மலையக மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 400-500 என மதிப்பிடப்பட்டுள்ளது. வருடாந்தம் சுமார் 100 - 150 பேர்வரையிலேயே பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்றனர். அதில் அதிகமானோர் கலை மற்றும் வர்த்தக துறைகளுக்கே உள்வாங்கப்படுகின்றார்கள். ஏனைய பீடங்களில் இவர்களின் விகிதாசாரம் பெரிதும் குறைவாகும். 15 இலட்சம் மக்கள் வாழும் ஒரு சமூகத்தில் இருந்து ஆண்டுக்கு 100-150 பேர்வரையில் பல்கலைக் கழகம் செல்வது எதிர் மறையான தொரு குறிகாட்டியாகும். சனத் தொகை அடிப்படையில் பார்க்கும் போது சுமார் 5000 பேர் வரையில் சகல பல்கலைக்கழகத்திலும் பயில வேண்டும். மறுபுறம் ஆண்டுக்கு 1000க்கு மேற்பட்டோர் அனுமதி பெற வேண்டும். இக்கருத்தினை மலையக பல்கலைக்கழகம் தொடர்பாகவும் அதன் அவசியம் குறித்தும் நீண்டகாலமாக வாதிட்டு வரும் கல்வியியல் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களும் குறிப்பிட்டு வருகின்றார். இவ்விலக்கினை அடைவதற்கு மலையகப் பல்கலைக்கழகம் சிறந்த உபாயமாக அமையும் என்பது மலையக புத்திஜீவிகளின் வாதமாகும்.

எவ்வாறாயினும், பாடசாலைக் கல்வி முறையில் காணப்பட்ட, காணப்படுகின்ற நீடித்த பிரச்சினைகள் பௌதீக, மனித வளப்பற்றாக்குறை, மலையக அரசியல் தலைவர்களின் குறைந்த அக்கறை, அரச கல்விக் கொள்கையின் பாதகத் தன்மை, ஸ்திரமற்ற ஆட்சி, நாடற்ற சமூகம் என்ற அடையாளம் முன்னிறுத்தப்படல் ஆகிய பல காரணிகள் பெருந்தோட்ட மக்கள் பல்கலைக் கழக கல்வியில் உயர் சாதனைகளை அடைவதனை பாரிய அளவில் மட்டுப்படுத்தியுள்ளமை வருந்தத்தக்க விடயமாகும்.

எவ்வாறாயினும் அண்மைக்காலங்களில் பல்கலைக்கழக கல்வியில் ஒரு சில ஏற்றங்களைக் காணமுடிவது குறிப்பிட வேண்டிய அம்சமாகும். இன்று தென்பகுதி தவிர்ந்த மலையக மக்கள் வாழும் ஏனைய மாவட்டங்களில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு மலையக மாணவர்கள் அனுமதி பெறுகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஆயினும் நுவரெலியா மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பெரியளவிலான எண்ணிக்கையில் அனுமதி பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். சுருங்கக்கூறின் மலையக மக்கள் உயர் கல்வியில் பெரியளவில் பின்னடைந்திருப்பதற்கு இம்மக்களுக்கென ஒரு உயர் கல்வி நிறுவனமின்மை முக்கிய காரணம் என்பது மனங்கொள்ள வேண்டிய விடயமாகும். இப்பின்புலத்திலேயே மலையக பல்கலைக் கழகம் குறித்த கருத்துப்பகிர்வும் முன் மொழிவுகளும் வெளியாகி வருகின்றன. உண்மையில் மலையகத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமையுமாயின் அது அம்மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிலும் எழுச்சியிலும் பெரிதும் தாக்கம் செலுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்று மலையகத்தில் ஆயிரக்கணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான மாணவர்கள் உயர்நிலை மற்றும் சாதாரண பரீட்சைக்கு தோற்றுகின்றனர். அவர்களில் பெருந்தொகையினர் உயர் கல்விக்கோ அல்லது பல்கலைக்கழகத்திற்கோ சித்தியடைவதில்லை. இந்நிலையில் அவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்பும் பெரிதும் மட்டுப்படுத்தப்படுகின்றது. வெளிமாவட்ட பல்கலைக்கழகங்களில் இணைந்து கற்கை நெறிகளை பின்பற்றும் வழிமுறைகள், அதற்கான வாய்ப்பு, பொருளாதார நிலை, அமைவிடம் ஆகியன அவர்களின் கல்வி ஆர்வத்தினை பெரிதும் தடுத்து விடுகின்றன. இத்தகைய நிலையில் ஒரு பல்கலைக்கழகம் இப் பிரதேசத்தில் அமையப்பெறுமாயின் அது அவர்களின் கல்வி செயற்பாட்டிற்கு பெரிதும் ஒளியூட்டுவதாக அமையும். ஒரு பல்கலைக்கழகம் வெறுமனே உள்வாரி மாணவர்களுக்கு மாத்திரம் போதிக்கும் பணியினை மேற்கொள்வதில்லை. அந்நிலைமாறி இன்று பல்வேறுபட்ட கற்கை நெறிகளை வேறுபட்ட தொழில், கல்வித் தரம், வயது, கொண்டவர்களை இலக்காகக் கொண்டு மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக பல விரிவாக்கல் கற்கை நெறிகளை (Extension courses and services) நடத்தி வருகின்றன.

இத்தகைய பணியினை மலையக பல்கலைக்கழகமும் மேற்கொள்ள முடியும். தொழிற் சந்தையினை மையமாகக் கொண்டு அறிவுசார் உலகின் தேவைகளை நோக்காகக் கொண்டு கற்கை நெறிகளை நடத்தலாம். ஆங்கிலம், வணிகம், மனித வள முகாமை, சமூக அபிவிருத்தி, மனித உரிமைகள் ஆகிய கற்கை நெறிகளை நடத்தலாம். மலையக பல்கலைக்கழகம் சில முக்கிய துறைகளைக் கொண்டு இயங்க முடியும். குறிப்பாக மலையக மக்களின் வரலாறு, பாரம்பரியம், கலை, இலக்கியம் ஆகியவற்றை ஒரு துறையாகவும், இம்மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலையினையொரு துறையாகவும், இதனுடன் பெருந்தோட்ட தேயிலைத் துறையுடன் தொடர்புபடுத்தி பெருந்தோட்ட முகாமைத்துவம், விவசாயம், பெருந்தோட்ட கைத்தொழில், பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் ஆகியவற்றுடன் வேறும் பல துறைகளைக் கொண்டு செயலாற்ற முடியும். ஆரம்பத்தில் கலை, வணிகம் மற்றும் விவசாயம் ஆகிய பீடங்களைக் கொண்டியங்க முடியும். பல பிராந்திய பல்கலைக்கழகங்கள் ஆரம்பத்தில் மேற்கூறிய பீடங்களையே கொண்டிருந்தன. கால ஓட்டத்திலேயே பல பீடங்களைக் கொண்ட உயர்கல்வி நிறுவனமாக எழுச்சி பெற்றன.

இதற்கு அப்பால் வெளிவாரி பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இப்பல்கலைக் கழகம் பெரியதொரு வாய்ப்பாக அமையும். இன்று பேராதனை பல்கலைக்கழகத்தில் சுமார் 25,435 பேர் வரையில் வெளிவாரி மாணவர்களாக பதிவு செய்வதாக அறிய முடிகின்றது. இதில் சுமார் 500-600 பேர் வரையில் மலையகத்தைச் சேர்ந்தவர்களாகும். ஆயினும் இவர்கள் அத்தனைபேரும் பரீட்சைக்குத் தோற்றுவதில்லை. இதில் அரைவாசி எண்ணிக்கையினர் பரீட்சைக்குத் தோற்றுவதுடன், அதில் ஒரு பகுதியினர் மாத்திரமே சித்தியடைகின்றனர். அதற்கு பல காரணிகள் உண்டு. வெளிவாரி கற்கை நெறியின் அமைவிடம், தரமான வெளிவாரி வகுப்புகள் இன்மை, சரியான வழி காட்டல்கள், ஆலோசனைகள் இன்மை, ஆசிரியர் வளமின்மை, பல்கலைக்கழக சமூகத்துடனான குறைந்த தொடர்பு, ஊக்கமூட்டல் இன்மை, பட்டப்படிப்பின் பெறுமதி தெரியாமை, வெளிவாரியாக பட்டம் பெற்ற ஆசிரியர்கள் வெளிவாரி மாணவர்களுக்கான வகுப்புகளை நடத்துதல் (தரமான முறையில் கற்பித்தல் இடம்பெறுவது குறைவு), குறித்த பாடங்களில் சிறப்புப் பட்டம் பெற்றவர்களின் பற்றாக்குறை, இதனால் தரமான முறையில் போதனைகளை நடத்த முடியாமை, பொருத்தமான கல்விச் சூழல் இன்மை, போக்குவரத்து போன்ற பல காரணிகள் அதனுள் செல்வாக்குச் செலுத்துகின்றன. மலையக பல்கலைக்கழகம் அமைக்கப்படுமாயின் இப்பிரச்சினைகள் பெரியளவில் தீர்த்து வைக்கப்படும். மறுபுறமாக இன்று மலையக ஆசிரியர்கள் பலர் உயர்தர தகுதியுடன் பணியாற்றுகின்றார்கள்.

**சுமார் 80,000 பேரைக்கொண்ட பல்கலைக்கழக கல்வி முறையில் மலையக மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 400 - 500 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வருடாந்தம் 100 - 150 பேர் வரையிலேயே பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்றனர். இதில் அதிகமானோர் கலை, வர்த்தகத் துறைகளுக்கே உள்வாங்கப்படுகிறார்கள்**

இத்தகையதொரு பல்கலைக்கழகம் காணப்படுமாயின் வார இறுதி நாட்களில், பொது விடுமுறை நாட்கள் மற்றும் பாடசாலை தவணை விடுமுறைக் காலங்களில் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி மற்றும் ஏனைய ஆசிரியர் வான்மை விருத்தியை நோக்காகக் கொண்ட பாடங்களையும் நடத்த முடியும்.

இன்று பெருந்தொகையான ஆசிரியர்கள் கல்வி டிப்ளோமா, கல்வியியல் இளமாணிப்பட்டப் படிப்புகளை மேற்கொள்ள முடியாதுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு ஏலவே கூறிய காரணிகள் பெரிதும் பொருந்தும். உண்மையில் மலையகப் பல்கலைக்கழகம் அத்தகைய கற்கை நெறிகளை ஆரம்பிக்கலாம். அதன் மூலம் சிறந்த கல்வியாளர்களையும், ஆற்றல்மிகு ஆசிரியர் சமூகத்தையும் உருவாக்கலாம். இவற்றை விட ஆளுமை விருத்தி, தலைமைத்துவம், கிராமிய அபிவிருத்தி, வங்கியியல்,கணக்கியல் தொடர் கல்வி, தொலைக்கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, ஜனநாயகம், நல்லாட்சி, ஆற்றல் அபிவிருத்தி போன்ற குறுங்கால பயிற்சிகளை சமூகத்தின் பல மட்டத்தினரையும் இலக்காகக் கொண்டு நடாத்தலாம். அதன் மூலம் இச்சமூகத்தைச் சார்ந்த பல்துறையினரும் தமது செயலாற்றங்களை வளர்த்துக்கொள்ள முடியும். ஒரு பல்கலைக்கழகமானது குறுங்கால மற்றும் நீண்ட கால கற்கைகளை, பயிற்சிகளை நடத்த முடியும். அப்பணிகளை இப்பல்கலைக்கழகமும் மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்று பெருந்தகையான மலையக முன்பள்ளி ஆசிரியர்கள் எத்தகைய பயிற்சிகளும் இல்லாத நிலையிலேயே பணியாற்றி வருகின்றனர். இது அப்பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியினையும் ஏதோ ஒரு வகையில் பாதித்து விடுகின்றது. ஆகையால் முன்பள்ளி ஆசிரியர்களை நோக்காகக் கொண்டு பாட விதானம் ஒன்றினை விருத்தி செய்து நடைமுறைப்படுத்த முடியும். இக்கற்கை நெறியினை வார இறுதி நாட்களில் மேற்கொள்ளலாம். இதனை சான்றிதள் கற்கை, டிப்ளோமா கற்கை என்ற அடிப்படையில் நடத்தலாம். இது தரமான முன்பள்ளி ஆசிரியர்களை, திறமைமிக்க பிள்ளைகளை உருவாக்க வழிசமைக்கும். மறுபுறமாக இது பாடசாலைக் கல்வியில் அப்பிள்ளைகள் பிரகாசிக்கவும் ஆர்வத்துடன் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடவும், சிறந்த சித்திகளைப் பெறவும் வித்திடும். இத்தகைய கற்கைநெறியொன்றினை இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கலை, முகாமைத்துவ, வணிகத்துறைகளில் பல்வேறுபட்ட கற்கை நெறிகளை குறுங்கால, நீண்ட கால அடிப்படையில் நடாத்த முடியும். இவை தொழில்துறையில் ஈடுபட்டிருப்போரின் வான்மையினை விருத்தி செய்யவும், தம்துறையில் நிபுணத்துவம், பதவியுயர்வு பெறுவதற்கும் பெரிதும் புத்தூக்கமளிக்கும்.

இங்கு பிறிதொரு எதிர்மறையான வாதத்தினையும் முன்வைக்க முடியும். அதாவது கலை, முகாமைத்துவ வணிகத்துறைகளில் பட்டங்களைப் பெறுதல், கற்கை நெறிகளை நடத்துதல் ஆகியவற்றின் மூலம் ஒரு சமூகம் ஏற்றம் காண முடியுமா? என்பதே அவ்வாதமாகும். இவ்வாதம் பெரிதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும். தற்காலத்தில் ஏற்பட்டுவரும் உயர் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, அறிவுசார் சமூகத்தை, அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கிய பயணம் மற்றும் உயர் கல்வியின் தீவிர வளர்ச்சி, விரிவாக்கம் ஆகியன இவ் வாதத்தினை பெரியளவில் நியாயப் படுத்துவதாக அமைகின்றன. ஆயினும் மலையகச் சமூகமானது உயர் கல்வியில் ஒரு சத விகிதத்தைக்கூட அடையமுடியாத நிலையில் பெரியளவில் பின்னடைந்துள்ளது. ஆகவே இச் சமூகத்தின் உயர் கல்வியின் நிலையை அளவுசார் அடிப்படையில் மேம்படுத்தவும், தேசிய ரீதியான உயர் கல்வி முறையோடு போட்டியிடச் செய்வதற்கும் இம்மலையக பல்கலைக்கழகம் பெரிதும் புத்தூக்கம் அளிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் பிராந்திய ரீதியாகத் தாபிக்கப்பட்ட பல பல்கலைக்கழகங்களில் ஆரம்பத்தில் கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகளைக் கொண்டே இயங்கின என்பது மனங்கொள்ள வேண்டிய விடயமாகும்.

எல்லாவற்றிற்கும் அப்பால் ஒரு பல்கலைக்கழகமானது அது அமைந்திருக்கும் பிரதேசத்தின் அபிவிருத்தியில் தாக்கரமான பங்களிப்பை வழங்க முடியும். இன்று உலகளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்கள் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான உயர்தர ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், அதன் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்கும், அது அமைந்துள்ள பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் பங்காற்றி வருகின்றன. ஆகவே மலையக பல்கலைக் கழகம் அமையுமாயின் அது அப் பிரதேச தொழில், ஏனைய நிறுவனங்களுக்கு அவசியமான ஆய்வுகளை மேற்கொண்டு, அதன் மூலம் அவற்றின் தரத்தினையும், உற்பத்தித் திறன், சமூக ஏற்புடைமை ஆகியவற்றினையும் அதிகரிக்கச் செய்ய முடியும். குறிப்பாக தொழிலாளர் நடத்தை, தொழில்நுட்ப பிரயோகம், தொழிற்சந்தை, நுகர்வோர் நடத்தை, சமூக தாக்கம் போன்ற பல விடயங்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். இதனை விட நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்க முடியும். அத்துடன் புதிய கண்டுபிடிப்புகளையும் மேற்கொள்ள முடியும். மறுபுறமாக இத்தகைய பல்கலைக்கழகமானது பெருந்தோட்டத்துறை, பெருந்தோட்ட முகாமைத்துவம், தொழிலாளர் நடத்தை மாற்றம், தேயிலைத்துறையின் நிலைத்தல் தன்மை மற்றும் நவீன தொழில்நுட்ப பிரயோகம், தொழிலாளர்-முகாமை உறவு, விவசாயம் தொடர்பான ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ள முடியும். இவற்றுக்கப்பால் நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் பல பிரிவுகளில் தமது தகைமைகளுக்கு ஏற்ப தொழில் வாய்ப்புகளைப் பெற முடியும். குறிப்பாக உயர்தரம் வரையில் கற்றோரும் மற்றும் பட்டப் படிப்பினை முடித்தோரும் தொழில் வாய்ப்பினைப் பெற முடியும். மறுபுறம் போதிய கல்வித்தேர்ச்சியில்லாத பலரும் தொழில் வாய்ப்புகளைப் பெறலாம். உண்மையில் இது தனிநபர் வருமானம் மற்றும் முன்னேற்றத்தில் தாக்கம் செலுத்தும் அதே வேளை, ஒட்டுமொத்த மலையகச் சமூகத்தின் அபிவிருத்தியிலும் நேர் மறையான தாக்கத்தினை ஏற்படுத்தும். இலங்கையின் பிராந்திய பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலைக் கல்வி முறையில் காணப்படுகின்ற நீடித்த பிரச்சினைகள், பௌதீக, மனிதவளப் பற்றாக்குறை, மலையக அரசியல் தலைவர்களின் அக்கறையின்மை, அரச கல்விக்கொள் கையில் பாதகத்தன்மை ஆகிய பல காரணிகள் பெருந்தோட்ட மக்கள் பல்கலைக்கழக கல்வியில் உயர் சாதனைகளை அடைவதை பாரிய அளவில் மட்டுப்படுத்துகின்றன**

கலைக்கழகங்கள் இத்தகைய பங்களிப்பினை வழங்கியுள்ளமை வெளிப்படையான யதார்த்தமாகும்.

மேலும் மலையக மக்களின் வரலாறு, கலை, கலாசாரம், பொருளாதார நிலை, மனித உரிமைகள் தொடர்பான உயர்தர ஆய்வுகளை மேற்கொள்ளவும், அவற்றை சர்வதேச கொடை நிறுவனங்களுக்கு கையளித்து நிதி உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். அதன் மூலம் இப்பல்கலைக் கழகத்தை பல துறைகளைக் கொண்ட ஒரு உயர் கல்வி நிறுவனமாக்கலாம். இன்று உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன பல்கலைக்கழக கல்வித் தரத்தை விருத்தி செய்வதற்காக பாரியளவில் பங்காற்றி வருகின்றன. அத்தகைய நன்மைகளை இப்பல்கலைக்கழகத்திற்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

இவற்றினைவிட சிறந்த கல்விச் சூழல் ஒன்றினை உருவாக்கவும், மலையக மாணவர்கள் மத்தியில் பல்கலைக்கழக கல்வியின் மீது பெரியளவிலான ஆர்வத்தினைத் தூண்டவும் வழிசெய்யும். காரணம் இன்று சில மலையக மாணவர்களுக்கு தெற்கு, வடகிழக்கு, வடமத்திய ஆகிய மாகாணங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கிடைக்கின்றன. ஒரு சிலர் இத்தகைய பல்கலைக்கழகங்களுக்கு செல்வதில்லை. மறுபுறமாக வேறும் சிலர் இடையில் தமது கல்வியை நிறுத்திக் கொள்கின்றார்கள். இதற்கு பல காரணங்கள் உண்டு. அந்த வகையில் இப்பல்கலைக்கழகங்களில் காணப்படும் மொழி, கலாசார வேறுபாடுகள், பொருளாதார நிலை, நாட்டின் போர்ச்சூழல், வாழ்க்கை முறை, மொழி, கலாசார வேறுபாடுகள், இனத்துவ பாகுபாடுகள், தமிழ் மொழியில் கற்கும் வாய்ப்பின்மை, பல்கலைக்கழக நிர்வாகத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகள் ஆகிய காரணிகளைக் குறிப்பிட முடியும். ஆகவே புதிய பல்கலைக்கழகம் இத்தகைய பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக அமையும். ஆயினும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியிலும் சிலர் தமது கல்விச் செயற்பாடுகளை நிறைவுசெய்கின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும். இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில், மலையகப் பல்கலைக்கழகம் பன்முகத்தன்மையினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதாகும். வெறுமனே மலையக மாணவர்கள் மாத்திரமன்றி வேறு இனத்தைச் சார்ந்த மாணவர்களையும் உள்வாங்கியதாக அமைய வேண்டும். இது இப்பல்கலைக்கழகம் தேசிய அந்தஸ்தினையும், காலஓட்டத்தில் சர்வதேச அங்கீகாரத்தையும் பெறுவதற்கும் பெரிதும் வழி சமைக்கும். நடைமுறையில் பிராந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்க கையாளப்படும் அனுமதிக் கொள்கைகளுக்கு அமைய இப்பல்கலைக்கழகத்திற்கும் மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி வெறுமனே மலையக மாணவர்கள் மாத்திரம் கற்கும் பல்கலைக்கழகமாக காணப்படுமாயின், அது பாடசாலைக் கல்வியில் காணப்படும் இன, மத ரீதியான வேறுபாடுகளுக்கு ஒப்பானதாக அமைந்து விடும். மறுபுறமாக தேசிய ஏற்புடைமை, அரசாங்க வள ஒதுக்கீடு மற்றும் கல்வித்தரம் ஆகியன கேள்விக்குட்படுத்தப்படும். ஆகையால் இது ஒரு தேசிய பல்கலைக்கழகமாக அமைய வேண்டும் என்பது பெரிதும் வலியுறுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

பல்கலைக்கழகம் என்பது பல்கலைக்கழகத்தில் பயில்வோருக்கும், அதனைச் சூழ உள்ளோருக்கும் அறிவினை வழங்கும் ஓர் உயர்தர கல்வி நிறுவனமாகும். மறுபுறமாக காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கிச் செயற்படும் இயக்கத்தன்மை கொண்ட நிறுவனமாகும். ஆகவே மலையக பல்கலைக்கழகம் அமைக்கப்படுமாயின் அது இச்சமூகத்தின் மேல்நோக்கிய நகர்விற்கும், மேலெழுச்சிக்கும், கல்வித்துறையில் பிரமாண்டமான ஏற்றங்களைக் காண்பதற்கும் பெரிதும் புத்தாக்கமளிக்கும் என்பதில் ஐயமில்லை. மலையக பல்கலைக்கழகத்திற்கான கோரிக்கையை அரசாங்கத்திடம் முன்வைத்து தொடர்ந்து பேரம் பேச வேண்டும். அதற்கு சட்ட வடிவத்தினை கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அது குறித்த கருத்தாடல்களை சகல மட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டும். அது ஒரு *செயன்முறையாக இடம்பெற வேண்டும்*. அரசியல்வாதிகள், சிவில் அமைப்புகள், புத்தி ஜீவிகள் மற்றும் சாதாரண மக்களிடமும் அதற்கான அதிகரித்த கோரிக்கைகளும் பிரேரணைகளும் எழ வேண்டும். அது மலையகத்திற்கான பல்கலைக்கழகத்தின் அவசியத்தை பெரிதும் நியாயப்படுத்துவதாக அமையும். சிவில் சமூகத்தின் வகிபங்கு இதனுள் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும். அதற்காக ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையினையும் சரியான பொறிமுறையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையும் உருவாக்க வேண்டும். இது மலையக புத்திஜீவிகளின் கடப்பாடாகும். கடந்த காலங்களில் இக்கோரிக்கை அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட போதும், அது பல காரணங்களால் பலிக்கவில்லை. அவற்றை ஒரு படிப்பினையாகக் கொண்டு செயலாற்ற வேண்டும். சுருங்கக்கூறின் இதன் வெற்றியானது அரசியல் தலைமைகளின் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. காரணம் இது அரசாங்க கொள்கையாக்கத்துடன் தொடர்புடைய விடயமாகும்.

இங்கு பிறிதொரு விடயத்தினை குறிப்பிடுவது பெரிதும் பொருத்தமாக அமையும். 1991ஆம் ஆண்டு சப்ரகமுவ பல்கலைக்கழகம் ஒரு முழுமையான தேசியப் பல்கலைக்கழகமாக பரிணமிக்கவில்லை. அது இணைந்த பல்கலைக்கழக கல்லூரி (Affiliated University College) என்ற பெயரிலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் காலஓட்டத்தில் இது ஒரு முழுமையான, தேசிய பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றமை குறிப்பிடவேண்டிய விடயமாகும். இதற்கு பொருளியல் துறை மூத்த பேராசிரியர் தயாநந்த சோமசுந்தர அவர்களின் (சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்தவர்) அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும் பெரிதும் பங்காற்றியதுடன், அதற்கப்பால் இப்பிரதேச மக்களின் பங்களிப்பும், இம் மாகாணத்தைச் சார்ந்த அரசியல் தலைமைகளின் தூரநோக்குடன் கூடிய சிந்தனையும், செயற்பாடுகளும் இதன் வெற்றிக்கு பெரிதும் பங்காற்றின என்பது யாவரும் மனங்கொள்ள வேண்டிய விடயமாகும். இன்று இப்பல்கலைக்கழகத்தில் இப்பிரதேசத்தின் தேவையினை நோக்காகக் கொண்டு பல கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் இப்பிரதேச மக்களும் பல வழிகளில் நன்மையடைந்து வருகின்றனர். மறுபுறமாக சமூக, விஞ்ஞான கற்கைகள் அனைத்தும் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் போதிக்கப்படுவதுடன், பல பிறநாட்டு மொழிகளைப் போதிக்கின்ற சிறந்த மொழித்துறையொன்று காணப்படுகின்றமை பிறிதொரு சிறப்பம்சமாகும். இவ்வாறே ஏனைய பிராந்தியப் பல்கலைக்கழகங்களும் வளர்ச்சி கண்டன. ஆகையால் இவற்றினை நல்லதொரு படிப்பினையாக கொண்டு இது விடயத்தில் செயலாற்ற வேண்டும்.

எல்லாவற்றுக்கும் அப்பால் மலையக மக்கள் பாடசாலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, உயர்கல்வி, ஆங்கிலக்கல்வி, வெளிநாட்டுக்கல்வி என்பவற்றில் பின்தங்கியவர்கள் என்ற எண்ணப்பாங்கில் அரசாங்கம் இத்தகையதொரு பல்கலைக்கழகத்தை அமைக்க வேண்டும். வேறு வகையில் கூறுவதாயின் நாட்டின் பொருளாதாரத்திற்கு நூற்றாண்டு காலமாக பங்காற்றும் இம் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகத்தை அமைப்பதில் தவறில்லை. இது காலத்தின் தேவையாகும். அரசாங்கம் பல்கலைக்கழக கல்விக்கு இன்று சுமார் 2008 கோடி ரூபாய் வரையில் செலவு செய்கின்றது. குறிப்பாக ஒரு பல்கலைக்கழக மாணவனுக்கு ஆண்டுக்கு 203,011 ரூபாவினை செலவு செய்கின்றது. இவ்வாறு அதிகரித்த பணத்தொகையினை செலவிடுவதற்கு இம்மக்களின் உழைப்பின் மூலம் கிடைக்கும் வருமானமும் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பது வெளிப்படையான யதார்த்தமாகும். இவ்யதார்த்தத்தினை அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

சுருங்கக்கூறின் கல்வித் துறையில் தேசிய ரீதியாக போட்டியிடவும், தேசிய கல்வித் தராதரங்களை எட்டிப் பிடிக்கவும் இம்மலையக பல்கலைக் கழகம் வழிகோலும். அவ்வாறு அன்றில் இம்மக்களுக்கும் நாட்டின் ஏனைய சமூகத்தவர்களுக்குமான அறிவு இடைவெளி பெரிதும் அதிகரிக்கும். பல்கலைக்கழக கல்வியில் இச்சமூகம் ஏற்றம் காணும் போது அது உயர் வருமானத்தையும், அபிவிருத்தியையும் எட்டிப்பிடிப்பதற்கு ஏதோ ஒரு வகையில் துணைபுரியும். காரணம் ஒரு தனிநபரின் கல்வி செயலாற்றங்களுக்கும் வருமானத்துக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதாகும். குறிப்பாக, அறிவினை மூலதனமாகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தியை எய்தும் உலக முறைமையில் இன்று நாம் வாழ்ந்து வருகின்றோம். அறிவால் உந்தப்படும் பொருளாதார முறைமையையே நாம் இன்று உலகில் காண்கின்றோம். இதனை அறிவுசார் பொருளாதாரம் எனக் குறிப்பிடுகின்றார்கள். இன்று உடல், உழைப்பு, முதல், முயற்சி ஆகிய உற்பத்திக் காரணிகள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு அறிவு பிரதான உற்பத்திக் காரணியாக மாற்றம் கண்டுள்ள உலகில் வாழ்கின்றோம். அத்துடன் உலக நாடுகளை கைத்தொழில், விவசாய நாடுகள், அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எனப் பாகுபடுத்திய காலம் கடந்து இன்று உலக நாடுகளை அறிவார்ந்த நாடுகள், அறியாமையால் பீடிக்கப்பட்டுள்ள நாடுகள் என வகைப்படுத்தப் படுகின்றன. இத்தகைய விடயங்களைஅவதானிக்கும்போதுமலையக சமூகம் இன்னும் 20ஆம் நூற்றாண்டில் இருந்து முழுமையாக மீட்சி பெறவில்லையென எண்ணத்தோணுகின்றது.

உண்மையில் மலையக சமூகம் அறிவுசார் உலகில் வாழ தம்மை தயார்படுத்தவும், சமூக அசைவியக்கத்தினை ஏற்படுத்தவும் மலையக பல்கலைக்கழகம் நல்லதொரு உபாயமாக அமையும் என்பது எமக்குள்ள ஆழமான நம்பிக்கையாகும். அத்துடன் இது உயர் கல்வித் தராதரங்களை கொண்ட சமூகமாக இச்சமூகத்தை மாற்றவும் வழிகோலும் என்பதுடன், சகல துறைகளிலும் உயர்தரமான பட்டதாரிகளை, தொழில் நிபுணர்களை உருவாக்கவும், அதன்மூலம் சமூக அபிவிருத்தியை அடைந்து கொள்ளவும் புத்தூக்கமளிக்கும் என்பதில் ஐயமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மெட்ராஸ் கபேயின் கதை ஜெயின் கமிஷன் கரு

காசிநாதன்

'தமிழர் நெஞ்சில் சூட்டுக் கோலைத் திணிக்கும் நிகழ்வுகள் தொடர்கின்றன'- இப்படித்தான் 'மெட்ராஸ் கபே' படம் தமிழகத்தில் ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி திரையிடப்படுவதாக அறிவிக்கப்பட்டதும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பொங்கியெழுந்தார். அது மட்டுமன்றி, 'ஈழத்தில் நடத்திய படுகொலைகளை மறைப்பதற்கு சிங்கள அரசும், செய்த துரோகத்தைத் தொடர்ந்து கொண்டு இருக்கும் இந்திய அரசும் திட்டமிட்டு இந்தியாவில் உள்ள ஒரு திரைப்பட நிறுவனத்தைப் பயன்படுத்தித் தயாரித்த படம்தான் 'மெட்ராஸ் கபே' என்று அனல் கக்கினார். ஏன் ''என்ன கொழுப்பு இருந்தால், நம்மை யார் என்ன கேட்க முடியும் என்ற திமிர் இருந்தால் 'மெட்ராஸ் கபே' என்று பெயர் வைப்பான்? தமிழன் என்ன சொரணை கெட்டவனா?'' என்றே வைகோ ஆவேசப்பட்டார்.

இந்த ஆவேசம் அனைத்து தமிழர் அமைப்புகளிடமும் பற்றிக் கொண்டது. படத்தை எதிர்த்து முதலில் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் அறிக்கை விட்டாலும், உணர்ச்சிப் பிழம்பாக வெளிவந்தது வைகோவின் அறிக்கைதான். 'நாம் தமிழர் கட்சி' சீமானும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸும் படத்தை தடை செய்ய வேண்டும் என்றார்கள். தி.மு.க. தலைவர் கருணாநிதியோ, 'படத்தை தமிழக அரசு ஆராய்ந்து பார்த்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார். ஆனால், வைகோ மட்டும் தான் 'ஜோன் ஏபிரகாம் கேரளத்து மாநிலத்தைச் சேர்ந்தவர். இலங்கை அதிபர் ராஜபக்ஷவை இருமுறை இந்தப் படம் எடுப்பதற்காக ரகசியமாக சந்தித்து இருக்கிறார். இந்திய அரசும், சிங்கள அரசும் நிதியுதவி செய்து இந்தப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது' என்றெல்லாம் திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார். அறிக்கைப் போர் ஒருபுறம் நடந்து கொண்டிருந்தாலும், படத்தை வெளியிட வேண்டும் என்ற முனைப்புடன் தீவிர நடவடிக்கைகளை படத் தயாரிப்பாளர் தரப்பு மேற்கொண்டது.

கமலின் 'விஸ்வரூபம்', விஜய் நடித்த 'துப்பாக்கி' போன்ற படங்களில் கடைப்பிடிக்கப்பட்ட யுக்தியை 'மெட்ராஸ் கபே' தயாரிப்பாளர்களும் கையாண்டார்கள். தமிழர் அமைப்புகளுக்கு (சீமான் உட்பட) ஆகஸ்ட் 18ஆம் திகதி சென்னை அண்ணாசாலையில் உள்ள 'கிரஸ்ட் டிஜிட்டல்' என்ற பிரிவியூவ் தியேட்டரில் 'மெட்ராஸ் கபே' படத்தைப் போட்டுக் காட்டினார்கள். 'விஸ்வரூபம்' படம் பார்த்த பிறகு இஸ்லாமிய அமைப்புகள் எப்படி கொந்தளித்து எழுந்தனவோ அதேபோல் இந்தப் படம் பார்த்த பிறகும் டென்ஷன் அடைந்தன. படத்தைப் பார்த்து விட்டு வெளியே வந்த சீமான், 'அது தான் 10 பி.எம்.' என்று தெரிந்து விட்டதே. பிறகு அந்தக் கொலையை தடுத்திருக்க வேண்டியதுதானே?. விடுதலைப் புலிகளை கொச்சைப்படுத்தும் படம் இது' என்று கொமெண்ட் அடித்தாராம். அது மட்டுமன்றி, இப் படத்தைப் போட்டுக் காட்டியது' 'ஆட்சேபத்திற்குரிய காட்சிகள் இருந்தால் நீக்கலாம்' என்ற யோசனையின் அடிப்படையில்தான்! ஆனால் படம் பார்த்த பிறகு பதறிப்போனார்கள் தமிழர் அமைப்பினர். 'இந்தப் படத்தில் காட்சிகளை நீக்க முடியாது. அப்படியே ஒட்டுமொத்த படத்தையும் தான் குப்பைத் தொட்டியில் தூக்கிப் போட வேண்டும்' என்று குரல் கொடுத்தார்கள்.

தமிழர் அமைப்புகளின் ஆவேசத்தைப் பார்த்த திரைப்படத் தயாரிப்பாளர்கள் உடனே மாற்று வழியை ஆராய்ந்தார்கள். அது காங்கிரஸ் கட்சியின் ஆதரவை இந்தப் படத்திற்குப் பெறுவது. உடனே ஆகஸ்ட் 21ஆம் திகதி சென்னையில் தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு எதிரில் உள்ள 'ஸ்ரீ தேவி' பிரிவியூவ் தியேட்டரில் தமிழக இளைஞர் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழர் அமைப்புகளின் எதிர்ப்பின் பின்னணி

நிர்வாகிகளுக்கு முதலில் படத்தைப் போட்டுக் காண்பித்தார்கள். இளைஞர் காங்கிரஸ் தலைவர் விஜய் இளஞ்செழியன் போன்றவர்கள் எல்லாம் படத்தைப் பார்த்தார்கள். அவர்களுக்குப் படம் பிடித்துப் போய் விட்டது. 'இந்தப் படத்தில் என்ன தவறு இருக்கிறது? படம் திரையிடப்பட வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார்கள். இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் 'மெட்ராஸ் கபே' படத்தை வெளியிடக்கூடாது என்று வழக்குத் தொடரப்பட்டு, அந்த வழக்கின் மீதான விசாரணை மீண்டும் செப்டெம்பர் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

எதிர்ப்புகள் அணிவகுத்து வர, திரைப்படத் தயாரிப்பாளரோ எப்படியும் தமிழகத்தில் படத்தை ரிலீஸ் பண்ணுவோம் என்று பிடிவாதமாக இருந்தார். மாநிலத்தில் உள்ள 60-க்கும் மேற்பட்ட தியேட்டர்களில் இந்தப் படம் ஏற்கனவே புக் பண்ணப்பட்டு விட்டது. சென்னை மாநகரப் பொலிஸ் கமிஷனர் ஜோர்ஜைச் சந்தித்த இவர்கள், 'எங்கள் படம் ரிலீஸ் ஆவதற்கு போதிய பாதுகாப்புக் கொடுங்கள்' என்று கேட்டார்கள். அறுபது தியேட்டர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பது எப்படி? என்பது பொலிஸ் தரப்பின் கேள்வியாக இருந்தது. இந்தப் பின்னணியில் 'இந்திய அரசு தடை செய்ய வேண்டும்', 'தமிழக அரசு அனுமதிக்கக் கூடாது', 'தியேட்டர்கள் வெளியிடக் கூடாது' என்றெல்லாம் கிளம்பிய அனலில் காவல்துறை யோசிக்கத் தொடங்கி விட்டது. 'படத்தை வெளியிட அனுமதித்தால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைவரும்' என்ற எண்ணம் காவல்துறை அதிகாரிகளுக்கு மேலோங்கியது. இதனால் 'பொலிஸ் அனுமதி கிடைக்காது' என்ற எண்ணமும் தியேட்டர் அதிபர்களின் மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் ஏற்பட்டது. திரைப்படம் வெளியிடும் திரையரங்குகள் முன்பு போராடுவோம் என்ற அறிவிப்பு மெட்ராஸ் கபே படத்தை ரிலீஸ் பண்ண முடியாத சூழ்நிலையை உருவாக்கியது. அப்போதும் கூட திரைப் படத் தயாரிப்பாளர்கள் அயர்ந்து விடவில்லை. 'நீங்கள் படத்தை வெளியிடுங்கள். உங்களுக்கு பாதுகாப்பு பெற்றுத்தர வேண்டியது எங்கள் பொறுப்பு' என்று நம்பிக்கையூட்டினார்கள்.

இதை நம்பிய சில திரையரங்கு உரிமையாளர்கள் ஒன்லைனில் டிக்கெட்டுகளை விற்பனை செய்தார்கள். ஆனால், தமிழர் அமைப்புகள் ரகசியமாக பல தியேட்டர்களில் டிக்கெட்டுகளை புக் செய்தார்கள். எதற்காக? 'போராட்டங்களை மீறி படம் வெளியிடப்பட்டால் அந்த தியேட்டருக்குள் புகுந்து ஸ்கிரீனைக் கிழிக்க வேண்டும்' என்பதுதான் அவர்களின் ரகசியத் திட்டம் என்பதை மாநில உளவுத்துறை புரிந்து கொண்டது. அதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட சட்டம் ஒழுங்கு அதிகாரிகள் உஷார் படுத்தப்பட்டார்கள். 'இடியப்பச் சிக்கலில் மாட்டிக்கொண்டு விட்டோம்' என்று எண்ணிய தயாரிப்பாளர் தரப்பு மீண்டும் தியேட்டர் அதிபர்களிடம் ஓடினார்கள். 'கன்வின்ஸ்' செய்து பார்த்தார்கள். ஆனால் தமிழ்நாடு திரையரங்குகளின் தலைவர் அபிராமி ராமநாதன், 'பொலிஸ் பாதுகாப்பு இல்லை என்றால் படத்தை வெளியிடாதீர்கள். தியேட்டர்களுக்கு ஏதாவது சேதாரம் வந்தால் யார் கொடுப்பார்கள்' என்று நிலைமையை விளக்கிக் கூறி விட்டார். நீதிமன்றம், பொலிஸ், திரையரங்கு உரிமையாளர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் கைவிட்ட நிலையில், 'மெட்ராஸ் கபே' படத்தை வெளியிடுவதற்கு தயங்கினார்கள். பட ரிலீஸும் தடைப்பட்டது.

'மெட்ராஸ் கபே' படத்திற்கு இவ்வளவு எதிர்ப்புக் கிளம்ப காரணம் என்ன? 'இந்தியில்' வெளிவந்த இப்படம் தமிழில் 'டப்பிங்' செய்யப்பட்டதன் ரகசியம்தான் இதற்கு முதல் காரணம். படத்தை டைரக்ட் செய்தவர் சுஜித் சர்க்கார். படத்தில் முக்கிய ரோலில் நடித்தவர்கள் ஜோன் ஆப்ரகாம். இவர்தான் இந்திய றோ அதிகாரியாக நடித்திருக்கிறார். படத்தில் மேஜர் விக்ரம் சிங்காக வருகிறார். இன்னொருவர் அஜய் ரத்னம்! (சென்னையில் இருக்கும் இவரது வீட்டிற்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருக்கிறது) இந்த நடிகர் 'அண்ணா பாஸ்கரன்' என்ற ரோலில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் சாயலில் நடிக்கிறார். இது தவிர பிரிட்டிஷ் பத்திரிகையாளராக ஒரு பெண்மணியும், ஐ.பி. டைரக்டர் ரோலில் வேறு ஒருவரும் வருகிறார். இப்படி பல கதாபாத்திரங்கள்! ''இந்தப்படத்தின் கரு 2006-ஆம் வரு

# 'தமிழர்கள் பார்க்க வேண்டிய



'மெட்ராஸ் கபே' படம் பார்த்த தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவர் விஜய் இளஞ்செழியனிடம் பேசினோம். இதோ அவரது மினி பேட்டி:

''மெட்ராஸ் கபே படம் பற்றிய சர்ச்சை கிளம்பியதும் நாங்கள் அந்தப் படத்தைப் பார்க்க முடிவு செய்தோம். இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் முப்பது நாற்பது பேர் அந்தப் படத்தைப் பார்த்தோம். நானும் தமிழன். என்னிடம் நீங்கள் யார்? என்று கேட்டால் முதலில் தமிழன் என்பேன். பிறகு காங்கிரஸ்காரன் என்பேன். அதனால் படம் பார்க்க உள்ளே தியேட்டருக்குள் நுழைந்த போதே என் நிர்வாகிகளிடம், 'இந்தப் படத்தை நீங்கள் காங்கிரஸ்காரனாக பார்க்கக் கூடாது. ஒரு தமிழனாகப் பாருங்கள். ஏதாவது இழிவு படுத்தும் காட்சிகள் இருந்தால் சொல்லுங்கள்' என்று கூறிவிட்டுத்தான் தியேட்டரின் இருக்கைகளில் அமர்ந்தேன். படம் முழுவதையும் பார்த்தோம். எந்த ஒரு இடத்திலும் தமிழர்களை இழிவுபடுத்தவில்லை. தமிழர்களை புண்படுத்தும் காட்சிகளும் இல்லை. உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட படம் அது. அவ்வளவுதான்.

நான் 'நாம் தமிழர் கட்சி' தலைவர் சீமானின் பேட்டியை அதற்கு முன்பு படித்து விட்டுத்தான் படம் பார்க்கப் போனேன். சீமான் படத்தைப் பார்த்து விட்டு வெளியே வந்ததும், 'இந்தப்படம் கேரளாக்காரர்கள் நல்லவர்கள். தமிழர்கள் கெட்டவர்கள் என்ற தொனியில் இருக்கிறது' என்று பேட்டி கொடுத்திருந்தார். ஆனால், படத்தில் அப்படிச் சித்தரிக்கும் காட்சிகள் அறவே இல்லை. அப்படத்தின் ஹீரோ கேரளாவைச் சேர்ந்தவர். அவர் கேரளாவில் இருந்து இலங்கை போகும் காட்சி மட்டும் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு இப்படி அபாண்டமாக பழி சுமத்தியிருக்கிறார் சீமான். அந்தப் படத்தை தமிழகத்தில் ஓடவிடக் கூடாது என்பதை மனதில் வைத்து இப்படி பேட்டி கொடுத்தது போல் இருந்தது. ஹீரோ பெயரே விக்ரம் சிங். அவர் எப்படி கேரளாக்காரராக இருக்க முடியும். என்னைப் பொறுத்தமட்டில் அந்தப் படத்தில் ஹீரோவைத் தெரியாது. தயாரிப்பாளரைத் தெரியாது. ஆகவே அவர்களுக்காக இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. அந்தப் படத்தில் மறைந்த தலைவர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட உண்மைச் சம்பவத்தை விளக்கியிருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படம்'

றார்கள். அவரைக் கொன்றது யார் என்பது உங்களுக்கும் தெரியும். உலகத்திற்கும் தெரியும். அப்படியொரு விஷடம் தடை செய்யப்பட்ட போது 'கருத்துச் சுதந்திரம்' வேண்டும் என்றார்கள். இப்போது 'மெட்ராஸ் கபே' படத்திற்கும் அந்த கருத்துச் சுதந்திரம் பொருந்தும் அல்லவா? ஏன் அந்த கருத்துச் சுதந்திரம் பற்றி தமிழகத்தில் உள்ள தலைவர்கள் பேச மறுக்கிறார்கள்?

மறைந்த தலைவர் ராஜீவ்காந்தி இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல எப்படி உழைத்தார் என்பது அனைவருக்கும் தெரியும். அது பற்றிய காட்சிகளைச் சொல்லி, அந்தத் தலைவரைக் கொன்ற உண்மைச் சம்பவத்தை 'மெட்ராஸ் கபே' விளக்குகிறது. படத்திற்காக அது கதை போல் இருந்தாலும் நடைபெற்றது உண்மைச் சம்பவம்தானே! இந்தப்படம் வட இந்தியாவில் மெகா ஹிட் ஆகிவிட்டது. இது தமிழகத்தில் வெளியிடப்பட்டால், காங்கிரஸ் மீதுள்ள எண்ணம் மக்களுக்கு நிச்சயம் மாறும். ஒரு மிகப்பெரிய தலைவனை தமிழ் மண்ணில் எப்படி இழந்தோம் என்பதும் மக்களுக்குப் புரியும். ஆகவே என்னைப் பொறுத்தமட்டில் எல்லாத் தமிழர்களும் பார்க்க வேண்டிய படம் 'மெட்ராஸ் கபே'. இதை நான் காங்கிரஸ்காரனாகச் சொல்லவில்லை. ஒரு பச்சைத் தமிழனாகச் சொல்கிறேன்! ■

டமே உருவாகி விட்டதாகச் சொல்கிறார்கள். முதலில் 'ஜப்னா' (அதாவது யாழ்ப்பாணம்) என்றே படத்திற்கு பெயர் வைக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் மத்தியில் உள்ள காங்கிரஸ் ஆட்சியின் ஆதரவுடன் இலங்கை இராணுவம் வென்ற பிறகு தலைப்பை மாற்றினார்கள். இந்தப்படத்திற்கு 'மெட்ராஸ் கபே' என்று பெயர் வைத்தார்கள்'' என்கிறார் தமிழர் அமைப்பு நிர்வாகி ஒருவர்.

படம் முழுக்க முழுக்க ஈழப் போராளிகளைத் தவறான கண்ணோட்டத்தில் சித்தரிக்கும் விதமாகவே இருக்கிறது என்று கூறும் படத்தைப் பார்த்த பொலிஸ் அதிகாரி ஒருவர், படத்தில் றோ அதிகாரியாக நடிப்பவர் குடிபோதையில் தேவாலயத்திற்குள் வந்து அங்கிருக்கும் பாதிரியாரைச் சந்திப்பார். அந்தப் பாதிரியார் 'எதற்காக இப்படிக் குடித்து விட்டு தேவாலயத்திற்குள் வருகிறாய்?' என்று கேட்டு சத்தம் போடுவார். அதற்கு அந்த றோ அதிகாரி, 'ஒரு தலைவரை காப்பாற்றத் தவ றி விட்டேன்' என்று அழுது புலம்புவார். இப்படித்தான் இந்தக் கதை ஆரம்பிக்கிறது. அங்கு தொடங்கி படம் முழுவதும் அந்த 'றோ அதிகாரி' தான் கதை சொல்லிக் கொண்டிருப்பார். படுகொலைக்கு முன்பு இரு வருடங்களில் நடைபெற்ற சம்பவங்களை முதலில் படத்தில் சொல்லுகிறார்கள். அதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மூன்றாகப் பிளவுபடுத்தும் காட்சிகள் இருக்கின்றன. அதில் ஒரு பிரிவின் தலைவரை ஆயுதம் வாங்க வெளிநாட்டுக்கு அனுப்புவார்கள். அப்படி வாங்கிய ஆயுதம் கப்பலில் வந்த போது இதைத் தெரிந்து கொண்ட இன்னொரு க்ரூப் (பிரபாகரன் சாயலில் இருப்பவர்) அந்த ஆயுதக்கப்பலை அழித்து ஒழிப்பார். இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தம், அங்கே அந்த நாடு படையை அனுப்புவது போன்ற காட்சிகள் இடம் பெற்றுள்ளன. அதைத்தொடர்ந்து வரும் கசப்புணர்வுகள், "Celebrate Deepavali X PM" என்று வந்த செய்தியை டிகோட் பண்ணி அது முன்னாள் பிரதமர் கொலையை தடுத்து நிறுத்தத் தவறியது உள்ளிட்ட காட்சிகள் இருக்கின்றன. இதில் "X PM" என்பதை முன்னாள் பிரதமர் என்றும், அந்தப் பிரதமர் 10 மணிக்குக் கொலை செய்யப்பட்டார் என்பது போலவும் 'டபுள் மீனிங்' வசனமாக இருக்கிறது. படம் முழுக்க விடுதலைப் புலிகளின் போராட்டம், அந்த இயக்கத்திற்குள் ஏற்பட்ட பிளவுகள், இந்தியாவிற்கும்- இலங்கைக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம், இந்திய அமைதி காக்கும் படை இலங்கை சென்றது, ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்படுவது போன்ற சம்பவங்களை 'வேறு வடிவில்' நினைவுபடுத்தும் காட்சிகளாகவே இருக்கின்றன'' என்றார்.

இந்த 'Celebrate Deepavali X pm' என்று வந்ததாகச் சொல்லப்படும் செய்தி ராஜீவ் படுகொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜெயின் கமிஷனில் உள்ள வாசகங்களை அடிப்படையாகக் கொண்டது என்று கூறும் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர், 'ராஜீவ் படுகொலை பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட ஜெயின் கமிஷனில் பாகம்-4இல் உள்ள அத்தியாயம்-1 மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 'நேவல் இன்டெர்ஸெப்ட்ஸ் ஒப் 1988' என்ற தலைப்பில் உள்ள அந்த அத்தியாயத்தில் ராஜீவ் காந்தி தமிழகம் வரும் போது குண்டு மாலை போடுங்கள் (garland him with bullets when he visits Tamilnadu on 18.6.88) என்ற வாசகம் அடங்கிய ரகசியச் செய்தி பற்றி இருக்கிறது. இந்தச் செய்தியை இந்தியாவின் டைரக்டர் ஜெனரல் ஒப் மிலிட்டெரி இன்டெலிஜென்ஸ் இடை மறித்து அதை இந்திய உளவுத்துறையிடம் கொடுப்பார். அப்போது இந்திய உளவுத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறைகளின் கவனமின்மையால் அந்தச் செய்தி மீது எப்படி நடவடிக்கை எடுக்கத் தவறினார்கள்? அதன் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் ராஜீவ் கொலையைத் தடுத்திருக்கலாம் என்பது போன்ற விடயங்கள் விளக்கப்பட்டிருக்கும். அப்போது மத்திய உள்நாட்டுப் பாதுகாப்பு இணை அமைச்சராக இருந்த ப. சிதம்பரம் (தற்போது நிதியமைச்சர்), பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த கே.சி.பந்த், பாதுகாப்புத்துறைச் செயலாளராக

(65ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வில் ஒற்றைத்துணை வாழ்வு

அறிவியல் களரி



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

'அன்றிலும் பேடும் போல' இணையாக வாழ்ந்தார்கள் என்கிறோம். சீதைக்கு இராமன், நளனும் தமயந்தியும், சிவனும் உமையும் எனக் கொண்டாடுகின்றோம். ஒருவனுக்கு ஒருத்தி என்பதை மனித இனத்தின் மாண்பு என எண்ணுகிறோம்.

ஆனால், கோவலனுக்கு கண்ணகியும் மாதவியும் இருக்கவே செய்தார்கள். பாஞ்சாலிக்கு ஐந்து கணவர்கள். குந்தவி சூரியனுடன் இணங்கிய பின் பாண்டுவிற்கும் குழந்தைகள் பெற்றெடுத்தாள். ஆங்காங்கே பிறழ்வுகள் இருந்தபோதும் மனித இனத்தில் ஒருவனுக்கு ஒருத்தி அவர்களது பிள்ளைகள் எனக் குடும்பமாக வாழ்வது வழக்கமாகிவிட்டது.

ஒருதார மணம், ஒருதாரக் குடும்பம், ஒற்றை மணவாழ்வு, ஒற்றைத் துணை வாழ்வு என்றெல்லாம் பலவாறு சொல்கிறார்கள். ஆங்கிலத்தில் monogamy என்கிறார்கள். இது எவ்வாறு வழக்கமாயிற்று. மனித வாழ்வின் கூர்ப்பில் வளர்ச்சியில் எப்பொழுது இது ஆரம்பித்தது என்பது பற்றித் தெளிவான தரவுகள் கிடையாது.

ஏனைய உயிரினங்களைப் பொறுத்தவரையில் பறவைகள் பெருமளவு சோடிகளாகவே வாழ்கின்றன. 90% பறவைகள் சோடிகளாக வாழ்கின்றன எனச் சொல்கிறார்கள். ஆனால் மிருகங்களில் குறைவே. பாலூட்டிகளைப் பொறுத்தவரையில் மிகக் குறைவான 3% வீதம் மட்டுமே சோடிகளாக வாழ்கின்றன.

மனித இனம் தோன்றிய காலம் முதல் ஒற்றை மணவாழ்வு இருந்திருப்பதற்கான சாத்தியமில்லை. மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியின் போது ஒருசில காரணங்களினால் இது வந்திருக்கும் என நம்பலாம். அவை என்ன காரணங்களாக இருக்கலாம் என்பதையிட்டு விஞ்ஞானிகள் சில விளக்கங்களைச் சொல்லுகிறார்கள்.

1. மனிதக் குழந்தைகள், சில மிருகக் குட்டிகளின் ஆரம்ப காலங்களில் அவற்றின் தேவைகள் அதிகம். அவற்றால் நடக்க முடியாது. தாமாக உணவு தேட முடியாது. தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ள முடியாது. இவற்றின் காரணமாக ஒற்றைப் பெற்றோரால் அதன் தேவைகள் முழுவதையும் பூர்த்தி செய்து வளர்த்தெடுப்பது முடியாத காரியம். அதனால் சோடியாக வாழ்வது அவசியமாயிற்று.
2. இரண்டாவதாக அவர்கள் கூறும் காரணம், துணையைப் பாதுகாத்தல் (mate guarding) என்பதாகும். வேறு ஆண்கள் ஆண் மிருகங்கள் வந்து தனது துணையைக் கவர்ந்து செல்லாமல் இருப்பதைத் தடுப்பதற்காக சேர்ந்து வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டது.
3. தனது வாரிசைப் பாதுகாப்பதற்காகவும் துணையாக வாழ நேர்ந்தது என்கிறார்கள். ஒரு பெண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையைக் கொன்றுவிட்டால் அவளது உடல் மற்றொரு குழந்தையைச் சுமப்பதற்கு தயாராகி விடும் என்பதால் வேறு ஆண்கள் குழந்தையைக் கொன்று விடுமாம். கடுவன் பூனையிடமிருந்து தனது குட்டியைப் பாதுகாப்பதற்காக தனது குட்டிகளை தூக்கிக் கொண்டு ஓடும் தாய்ப் பூனைகள் ஞாபகத் திற்கு வரவில்லையா?

தங்கள் கருத்துகள் சரியானவையா என ஆராய்வதற்காக Christopher Opie தலைமையிலான விஞ்ஞானி கள் குழுவினர் 230 வகையான மிரு கங்களின் குடும்ப வாழ்வு சம்பந்தமான தரவுகளைத் தேடிப் பெற்று ஆய்வு செய்தனர். அவர் களது ஆய்வானது bushbabies, monkeys, apes and modern hu-ma-ns முதலான மிருகங்களின் புணர்வுப் பழக்கங்கள், வாழ்க்கை முறை, குட்டிகளின் இறப்பு விகிதம், பெற்றோரின் துணை போன்ற விட யங்களுக்கு முக்கியத்துவம் கொடுத் திருந்தது. தங்களது ஆய்வுகளை 75 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பிருந்த காலம் முதல் இற்றைவரை simulated evolution பண்ணினர். பல மிருகங்களில் பரிணாம வளர்ச்சி யில் ஒற்றைத் துணை வாழ்வானது சில காலங்களில் ஏற்றமும் தாழ்வும் கண்டதை அவ் ஆய்வுகள் ஊடாக உணர முடிந்ததாம்.

### சிசுக்கொலையும் வாரிசுகளைப் பாதுகாத்தலும்

பல்லாயிரம் தடவைகள் தமது ஆய்வை மீள ஆராய்ந்தபோது மிரு கங்களின் ஒற்றைத் துணை வாழ்க் கைக்கு காரணம் ஒன்றே ஒன்றாகத் தான் இருந்ததாம். ஆண்கள் தமது குட்டிகளைக் கொல்லும் பழக்கமான சிசுக்கொலையே அது எனத் தெரிய வந்தது.

''சிசுக்கொலை ஏற்கனவே இல்லா மல் ஒற்றைத் துணை வாழ்வு வர வாய்ப்பு இல்லை. அதேபோல, ஒற் றைத் துணை வாழ்வு இல்லாமல் பெற்றோரின் பாதுகாப்பு சிசுவிற்கு கிடைக்காது'' என்ற முடிவிற்கு தலைமை ஆய்வாளரான Christo-pher Opie வந்தார்.



> உயிரியல் ரீதியானதா, பண்பாட்டு வழி வந்ததா, பொருளாதார காரணிகளுக்கானதா?

பரிணாம வளர்ச்சியில் மிருகங்க ளின் மூளையின் அளவு பருமனடைந் தமை, கூட்டங்களாக வாழத் தலைப் பட்டமை போன்றவை தனது கருத்தி ற்கு வலுச் சேர்ப்பதாக அவர் கருதுகி றார். மூளை பருமனடையும்போது குழந்தைகள் தங்குவதற்கான இடை வெளி நீண்டு செல்கிறது. குட்டிக்குப் பாலூட்டும் காலத்தில் தாயின் சூலகத் திலிருந்து முட்டை வெளியேறுவ தில்லை. இதனால் அக்காலத்தில் அவளது கருப்பையானது மற்றொரு கருவைச் சுமக்க ஆயத்தமாவ தில்லை. எனவே, அவள் மீண்டும் கருவலுவுள்ளவளாக வேண்டுமா யின் சிசுக்கொலை ஆண்மிருகங்க ளுக்கு அவசியமாக இருந்தது என்கி றார். ஆனால், சோடியாக வாழும் போது சிசுக்கொலை நடப்பதில்லை.

சிசுக்கொலையைத் தடுப்பதற்கு சோடியாக வாழ்வதை விட வேறு வழிகள் ஏதும் கிடையாதா என நீங்கள் கேட்கக் கூடும்.

சிம்பன்சிக் குரங்குகள் இதற்கு ஒரு அற்புதமான வழியைக் கண்டன. புணரும் காலத்தில் பெண் சிம்பன்சி கள் தமது குழுவில் உள்ள அனைத்து ஆண்களுடனும் புணருமாம். இத னால் ஆண் சிம்பன்சிகளுக்கு இதன் தந்தை யார் என்பதில் குழப்பம் ஏற் பட்டு அவை சிசுக்கொலை செய்வ தில்லையாம்.

பறவைகளில் அது அதிகம் காணப் படுவதும் தேவையின் நிமித்தமே. பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதற்கு கூடு கட்ட வேண்டும். குஞ்சு பொரித்த பின் அவற்றிக்கு இரை தேடவும், காவலிருக்கவும் தாயும் தகப்பனுமாக இருவரும் அவ சியம். அதனால், பறவைகளுக்கு ஒற் றைத் துணை வாழ்வு அத்தியாவசிய மானது எனக் கொள்ளலாம்.

ஒற்றைத் துணை விடயமானது மனித இனத்தின் மூதாதையரின் பழக் கத்திற்கு வந்து ஒரு இலட்சம் வரை தான் இருக்கும் என்கிறார்கள் ஆய் வாளர்கள்.

### மாற்றுக் கருத்துகள்

வேறு சில விஞ்ஞானிகள் இந்த ஆய்வு முடிவுகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. ''ஒற்றைத் துணை எனச் சொல்லி ஆய்விற்கு எடுக்கப்பட்ட சில மிருகங்கள் வனங் களில் வாழ்பவையாக இல்லை. ஆந் தைக் குரங்குகள் வருடத்திற்கு ஒரு முறையே குட்டி போடுபவை. என வே, அவை தனது குட்டியை இழந் தாலும் அடுத்து புணர்வுக் காலத்திற்கு ஒரு வருடம் காத்திருக்க வேண்டும். ஏனைய பல இனக் குரங்குகள் ஆய் வில் சொல்லப்பட்ட அளவிற்கு ஒற் றைத் துணை மிருகங்கள் அல்ல'' என பல்வேறு காரணங்களைச் சொல்கி றார் Dr Maren Huck. இவர் டேர்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் மிருகங்களின் வாழ்க்கை முறை பற்றி ஆய்வு செய் பவராவார்.

மற்றொரு கட்டுரையாளரான Meg Barker மனிதர்களின் ஒற்றைத் துணை வாழ்க்கை முறைக்கு மிருகங் களில் ஆதாரம் தேடுவது அபத்தமா னது எனக் கருதுகிறார். முழுமையா கத் தெளிவில்லாத நரம்பியல் விஞ் ஞானத்திலும் (neuroscience), பரி ணாம வளர்ச்சி உயிரியலிலும் (evolutionary biology) ஆதாரங்களைத் தேடுவதை விடுத்து மனிதனது சமூக விஞ்ஞானத்திலும் மெய்யியலிலும் தேடுவதே பொருத்தமானது என வாதாடுகிறார்.

பரிணாம வளர்ச்சியின் போது மனித மூளையானது துரித வளர்ச்சி அடைவதும் அதனால் கருத் தங்குவ தற்கான கால இடைவெளி அதிகரிப் பதும் காரணமாகலாம். அதேபோல, உடலில் ஏற்பட்ட பரிணாம மாற்றங்க ளுக்கும் பங்கு இருக்கலாம். ஆனால் அவற்றைவிட மனிதக் குழுக்களின் வாழ்க்கை முறைகள், சமூக ஊடாட் டங்கள், உளவியல் தாக்கங்கள் போன்ற அனைத்துமே ஒற்றைத் துணையா, பல துணையா, தேவைக்கு ஏற்ப துணையா என்பதைத் தீர்மா னிக்கின்றன எனலாம். biopsychosocial approach தேவை என்கிறார் கள்.

நாளாந்த வாழ்வில் துணையுட னான உறவுகளில் எத்தனை வித பிரச் சினைகளும் சஞ்சலங்களும் ஏற்படு கின்றன என்பதை ஒவ்வொருவரும் தனது உள் மன வேட்கைகளைத் திற ந்த மனதோடு ஆராய்ந்தால் அதிர்ச்சி அளிப்பதாக இருக்கக்கூடும். அது வும் ஆண்களும் பெண்களும் வேலைக்குச் செல்லும் காலகட்டத் தில் நிரந்தரத் துணைகளுக்கு அப் பால் தற்காலிகத் துணைகளும் யதேச் சமான துணைகளுக்குமான சாத்தி யங்களுக்கு குறைவில்லை.

ஒருவருடன் உறவில் இருக்கும் அதேநேரத்தில் தனது பாலியல் சுதந் திரத்தை எவ்வாறு காப்பாற்ற முடி யும் என்பதையிட்டு பலர் சஞ்சலப் படுகிறார்கள். மேலை நாடுகளில் இதுபற்றிய ஆலோசனைகளுக்காக மருத்துவர்களை நாடுவதையும் அறிய முடிகிறது. வெளி உறவுகள் சுகத்தைக் கொடுக்கும் அதேநேரம், அது ஏற்படுத்தும் உள்ளார்ந்த வலி பலரைக் குற்ற உணர்வுக்கு ஆளாக்கு கிறது.

உறவுக்கு நாட்டமிருக்கிறது. ஆனால், ஆண் குறி விறைப்படைவ தில்லை என்ற சிக்கலோடு பல ஆண் கள் வருகிறார்கள். உறவு கொள்ளும் போது தாங்க முடியாத வலி பெண் உறுப்பில் ஏற்படுகிறது என்கிறார்கள் சில பெண்கள். நிதானமாக ஆராயும் போது திருமண உறவுக்கு அப்பா லான பால் உறவுகளால் ஏற்படும் குற்ற உணர்வு நோயாகப் பரிணமிப் பது தெரிய வருகிறது.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண் பாட்டுச் சூழலிலும், சமூக ரீதியான நிர்ப்பந்தங்களிலும் வாழும் எமது சமூகத்தில் இது ஆழமான மனத் தாக் கத்தை ஏற்படுத்துவது ஆச்சரிய மல்ல.

ஆனால், எல்லாச் சமூகங்களும் ஒற்றைத் துணை வாழ்வை தமது பண்பாடாகக் கொள்வதில்லை. பல தார மணங்கள் உலகின் பல்வேறு சமூகங்களில் வழமையானதாக இருக்கின்றன. வெளிப்படையாக ஒருதார மண வழக்கமுள்ள சமூகங்க ளிலும் மறைமுகமாகவும் இரகசிய மாகவும் பல துணைகள் இருக்கவே செய்கின்றன. கணவனை அல்லது மனைவியைத்தள்ளி வைத்துவிட்டு புது ஒற்றைத் துணையைத் தேடு வதை எதில் அடக்குவது?.

தசரதனுக்கு ஆயிரம் மனைவி என் றனர். எல்லோருடனும் அவன் உறவு கொள்பவனாக இருக்கிறான் என் றாலும், ஒரு நாளில் அவன் மூன்று பெண்களுக்கு மேல் உறவு கொள் வது சாத்தியமில்லை. இன்று ஒருத்தி யுடன் உறவு கொண்டால் அடுத்த தடவை அவளுடன் சேர குறைந்தது ஒரு வருடமாகும் எனக் கணக்கிட லாம். இதைப் பெண்ணின் இடத்தில் வைத்துச் சிந்தித்துப் பாருங்கள். அவ ளுக்கு வருடம் ஒரு முறைதான் பாலி யல் இன்பம் கிட்டும். எவ்வளவு பரி தாபம்!

உண்மையில் மனித வாழ்வைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலங்க ளில் ஒற்றைத் துணை என்பது பாது காப்புக் காரணங்களுக்காக இருந்தி ருக்கலாம். கால ஓட்டத்தில் அது பண்பாட்டு அம்சமாகவும் பொருளா தார தேவைகளின் நிமித்தமும் இருந் தது. "சொத்து வெளியே போகக் கூடாது" என்பதற்காக நெருங்கிய உறவினரைத் திருமணம் செய்வது எமது சமூகத்தில் வழக்கமாக இருக்க வில்லையா?

ஆனால், இன்று பாதுகாப்பு பெரு மளவு பிரச்சினையாக இல்லை. ஆண்களும் பெண்களும் சரிசமமாக உழைப்பதால் பொருளாதார ரீதியாக மற்றவரில் தங்கியிருக்க வேண்டிய அவசியமும் நீர்த்துப் போகின்றது. இதனால் இன்று துணை என்பது பெரும்பாலானவர்களுக்கு, காத லுக்கும் பாலியல் கிளர்ச்சிக்கும் மட் டுமே ஆனதாக மாறி வருகிறது. இவ ற்றின் காரணமாக பலர் இன்று துணை யின்றி தனியாக வாழவும் நேர்கிறது. ஒற்றைப் பெற்றோராக குழந்தையு டன் வாழ்வதும் தொடர்கிறது.

மூத்த தலைமுறையினருக்கு அதிர் ச்சி அளிப்பது போல, ஒருபால் திரு மணமும், சேர்ந்து வாழ்வதும் மறை வாக நிகழ்ந்த காலம் போய் சட்ட ரீதி யான அங்கீகாரத்தை பல நாடுகள் வழங்க முன் வந்திருக்கின்றன.

ஒரு சில நூற்றாண்டுகளுக் கிடையே மனித வாழ்வின் திருமண உறவிலும், பண்பாட்டு முறைக ளிலும், பாலியல் சிந்தனைகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின் றன. இவையாவுமே பெரும்பாலும் சமூகப் பொருளாதாரக் காரணிகளா லும், தனிமனித சுதந்திரம் வலுப் பெற்றுள்ளதாலும் வந்தவை எனப் புரிந்து கொள்வது சிரமமானது அல்ல. எனவே, இத்தகைய ஆய்வு களை ஆய்வு கூட பரிசோதனைக் குழாய்கள், நுணுக்குக்காட்டி, கணினி ஆகியவற்றிற்குள் மட்டும் முடக்கிவி டாது, சமுதாய மாற்றங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது முக்கியமானதாக்கப்படுகிறது. ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்க இலக்கியத்தின் தந்தை

# சினுவா ஆச்சிபி

மதுசூதனன்

திணைவுப் பரவல்




**இருண்ட கண்டத்தின் மக்களின் அடிமை வாழ்வியலையும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவர்களின் எதிர்காலக் கனவுகள் மற்றும் போராட்ட எழுச்சிகளையும் உலகின் பார்வைக்கு கொண்டு வந் தவர் சினுவா ஆச்சிபி. அவரின் மறைவு ஆபிரிக்க இலக்கியம் குறித்த கவனத்தை ஈர்க்க வைத்துள்ளது. ஆனால் அவரது மறைவுச் செய்தி நம்மவரை அதிகம் பாதிக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது**

ஆபிரிக்காவின் படைப்பு மனச்சாட்சியாகவும் முன்னோடிக்கதை சொல்லியாகவும் காலனிய ஓர்மை அகற்றலுக்கான அடையாள மீட்புவாதியாகவும் இயங்கி வந்த சினுவா ஆச்சிபி Chinua Achebe சமீபத்தில் (21 மார்ச் 2013 இல்) மறைந்துவிட்டார். ஆனால், இந்தச் செய்தி நம்மை அதிகம் பாதிக்கவில்லை. நமது படைப்பாளர்கள் தீவிர வாசகர்கள் மத்தியிலும் அதிகம் பேசப்படவில்லை.

ஈழத்து நவீன தமிழிலக்கியச் சூழலில் போதுமான புதிய இலக்கிய வளங்களை மற்றும் அவை சார்ந்த உரையாடல்களை உருவாக்கும் ஆரோக்கியமான சூழலமைவு இல்லாமல் உள்ளது. இந்தப் பின்னணியில் சினுவா ஆச்சிபி என்னும் ஆளுமை மீதான கவனயீர்ப்பு நமக்கு முக்கியமாகின்றது.

சினுவா ஆச்சிபி ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்த நைஜீரியாவில் 1930 நவம்பர் 16 இல் பிறந்தவர். ஈபோ இனத்தைச் சேர்ந்தவர். இவருடைய தந்தை மிஷனரி பாடசாலையில் கல்வி கற்பித்து வந்தார். கிராம தேவாலயங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாகவும் இருந்தார். ஆச்சிபி இபடான் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலக் கல்விகற்று பட்டம் பெற்றவர். நைஜீரிய வானொலியிலும் சில காலம் பணி புரிந்தவர். பேராசிரியராகவும் பணி புரிந்தவர். நைஜீரியாவில் அரசாங்க மொழி ஆங்கிலம். அம்மொழி அறிந்தவர்கள் அங்கு கணிசமாக இருக்கிறார்கள். மக்கள் பேசும் மொழிகள் ஹவுசா, ஈ.போ, யொருபா ஆகியவை. மக்கள் தொகையில் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் சமபங்கினர்.

ஆச்சிபி தன் படைப்புகளில் ஆங்கில மொழியில் எழுதிவந்தார். இவர் நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை, குழந்தை இலக்கியம், விமர்சனம் முதலான துறைகளில் அதிகம் ஈடுபாடுகாட்டி வந்துள்ளார். பல்வேறு படைப்புகளை எழுதிவந்துள்ளார். ஆச்சிபியின் உருவாக்கமும் அடையாளமும் உலக இலக்கிய மரபில் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

ஆச்சிபி நைஜீரிய மக்களின் அரசியல் போராட்டங்களில் நேரடியாகவும் படைப்பு வாதியாகவும் பங்குபற்றியவர். குறிப்பாக ஆச்சிபி வாழ்ந்த தேசத்தில் மிக மோசமான சிவில் யுத்தம் பரவிவந்தது. இதனால் இவர் பல அனுபவங்களோடு வாழ்ந்துவந்தார். மனிதர்களை இழிவுபடுத்தும் ஒடுக்குமுறைச் சிந்தனைகளுக்கு எதிராக விடுதலைச் சிந்தனையின் தாக்கத்துக்கு உட்பட்டும் வளர்ந்து வந்தார். இவற்றின் அடிநாதமாக தனது படைப்புகளை வழங்கிவந்தார். இவர் எழுத்தாளராகவும் சிந்தனையாளராகவும் ஒருங்கே இருப்பதன் காரணமாக அரசியல் சக்திகளின் விரோதியாகவும் பார்க்கப்பட்டார். இறுதியில் அத்தேசத்தில் இருந்து நாடுகடத்தப்பட்டார். இதன் மூலம் உயிர்பிழைத்தார். ஆனால், இவரது இலக்கியப் பயணமும் அரசியல் பயணமும் இறுதிக்காலம் வரை தொடர்ந்து வந்தது.

சினுவா ஆச்சிபி ஆபிரிக்க மக்களின் அடிமை வாழ்வியலை அம்மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அவர்களின் எதிர்காலக் கனவுகளை மற்றும் போராட்ட எழுச்சிகள் முதலானவற்றை உலகத்தின் பார்வைக்கு கொண்டுவந்தார். ஆபிரிக்க மக்கள் பற்றி தெரிந்துகொள்வதற்கான வாசகப் பரப்பை உருவாக்கினார். இதன் மூலம் அபிப்பிராயக் கருத்துருவாக்க மரபுகளை வளர்க்கும் பெரும் பணிகளிலும் ஈடுபட்டுவந்தார். ஆச்சிபியின் THINGS FALL APART எனும் நாவல் 1958 இல் வெளிவந்தது. இந்நாவல் நவீன ஆபிரிக்க இலக்கியத்தில் மிகப் பரவலாக வாசிக்கப்பட்ட படைப்பு என்று குறிப்பிடப்படுகிறது. அந்த நாவல் உலகம் முழுவதும் 50க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நாவல் தமிழில் என்.கே. மகாலிங்கத்தின் மொழிபெயர்ப்பில் சிதைவுகள் என்னும் பெயரில் 1998 இல் வெளியாகி இருந்தது.

இந்நாவல் ஆபிரிக்காவை இருண்ட கண்டம் என்று ஒற்றைப் பரிமாணத்தில் இளக்காரமாக வர்ணிக்கும் மேலை நாட்டினரின் இலக்கிய புரிதலை இலக்கியச் சொல்லாளர்களை கேள்விக்குள்ளாக்கும் இலக்கிய மொழிவெளியை நுட்பமாகக் கட்டமைக்கும் பண்புகொண்டதெனலாம். உண்மையான ஆபிரிக்காவும் அதன் விசேட தனித்துவப் பண்புகளும் பண்பாட்டு விழுமியங்களும் எவ்வாறு சித்தரிக்கப்படும் என்பதற்கான படைப்பாகவும் மாற்றுப்பிரதியாகவும் படைக்கப்பட்டது. இந்தப் படைப்பு ஒடுக்கப்பட்ட இனத்தின் சுய பிரகடனம் மட்டுமல்ல, ஆதிக்க இனத்தவரைப் பார்த்து அவர்கள் பாணியிலேயே நாக்கை வெளியே துருத்திக் காட்டுகிற எள்ளல் தன்மையுடன் படைக்கப்பட்டது.

இந்தப் படைப்பின் நாயகன் காலனிய சக்திகளுக்கு எதிராக, தனது பாரம்பரிய பண்பாட்டு வேர்களைக் காத்துக்கொள்வதற்கு நடத்தும் கடுமையான போராட்டத்தில் தோல்வியடைகிறார். பல்லாயிரமாண்டு பழமையான ஒரு பண்பாடும், அதன் நூற்றுக்கணக்கான கடவுளர்களும், வழிபாட்டு நியமங்களும் துடைத்தழிக்கப்பட்டு ஆதிக்க இனத்தவரின் மதத்திற்கு உலகின் ஆதிக் குடியினர் மாற்றம் செய்யப்படும்போது இந்த வீழ்ச்சியின் சுற்று முழுமை பெறுகிறது. இங்கு வாசகர் பல்வேறு வகையான மனவெழுச்சிகளின் துரத்தல்களுக்கு ஆளாகின்றார். இதன்மூலம் புதிய வகையிலான வாசக அனுபவம் கடத்தப்படுகிறது. இங்கு நாவல் மேலும் விரிவுபடுகிறது. அந்த வெள்ளைய கவனருக்கு எழுதப்போகும் 'கீழ் நைஜரின் ஆதி இன குல மரபுகளை சமாதான மயப்படுத்தல்' என்ற புத்தகத்திற்கு ஓகாங்கோவின் கதையைச் சேர்த்தால் சுவாரஸ்யமாக இருக்கும் என்று தோன்றுகின்றது. அதுவும் 'ஒரு முழு அத்தியாயமாக அல்ல, ஒரேயொரு பத்தியாக மட்டும்'. இந்த முத்தாய்ப்பு தான் ஆபிரிக்காவைப் பற்றி வெள்ளை இனத்தவர் கொண்டிருந்த பார்வையை நிதர்சனமாக்குகிறது.

படைப்பாளியாக இருப்பவர் வெறுமனே படைப்புகளை மட்டும் கொடுப்பவர் அல்ல. மாறாக சமூக அரசியல் சார்ந்த நிலைப்பாடுகளை துணிவுடன் எடுக்கக்கூடியவராகவும் இருக்க வேண்டும். அதற்காக அதிகார வர்க்கத்துடன் போராடுவதற்கான துணிச்சலும் அறமும் வேண்டும். இந்தப் பண்பு தான் சினுவா ஆச்சிபியை ஆபிரிக்காவின் மனச்சாட்சியாகவும் இயங்கவைத்துள்ளது.

சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் ஆபிரிக்கத் தேசங்களின் அதிகாரிகளின் மெத்தனப்போக்கையும் ஊழல் மோசடிகளையும் நியாயமானதாகக் கருதும் சமூக மனப்பான்மையின் மீது கேள்வியை எழுப்பும் விதமாகவும் இவரது எழுத்துகள் அமைந்திருந்தது. குறிப்பாக எதிர்க்கட்சிகளைத் தடைசெய்து தாம் பெற்றிருக்கும் பலத்தை மோசடியாகப் பாவிக்கும் தலைவர்கள் பற்றி தனது படைப்புகளில் அம்பலப்படுத்தி அவர்களுக்கு எதிரான கருத்துகளைப் பதிவு செய்வதிலும் இவர் துணிந்து செயற்பட்டுள்ளார்.

ஆபிரிக்கர்களை எதிர்மறையாகவே சித்தரித்துவரும் மேற்கத்தைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியம் குறித்து ஆச்சிபி தெரிவித்திருக்கும் கருத்துகள் முக்கியமானவை. குறிப்பாக இந்தக் கருத்துகள் (மேற்கத்தைய) இருப்பதை அப்படியே நிலைநிறுத்தச் செய்யும் நேரடித்தன்மை கொண்டவை என்கிறார். 'எனது அனுபவங்கள் எனப்படுபவை எனது குடியேற்ற உரிமைகள் எனக் கூறினால் சிலர் ஆச்சரியப்படக் கூடும். எனினும், தானியங்களிலிருந்து மாவு வரைக்கும், அவற்றை அரைக்கும் நிலையங்கள் என எல்லாமும் படைப்பாளர்களுடையவை. உண்மையில் ஒரு தானிய விதையானது ஏனைய விதைகளை விடவும் போசனைச் சக்தியில் மாறுபடக் கூடும். ஆனாலும், எமக்கு கிடைக்கும் எல்லாத் தானிய விதைகளுக்கும் வரவேற்பு அளிக்கப்படவேண்டும். அவை பயனுள்ள விதத்தில் பாவிக்கப்பட வேண்டும்' என சினுவா ஆச்சிபி கூறுகிறார்.

ஆச்சிபி ஆங்கிலத்தில் எழுதுவதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. கூகி வா தியாங்கோ கூட ஆச்சிபி ஈ.போ.மொழியில் எழுதாததற்காக தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். இதுபற்றி வாத விவாதங்கள் பல மட்டங்களில் தொடர்ந்து நிகழ்ந்துள்ளன. 1964 இல் சினுவா ஆச்சிபி தனது ஆபிரிக்க எழுத்தாளரும் ஆங்கில மொழியும் என்ற உரையில், 'பிறிதொரு மொழிக்காக ஒருவர் தனது தாய்மொழியைக் கைவிடுவது சரியா? அது மிகப்பெரிய துரோகச் செயலாகத் தோன்றுகிறது. பெரும் குற்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது. ஆனால், எமக்கு வேறு வழியேதும் இல்லை. எனக்கு இம்மொழி கொடுக்கப்பட்டது. நான் அதைப் பயன்படுத்த எண்ணியுள்ளேன். இவ்வாறு அந்த உரையில் குறிப்பிட்டு இருந்தார்.

இந்தக் கருத்து தொடர்பில் உள்ள முரண்களை கூகி வா தியாங்கோ பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார். 'தாய்மொழிப் பயன்பாடு குறித்த கருத்தைத் தெரிவிக்கும் போது பயங்கர நம்பிக்கைத் துரோகம், குற்ற உணர்வு போன்ற சொற்கள் விடலைத்தனமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், அந்நிய மொழியைப் பேசும் போது உறுதியான அரவணைப்பு வெளிப்படுகிறது என்கிறார். பின்னர் இதைப்பற்றி ஆச்சிபி விவரிக்கும் போது எமது இலக்கியத்தில் ஆங்கிலத்தின் அசைக்க முடியாத நிலைபற்றிய அழிவுக்கான தர்க்கம் என்றுதான் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், ஆபிரிக்கர்களின் வாழ்வியல் அனுபவத்தை எந்த மொழி வழி கடத்தலாம் என்பது பற்றிய தேடலும் சிந்தனையும் ஆழமாக வெளிப்பட்டது. ஒவ்வொரு ஆளுமைகளையும் மாற்று வரைபுகளையும் முன்வைத்தனர். அதில் ஆச்சிபியும் ஒருவர். இவர் ஆங்கிலத்தில் எழுதுபவராக இருந்தாலும் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டவர்களின் மொழியில் எழுதுவதை தான் விரும்பவில்லை என்றும் பிறிதொரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். 'ஆபிரிக்க எழுத்தாளன் பயன்படுத்தும் ஆங்கிலம் உலகளாவிய விதத்தில் வாசிக்கக்கூடியதாகவும் அதேசமயத்தில் அவனது தனித்துவ அனுபவங்களின் பாரத்தை ஏற்றியிருப்பதாகவும் இருக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார். இதற்கான மாற்று ஆங்கில உரையாடல் சொற்றொடர்களை உருவாக்கி தனது பாத்திரங்கள் மூலம் பகிர்ந்து வந்தார்.

சினுவா ஆச்சிபிக்கு இருபதுக்கும் மேற்பட்ட கௌரவ டாக்டர் பட்டங்கள் கிடைத்தன. இதைவிட பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களிலும் உறுப்பினராகவும் இருந்தார். நைஜீரிய அரசு இவருக்கு வழங்கவிருந்த தேசிய கௌரவத்தை ஆச்சிபி மறுத்தார். 'அந்த வாய்ப்பை மறுத்ததற்கான காரணம், முதல் முறையாக வாய்ப்பு உருவானபோது என்னை விட்டு விட்டார்கள் அதையே மறுபடியும் அளிப்பது பொருத்தமற்றது. எனவே நான் வருத்தத்துடன் அந்த வாய்ப்பை மறுக்கிறேன்' என்றார்.

1983 இல் Ba The Trouble with Nigeria எழுதினார். அதில் தனது நாட்டின் பிரச்சினை சதுரமான தன்மையே என்று குறிப்பிட்டார். நேர்மை பற்றியும் நீதி பற்றியும் அவை இரண்டும் மக்கள் மீது செலுத்தும் விளைவுகள் பற்றியும் கறாரான பார்வை கொண்டிருந்தார். நைஜீரிய நாட்டின் நிர்வாக அமைப்பை இரக்கமின்றி இடித்துரைப்பதன் மூலம் இராணுவ சர்வாதிகாரத்தின் நிரந்தர விமர்சகராகவும் இருந்தார்.

ஆச்சிபி ஒரு கண்டத்திற்கு ஆற்றலையும் குரலையும் அளித்தவர். அவருடைய சமீபத்திய நூல் There was a country பயாஃப்ரா உள்நாட்டுப் போரில் அவருக்கு நேர்ந்த அனுபவங்களையும் பார்வைகளையும் சொல்லும் சுயசரிதை. ஒருவேளை இதுதான் அவருடைய படைப்புகளிலேயே அதிகம் விமர்சிக்கப்பட்ட ஒன்றாக இருக்கலாம். குறிப்பாக நைஜீரியர்களால் பேராசிரியர் சினுவா ஆச்சிபி சமநிலையான ஒன்றை எழுதவில்லை. நைஜீரியனாக எழுதியிருப்பதைக் காட்டிலும் பயாஃப்ரா நாட்டவராகவே அதிகம் எழுதியிருக்கிறார் என்று விமர்சிக்கப்பட்டார்.

சினுவா ஆச்சிபியின் மறைவு ஆபிரிக்க இலக்கியம் குறித்த கவனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு காலத்திலும் மேற்கில் இருந்து புது வகைக் கோட்பாடுகள் நமக்கு அறிமுகமாவதும் அவை குறித்த மதிப்பீடுகளை நாம் உருவாக்கிக் கொள்வதும் நம்மை சமகாலத்தவர்களாகத் தக்கவைக்கின்றன. சமீப காலங்களில் பின்னைக் காலனியம் என்ற சிந்தனைப் போக்கு ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க சிந்தனையாளர்களின் நேரடி பங்கேற்போடு புதிதாக அறிமுகமாகி வருகிறது. இக்கோட்பாட்டின் அரசியல் பண்பாட்டு நிலைப்பாடுகளை மதிப்பிட்டு அதற்கேற்ப அதனை உள்வாங்குதல் அல்லது எதிர்வினையாற்றல் போன்ற செயற்பாடுகளில் நாம் ஈடுபட வேண்டும். சினுவா ஆச்சிபி இதற்கான தேவையை அதிகரித்துள்ளார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுலகம்



# மரியான்

மயூரா

சமகால தமிழ் சினிமாவில் பார்வைவெளி பெரும் மாறுதல்களுக்கும் பெரும் அதிர்வுகளுக்கும் உள்ளாகி வருகின்றது. குறிப்பாக புதியவர்களின் வருகை புதிய வகையிலான தமிழ்ப்படங்களை உரு வாக்குகின்றன. இதனால் பெரும் நட்சத்திர அந்தஸ்து பெற்ற நடிகர்கள், இயக்குநர்களின் படங்கள் தோல்வி கண்டு வருகின்றன. இதற்கான காரணங்களைக் கண்டு பிடிப்பதிலோ அல்லது புரிந்துகொள்ள முற்படுவ திலோ நடிகர்கள், இயக்குநர்கள் அக்கறை காட்டுவதாக இல்லை.

இன்றைய இளம் நடிகர்களில் பலர் நல்ல கதை, திரைக்கதை சார்ந்த படங்களைத்தெரிவு செய்வதில் நாட்டம் இல்லாதவர்களாக உள்ளனர். பொய்யான, ஆடம்பரமான திரைப்படங்களில் தான் நம்பிக்கை கொண்டு இயங்குகின்றன. தற்போது தமிழில் வெளி வந்த ஆரண்ய காண்டம், பீட்ஸா, சூது கவ்வும், நேரம் முதலான படங்கள் வழமையான திரைப்படப் போக்கு களில் இருந்து புதிய வகையிலான அலையொன்று உரு வாவதை அடையாளப்படுத்தியுள்ளன. மேற்குறிப் பிட்ட படங்கள் கண்டிருக்கும் வெற்றி தமிழ் சினிமா வின் அடுத்த நகர்வை சாத்தியப்படுத்தியுள்ளது என லாம். இந்தப் புதிய படங்களின் இயக்குநர்கள் யாரிட மும் உதவி இயக்குநர்களாக பணிபுரிந்தவர்கள் அல்ல. இதனால் இந்த சட்டகங்களை மீறி சுதந்திரமா கவும் படைப்பு மனநிலையிலும் இவர்களால் இயங்க முடிகிறது. பெரும் நட்சத்திர அந்தஸ்து பெற்ற நடிகர்க ளின் பின்னால் போகாது. கதைக்கேற்ப நடிகர்களைத் தெரிவு செய்யும் போக்கு சிறப்பாக தனித்துச் சொல்ல வேண்டும்.

ஆரம்பத்தில் ரஜனி ஒரு நடிகனாக உருவாகி வளர்ந்து வந்த தருணங்களுக்கு காரணமான படங்களை இயக்கு நர்களை நாம் ஒரு முறை நினைத்துப் பார்க்கலாம். குறிப்பாக கே.பாலச் சந்திரன், பாரதி ராஜா, ருத்ரய்யா, மகேந்திரன் போன்றவர்களின் படங்களில் ரஜனி நடிக ராக பட்டை தீட்டப்பட்டார். பெயர் சொல்லும் கதாபாத் திரங்களில் நடித்து வந்தார். ஆனால், முரட்டுக்காளை என்ற படம் ரஜனிக்கான அடையாளத்தை வேறு வித மாக நிலைநிறுத்தியது. இதுபோல் சகலகலா வல்லவன் என்ற படம் கமலுக்கு அமைந்திருந்தது. ஆக, இந்த இரு படங்களின் பெயர்களும் படைக்கதைகளின் பெயர்களாக மட்டும் நிற்கவில்லை. மாறாக இப்பாத்தி ரத்தை ஏற்ற நடிகர்களின் அடையாளங்களாகவும் மாறி ன. ஒரு படத் தின் நாயக கதாபாத்திரத்தின் கருத்தியல் தளம் செயற்கையாக திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.

இந்த பின்புலத்தில்தான் எல்லா நடிகர்களும் தமக் கான அடையாளங்களின் இருப்புக்காக உழைத்து வரு கின்றனர். ஆனால், இந்த மரபில் இருந்து ஓரளவு வித்தி யாசமான பண்புகளுடன் வெளிப்படும் நடிகர் களும் உண்டு. அவர்களுள் தனுஷ் குறிப்பிடத்தக்கவர். இவர் சில வித்தியாசமான படங்களை தமிழில் தரத் தொடங்கியிருப்பது அல்லது அவ்வாறான படிக்கட்டுக ளில் ஏறி வருவது ஆரோக்கியமான அறிகுறி எனலாம். படிப்படியாக தனுஷின் உடல், மொழி பல்வேறு சாத்தி [illegible]களில் வளர்நிலையாகவே பரிணாமம் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன.

தற்போது தனுஷ் நடித்து வெளிவந்துள்ள படம் மரியான். இப்படத்தில் நீரோடி என்கிற கற்பனையான குமரி மாவட்டத்தின் கடற்கரையில் திறமைசாலியான மீனவன் மரியான் (தனுஷ்). தன்னை விழுந்து விழுந்து காதலிக்கும் பனிமலரை (பார்வதி) புறக்கணிக்கும் அவன், பின்னர் அவளை ஏற்றுக்கொள்ள முடிவு செய்கிறான். பணம் இருந்தால்தான் அவளைத் திருமணம் செய்ய முடியும் என்ற சிக்கலான சூழலில் அதற்காக இரண்டு வருட பணி ஒப்பந்தத்தில் சூடான் நாட்டிற்குச் செல்கிறான். பணிக்காலம் முடிந்து வீட்டுக்குத் திரும்பும் போது அங்குள்ள இளம் தீவிரவாதிகளால் பணத்திற்காக கடத்தப்படுகிறான் மரியான். பின்னர் இவன் மீண்டானா, பனிமலருடன் இணைந்தானா என்பது இறுதிப்பகுதி.

பத்திரிகையில் வந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு -மரியான்- உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படம் ஒரு புதிய களத்தை மையமாகக் கொண்டுள்ளமை இதன் பலம். ஆனால், அதன் தீவிரம் கதையிலும் திரைக்கதையிலும் இல்லாதது பெரிய பலவீனம். இந்த அம்சங்கள் தமிழ்த் திரைப்படங்களுக்கு பொதுவானதுதான். ஆனால் பார்வை வெளியில் புது அனுபவங்களுக்கான அருட்டுணர்வை, காட்சிகளை தன்னகத்தே மரியான் கொண்டுள்ளது. இந்தவகையில் பலவீனங்களையும் மீறி ஒரு முறையாவது இப்படத்தைப் பார்க்கத் தூண்டுகிறது.

இப்படத்தின் முதல் காட்சியில் இருந்து கடைசிக் காட்சி வரை தனுஷின் ஆதிக்கம் வெளிப்பட்டுள்ளது. காட்சி ரீதியில் புரிந்துகொள்ளும் வகையில் மூன்று காட்சிகளை இங்கு எடுத்துக்காட்டலாம். முதல் காட்சியில் அவர் தன் காதலியுடன் தொலைபேசியில் பேசும் காட்சி. இந்தவொரு காட்சியிலேயே காதலை அத்தனை அழகாக பார்வையாளர்களுக்கு கடத்தும் அனுபவம் தமிழ்த்திரைப்படங்களில் காண்பது அரிது. அடுத்து உணவே இல்லாமல் உணவு உண்பது போன்று தன் நண்பர்களுடன் சேர்ந்து நடிக்கும் காட்சி உண்மையில் தனித்து விடப்படும்போது பாசம், தனிமை எல்லாம் அலைக்கழித்தாலும் உண்மையான சோதனை பசியின் வழியாகவே வந்தடையும். அதை வெளிக்காட்டியிருக்கும் விதம் அற்புதம். இக்காட்சியின் ருசியும் ரசனையும் புதியது. இங்கு தனுஷ் தனித்து வெளிப்படுகிறார். மூன்றாவது 'காட்சி தீவிரவாதிகளின் மத்தியில் தன் காதலியுடன் தொலைபேசியில் மரியான் பேசுவது. இந்த மூன்று காட்சியிலும் தனுஷின் ரசனை நடிப்பு அபாரம். கதையும் திரைக்கதையும் இன்னும் கொஞ்சம் ஒத்துழைத்திருந்தால் இன்னொரு தேசிய விருதை தனுஷ் வென்றிருக்கலாம். பார்வதியின் நடிப்பும் அட்டகாசம். அதிலும் தனுஷை நினைத்து உருகும் காட்சிகளில் கலக்குகிறார். அவரது முக பாவனை பல்வேறு உணர்ச்சிகளின் மோதுகையின் வடிவமாக வெளிப்படுகிறது.


தேசிய விருதுபெற்ற மலையாள நடிகர் சலீல் குமார், இப்படத்தில் பரிதாபமாக காட்சி தருகிறார். அவருக்கு தீனி போடக்கூடிய வகையில் அவருக்கான காட்சிகளும் கதையாடலும் வசனங்களும் அமையவில்லை. இத்திரைப்படத்திற்கு வசனம் எழுதியிருப்பது கொற்கை மற்றும் ஆழி சூழ் உலகு முதலானவற்றின் நாவலாசிரியர் ஜோ.டி.க்ரூஸ். சில இடங்களில் இவரது வசனங்கள் பளிச்சிட்டாலும் பல இடங்களில் சாதாரணமாகவே வசனங்கள் உள்ளன. ஆளுமையை வெளிப்படுத்துவதற்கான முழுமையான சந்தர்ப்பம் இவருக்குக் கிடைக்கவில்லை என்று கூறலாம். தமிழ்த் திரை உலகம் வசனத்தை மட்டும் இன்னொருவரைக் கொண்டு எழுதச் சொல்வது ஒரு மிகப் பிழையான அணுகுமுறையாகும். திரைக்கதை, வசனம் இரண்டையும் ஒருவரே எழுதுவது இங்கு சிறப்பாக இருக்கும். அப்பொழுதுதான் க்ரூஸ் போன்ற படைப்பாளிகளின் உண்மையான இலக்கியத்துவமும், கலை ஈடுபாடு சம விகிதத்தில் வெளிப்படும். இப்படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ளார். இப்படத்தின் களத்திற்கும் பாடலுக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. இதுபோன்ற படங்களுக்கு ஏ.ஆர். ரகுமான் பொருத்தமில்லாதவர். நிலவியல் காட்சிகளை வாழ்வியல் கூறுகளில் இணைத்து எதார்த்த வெளிப்பாட்டில் இசை அனுபவமாகக் கடத்தும் பயிற்சியும் முதிர்ச்சியும் இவருக்குப் போதாது.

காதல் தீவிரவாதம் என்பது மணிரத்தினம் கண்டுபிடித்த அற்புதமான வணிகச்சட்டகம். தமிழ் சினிமாவின் தீராத, வெற்றிகரமான, சலித்துப் போன, கச்சாப்பொருளாகிய காதலை மார்பகங்கள் குலுங்கும் காட்சிகளுடன் இயல்பாக சொல்லிவிடலாம். தீவிரவாத எதிர்ப்பு என்பதையும் மிகையுணர்ச்சியுடன் சொல்லி தேசிய நீரோட்டத்தில் இணைந்து பிரகாசிக்கலாம் என்பது மணிரத்தினம் ரோஜாவில் காட்டிய பாலபாடம். இந்தச் சட்டகத்தை விளம்பரப்பட இயக்குநரான பரத்பாலாவும் பின்பற்றியிருக்கிறார் போல் தெரிகிறது. மணிரத்தினத்தின் தாக்கத்தை மரியான் படத்தில் பரத்பாலா பரிசோதித்துப் பார்த்திருக்கிறார். ஆனால், மணிரத்தினத்திடம் உள்ள கதை சொல்லும் திறன் இவரிடம் இயல்பாக வெளிப்படவில்லை. ஒரு சில நிமிடங்களுக்குள் ஒரு செய்தியை மிக சுவாரஸ்யமாகவும் அழுத்தமாகவும் சொல்ல வேண்டும் என்பது விளம்பரப்படங்களுக்குள்ள ஒரு நியதி. அந்தப் பின்னணியில் இருந்து திரைப்படம் இயக்க வந்த பரத் பாலா இத்தனை மேலோட்டமாக மரியான் திரைப்படத்தை சுவாரஸ்யமற்று எந்தவித சஸ்பன்ஸும் இன்றி உருவாக்கியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

தனுஷ் என்னும் நல்ல நடிகரை பரத்பாலா வீணடித்துள்ளார். ஆனால், மரியான் படத்தில் தனுஷ் ஆங்காங்கு தனக்கான முத்திரையைப் பதிக்காமல் இல்லை. அந்தவகையில் இப்படம் பார்க்க வேண்டிய படம் தான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனுவல் பார்வை




# பேராசிரியர் ச.தனஞ்சயராசசிங்கத்தின் இருநூல்கள்

ஆதிசேனன்

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் குமரன் பதிப்பகம் தமிழ்ப் பேராசிரியர்கள் மற்றும் தமிழியல் ஆய்வாளர்கள் முதலானோரின் நூல்களை வெளியிடுவதில் தனித்தன்மையுடன் இயங்கி வருகின்றது. இந்த வகையில் தற்போது பேராசிரியர் ச.தனஞ்சயராசசிங்கம் அவர்களின் 'இலக்கியச் சிந்தனைத் தடங்கள்', 'யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழ்' ஆகிய இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளது. இந்த நூல்கள் மூலம் பேராசிரியர் தனஞ்சயராசசிங்கம் குறித்தும் அவரது புலமைப் பாரம்பரியம் பற்றிச் சிந்திக்கவும் மீண்டும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இன்றைய இளம் ஆய்வாளர்களுக்கு இந்தப் பேராசிரியரை அறிமுகம் செய்யும் வரலாற்றுப் பணியை குமரன் பதிப்பகம் மேற்கொண்டுள்ளது.

பேராசிரியர் தனது ஆரம்பக் கல்வியை வட்டுக்கோட்டையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அங்கே பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், ஆ.சதாசிவம், சு.வித்தியானந்தன் ஆகியோரிடம் தமிழைச் சிறப்பாகக் கற்று முதல் வகுப்பில் சித்தியடைந்தார். பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக 1957 இல் நியமனம் பெற்றார். தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று அங்கே பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் வழிகாட்டலில்





'இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் தமிழ்ப் பிரகடனங்கள்' என்னும் பொருளில் ஆய்வு மேற்கொண்டு எம்.லிட் பட்டம் பெற்றார்.

மீண்டும் பேராதனைக்குத் திரும்பி விரிவுரையாளர் பணியைத் தொடர்ந்தார். 1969 ஆம் ஆண்டு உயர் ஆய்வுப் பட்டத்திற்காக எடின்பறோப் பல்கலைக்கழகம் சென்றார். அங்கு மூன்று ஆண்டுகள் 'யாழ்ப்பாணத் தமிழ் பற்றி' ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்று நாடு திரும்பினார். இக்காலத்தில் இவருடன் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் தனது கற்பித்தல் பணியுடன் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை ஆய்விதழ்களிலும் ஆய்வு மலர்களிலும் எழுதிவந்தார். இவர் பணியாற்றிய பல்கலைக்கழகங்களில் பேராதனை, கொழும்பு, களனி என்பன குறிப்பிடத்தக்கன. இவர் ஆளுமையும் புலமையும் ஒருங்கே கொண்ட பேராசிரியராக, அறியப்படும் ஒருவராக வளர்ந்து வந்தார். தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் ஆழமான புலமையும் அதன் மூலம் காத்திரமான சிந்தனைகளை, ஆய்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டவராகவும் இருந்துள்ளார்.

பேராசிரியர் இறுதியாக வித்தியாலங்கார வளாகத்தில் தமிழ் இந்துப் பண்பாட்டுத் துறையின் தலைவராகப் பணிபுரிந்து வந்தார். இவரால் எழுதப்பெற்ற முப்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளுக்கும் நாவலர் பணிகள் (1962), A Critical study




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of a seventh century Tamil Document Relating to a commercial treaty (1968), The Education Activities of Arumuga Navalar (1974) எனும் நூல்களுக்குமாக இணைப் பேராசிரியர் பதவி கிடைத்தது. இவர் தனது நாற்பத்தைந்தாவது (26.10.1977) வயதில் அமரர் ஆகி விட்டார். இதனால் பேராசிரியரின் கல்விப் பணிகள், ஆய்வுப்பணிகள் இடையில் நின்று விட்டன. ஆனாலும் பேராசிரியர் பணி புரிந்த காலத்தில் இவரிடம் கற்ற மாணவர் குழாம் இன்றும் இவரது சிறப்புகளை, பெருமைகளை எடுத்தியம்புகின்றனர்.

இப்போது வெளிவந்திருக்கும் இந்த இரண்டு நூல்கள் மூலம் பேராசிரியரது கல்விப் பணி, தமிழ்ப்பணி முதலானவற்றை மீண்டும் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. தமிழ் ஆய்வுலகில் 'நாவலர்இயல்' என்று தனிப்பகுதியாக விரிவாக்கம் பெறுவதற்கும் பேராசிரியர் உறுதியான ஆய்வுத் தடம் அமைத்துள்ளார். அந்த வகையில் பேராசிரியர் எப்போதும் நினைவு கூரப்படுவார்.

பேராசிரியரின் 'இலக்கியச் சிந்தனைத் தடங்கள்' எனும் தொகுப்பில் பத்தொன்பது கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் சங்ககால தொகை நூல்களின் அகத்தினை மரபு /சிலப்பதிகாரமும் சங்க இலக்கியமும் /கோவலன் - சோக நாடகத்தின் தலைவன்/ தமிழ்க் காப்பியங்களில் நாடகக் குறிப்புச் சுவை முதலான கட்டுரைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஆய்விற்கும் தர்க்கச் சிந்தனைக்கும் உரிய சாளரங்களைத் திறந்துவிடுவதுடன், பொருளறிதலுக்கான நுட்பங்களையும் வெளிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, பேராசிரியரின் சொற்களில் நாம் இதனைப் புரிந்துகொள்ள முயற்சிப்பது இங்கு பொருத்தமாக இருக்கும்.

சிலப்பதிகாரம் சங்க காலத்திற்குப் பின்னெழுந்த இலக்கியம் என்பதற்கு இன்னும் பல சான்றுகளுள் சங்க நூல்கள் சமயத்தைத் தமக்கு அடிப்படையான பொருளாகக் கொள்ளவில்லை. பத்துப்பாட்டிலோ எட்டுத் தொகையிலோ உள்ள பாடல்களில் எவற்றையாவது இன்ன சமயக் கொள்கைகளைக் கூறுகிறதென்று நாம் துணிய முடியாது. ஆனால் சிலப்பதிகாரமோ ஊழ்வினை, கொல்லாமை, புலாலுண்ணாமை, துறவு முதலிய சமணசமயக் கருத்துகளை காந்தியடிகள் போன்ற பாத்திரங்களின் வாயிலாக விளக்குகின்றன. அருவக் கடவுளது சிறப்பியல்புகளையும் மிகவும் விரித்துக் கூறுகின்றது.

ஆரிய நாகரிகம், திராவிட நாகரிகத்துடன் அதிகம் கலவாத காலத்திலே சங்க இலக்கியங்கள் எழுந்தமையால், அவற்றின் மொழி நடையில் வடமொழியின் செல்வாக்கை நாம் மிகவும் குறைவாகவே காணலாம். இந்நூல்களில் நூற்றுக்கு மூன்று அல்லது நான்கு விழுக்காடே சங்கச் சொற்களாகவிருப்பன. ஆனால், சிலப்பதிகாரத்திலோ ஏராளமான வடமொழிச் சொற்கள் வந்துள்ளன.

பேராசிரியர் தனது ஆய்வு மூலம் இளங்கோவடிகள் ஏராளமான வடமொழிச் சொற்களை அதிகம் பயன்படுத்தி உள்ளார் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். வடமொழிக்கதைகளையும் அவற்றினால் பெறும் நீதிகளையும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. அடைக்கலக் காதையில் (54-75) கீரியைக் கொன்ற பார்ப்பனியைப் பற்றியும் இராமன், தந்தை கட்டளைப்படி காட்டுக்குச் சென்ற இராமாயணச் செய்திகளையும் தமயந்தியைக் காட்டிலேயே விட்டுச் சென்ற நளனைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

சங்க காலத்தில் ஆடல், பாடல் முதலியவற்றாலே தம்மையடைந்தோரை பரத்தையர் மகிழ்வித்தனர். சிறிது காலம் செல்லவே ஆடல் பாடலுக்கன்றிச் சிற்றின்பத்திற்கெனப் பரத்தையிடம் மக்கள் சென்றனர். எனவே, பரத்தையொழுக்கம் நன்றாக நிலைத்து விட்ட பிற்காலத்திலேயே சிலப்பதிகாரம் எழுந்திருக்கிறதென்பதை நாம் மாதவி வரலாற்றால் அறியலாம். எனவே சங்க இலக்கியங்களின் கற்பனை, சொற்றொடர் முதலியவற்றையும் அவற்றுக்கு ஒவ்வாத சமயப் பான்மையையும் அளவு கடந்த வட சொற்களையும் வடநூல் கருத்துகளையும் வடநாட்டு நாகரிகத்தையும் கொண்டுள்ளது சிலப்பதிகாரமெனக் கொள்ளலாம்.

இவ்வாறு பல்வேறு அம்சங்களை திராவிடம் X ஆரியம் எனும் கருத்தியல் சார்ந்த பகைப்புலத்தில் சிலப்பதிகாரத்தைப் புரிந்துகொள்வதற்கான பின்புலங்களை நுட்பமாக வெளிப்படுத்துகின்றார். இத்தொகுப்பில் உள்ள ஏனைய கட்டுரைகளும் வெவ்வேறு பொருளுண்மை சார்ந்த விளக்கத்துக்கான ஆய்வுக்குறிப்புகளை இழையோடவிட்டுள்ளது.

**பேராசிரியரின் கல்விப்பணியையும் தமிழ் பணியையும் மீண்டும் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இவ்விரு நூல்களும் உருவாக்கியுள்ளன**

பல்லவர் காலத்து பக்தி இலக்கியம் /சுந்தரர் கவித்திறன் / திருவாசகர் கையாண்ட பிரபந்தங்கள் / நீத்தல் விண்ணப்பத்தில் உவமைச் சிறப்பு முதலானவை இணைத்து வாசிக்கத் தக்கவை. அதுபோல் மறைந்த தமிழ்க் காப்பியங்கள் / சோழர் காலப் பெருங்காப்பியங்கள்/ சோழர் காலக் காப்பிய வளர்ச்சி/பொருவில் அன்புருவம் / சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்/ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய முதலான கட்டுரைகளும் இணைத்து வாசிக்கத்தக்கவை. இது போல் நட மாடிய தமிழ்ப்பல்கலைக் கழகம் ஊ.வே.சாமிநாதையர்/ திரு.வி.க. வின் தமிழ்ப்பணி/கி.வா.ஜகந்நாதனின் எழுத்தும் பேச்சும் முதலானவை தனித்தும் மதங்கசூளாமணி/ ஓரிற்பிச்சை இணைத்தும் வாசிக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கவை. மொத்தத்தில் இந்தக் கட்டுரைகள் இலக்கிய வாசிப்பின் அரசியல் எனும் கோட்பாட்டின் பிரயோகத்திற்கு உள்ளாக்கும் பொழுது நமக்கு புதிய பார்வைகள் கிடைக்கும்.

அடுத்த நூலான ''யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ்'' நூலில் எட்டுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இலக்கிய வழக்கு/யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் முறைப்பெயர் வழக்கு / யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் தொழிற்பெயர் வழக்கு/ யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ் வழக்கில் ககரத்தின் மாற்றொலிகள்/ யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் சொல்லும் பொருளும்/ யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் போர்த்துக் கேயர் மொழியின் செல்வாக்கு /யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் ஒல்லாந்தர் மொழிச்சொற்கள் / தமிழில் எதிர்ச்சொற்கள் முதலான கட்டுரைகள் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் வழக்காறுகளையும் மொழி மாற்றங்களையும் இலக்கண விளக்கங்களை யும் புரிந்துகொள்வதற்கான ஆக்கங்களாக அமைந்துள்ளன. யாழ்ப் பாணப்பேச்சுத் தமிழ் பற்றி ஒரு மொழியியல் சார்ந்த ஆய்வு நோக்கு க்கு அடிப்படையான சிந்தனைகளை யும் தரவுகளையும் பேராசிரியர் தந்துள்ளார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு நாம் இன்னும் பல நிலைகளில் பல தளங்களில் ஆய்வுகளை விரிவாக்கிச் செல்ல முடியும்.

இந்த இரண்டு நூல்களின் தொகுப்பு முயற்சியில் முருகேசு கௌரிகாந்தனின் உழைப்பு பாராட்டக்கூடியது. இந்த நூல்கள் துறைசார்ந்த ஆய்வுப் புலங்களில் புதிய வெளிச்சம் பாய்ச்சும். இவற்றை உரிய முறையில் நாம் பயன்படுத்தி பேராசிரியர் தனஞ்சயராசசிங்கத்தின் புலமைத் துவத்தைப் புரிந்துகொள்வோம். ■

---



> சீன சமூகத்திற்குள் கருத்தியல் பிளவு இருக்கிறது என்பதற்கான எந்தவித அடையாளமுமே கிடையாது. சீன அறிவாளிகளுடன் பேசிப்பார்த்தால் இந்த உண்மை தெரியவரும். அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு அமெரிக்காவின் மேற்குலகையும் பின்பற்றவும் பாவனை செய்யவும் விரும்புகிறார்கள். அங்கே கருத்தியல் வெறுமை ஒன்று இருக்கிறது

*(41ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

போட்டியாக கன்பூசியஸ் பரிசை உருவாக்கி சீனா உலகத்தின் நகைப்புக்குரிய செயலைச் செய்தது கன்பூசியஸ். தத்துவத்திற்கு எதிராகத்தான் முன்பு அங்கு போராட்டங்கள் நடந்தன. இப்போது கன்பூசியஸ் சீனர்களுக்கு உவப்பானவராகி விட்டார். லூசுன் என்ற நவீன அறிவாளி ஏன் அவர்கள் கண்களில் படவில்லை. அங்கே கருத்தியல் வெறுமை ஒன்று இருக்கிறது. அந்த வெறுமையை, வெற்றிடத்தை சீனத் தேசியவாதம் நிரப்பப் போகின்றது என்கிறார் தாரிக் அலி. சீனத்தலைமைத்துவ மட்டத்தில் இரகசியமாக, தனிப்பட்ட உரையாடல்களில் கோமின்டாங் ஆட்சியையும் சியாங்கை சேக்கையும் போற்றிப் பேசும் போக்கு உள்ளது. ஆம் ஒரு கொலைப் பாதகனைப் புகழ்ந்து பாராட்டுகிறார்கள். ஏன்? சியாங்கை சேக்/கோமின்டாங் சீனத் தேசியவாதத்துடன் தொடர்புடையதாக இருப்பது தான் என்று தாரிக் அலி கூறுகிறார்.

அரபு உலகத்தில் பிளவு, ஈராக்கில் ஷியா முஸ்லிம்களுக்கும் சன்னி முஸ்லிம்களுக்குமிடையிலான மோதல், அங்கு நிகழ்ந்த இனச்சுத்திகரிப்பு அழிவுகள், எகிப்தின் இன்றைய பிரச்சினைகள் என்று பல்வேறு விடயங்களைப் பற்றியும் தாரிக் அலி தனது அபிப்பிராயத்தை வெளியிடுகின்றார். ஒரு புரட்சியாளரின் அதிருப்தி, கோபம், தார்மீக ஆவேசம் என்பன அவரின் ஒவ்வொரு வார்த்தையிலும் வெளிப்படுகின்றன. எகிப்தைப் பற்றி அவர் கூறியிருப்பதில் ஒரு பகுதி வருமாறு..

முபாரக்கும், மோர்சியும் எப்படி நடந்து கொண்டார்களோ அவ்வாறே இராணுவமும் நடந்துகொண்டால் என்ன செய்வது? யார் இராணுவத்தை ஆட்சியில் இருந்து அகற்றப் போகிறார்கள். ஒரு அரசியல் இயக்கம், ஒரு கட்சி அல்லது வேறு எந்த வடிவிலும் அமையக்கூடிய மாற்றுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்காமல் எதுவும் உருப்படியாக ஆகப் போவதில்லை. புரட்சிக்கான நிர்வாகக் குழு என்றோ அல்லது வேறு என்ன பெயரிலோ அந்தக் கட்டமைப்பை நீங்கள் பெயரிட்டுக் கொள்ளுங்கள் பரவாயில்லை. அப்படியொன்றை உருவாக்காதவரை முடிவு நல்லதாக இருக்கப்போவதில்லை.

உலக மட்டத்திலும் பிராந்தியக்கூட்டுகள் மூலம் செய்யப்படும் எதிர்பார்ப்புகளில் தாரிக் அலி நம்பிக்கை கொண்டுள்ளார். தென் அமெரிக்காவில் பொலிவியாவும் அதன் அயல் நாடுகளும் கூட்டாக அமெரிக்காவிற்கு எதிராக முன்னெடுக்கும் நடவடிக்கைகளை பொலிவாரிய மொடல் என்று உதாரணம் காட்டுகிறார். அதிருப்தியையும் கோபத்தையும் வெளியிடும் புரட்சிவாதியாக மட்டுமன்றி, நம்பிக்கையையும் எதிர்காலம் பற்றிய தொலைநோக்கையும் உடைய சிந்தனையாளராகவும் தாரிக் அலி தோற்றம் தருகிறார். ■

- சண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ரஃப் சிஹாப்தீனின்

# விரல்களற்றவனின் பிரார்த்தனை

..................

மது

தற்போது ஈழத்துச் தமிழ்ச் சூழலில் புதிய நூல்களின் வெளியீட்டுக்கு குறைவில்லை. பெரும்பாலும் வெளி வரும் நூல்கள் அந்தந்த இலக்கிய வகைமைக்கு வளம் சேர்க்கின்றதா? அல்லது அத்துறைசார் நூல் பட்டியல் எண்ணிக்கையை அதிகரிக்க உதவுகின்றதா? என்பது வேறு விடயம். ஆனால் வெளிவரும் நூல்களை நாம் மகிழ்வுடன் வரவேற்க வேண்டும்.

இந்த வகையில் வெளிவந்த நூல்களுள் குறிப்பிடத்தக்க படைப்பாக அஷ்ரஃப் சிஹாப்தீன் எழுதிய ''விரல்களற்ற வனின் பிரார்த்தனை'' எனும் சிறுகதை நூல் கவனிப்புக்கு ரியது. பொதுவாக சிஹாப்தீன் கவிஞராகத் தான் தமது சூழலில் அறியப்பட்டவர். அந்தக் கவிதை வாசிப்பு அனு பவ நிலையில் இருந்து இவரது சிறுகதையை வாசிக்கும் அனுபவம் வாசகர்களுக்கு புதிய அனுபவத் தருணங் களை நிச்சயம் உருவாக்கும்.

சிறுகதை எனும் வகைமை தமிழில் தோன்றி ஒரு நூற் றாண்டையும் கடந்து விட்டது. கடந்துபோய் விட்ட நூற் றாண்டில் எத்தனையோ படைப்பாளிகளின் முயற்சியால் ஆயிரக்கணக்கான சிறுகதைகள் பலநூறு தொகுப்புகளும் வந்துவிட்டன. ஆனால், இப்பெரும் பரப்பை திறனாய்வு உலகம் முழுமையாக ஆராய்ந்திருக்கிறதா? எனும் கேள்வி எழுகிறது. ஒரு சில போக்குகள் பற்றியும், புகழ் பெற்ற படைப்பாளிகள் குறித்தும் ஆய்வுலகம் ஓரளவிற்கு திறனாய்வு செய்திருக்கிறது. ஆங்காங்கு அபிப்பிராய குறிப்புகளையும் வெளிப்படுத்தியுள்ளது. இரசனைவழிக் குறிப்புகளும் வாய் மொழி ரீதியில் அதிகம் பகிரப்பட் டுள்ளன.

ஆயினும் தமிழ்ச் சிறுகதையின் பரப்போடு மேற்கண்ட திறனாய்வு முயற்சிகளை ஒப்பிடுகையில் நாம் செல்ல வேண்டிய தூரம் இன்னும் அதிகம் என்று தோன்றுகின்றது. இந்தப் பின்புலத்தின் இந்த நூல் மீதான அறிமுகப் பகிர்வு இங்கு பதிவாகிறது.

இத்தொகுப்பில் 16 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலும் இந்தக் கதைகள் 2005 க்கும் 2010க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை. இந்நூலுக்கு மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் 'கைகட்டி நிற்கும் கதை மொழி' எனும் தலைப்பில் முன்னுரையாக சில கருத் துகளைப் பகிர்ந்துள்ளார். குறிப்பாக சமகாலத் தமிழ் எழுத்துலகு - சிறுகதை - வாசகர் என்னும் ரீதியில் தனது சிந்தனைகளை, அனுபவங்களை, கேள்விகளை, படைப் பாக்க உந்துதல்களை நம்மோடு இணைத்து விடுகிறார்.

'அஷ்ரஃப் சிஹாப்தீனுடைய சிறுகதைகளை வாசிக்க முற்பட்ட போது அவை என்னை உள்ளீர்த்துக்கொண்டன. களைப்புக்கு பதில் ஒரு சுவாரஸ்யமான உற்சாகத்தை தரு கின்றதான உணர்வு எழுந்தது. அவருடைய கதைமொழி ஒரு சித்திரம் போல் நம்மை கவர்ந்துகொள்கிறது. சொற்க ளைத் தேடி அவர் ஓடாமல் அவரைத் தேடி சொற்கள் ஓடி வருகின்றன. அதனதன் இடத்தில் சக்கைக் கல் போல் அமர்ந்து கதையின் கட்டுமானத்தை மேல் எழுப்புகின்றன. மிகச் சாதாரணமான வழக்காற்று மொழிச் சொற்கள் கூட இவரது கதைகளுக்குள் உயிர்த்தெழுகின்றன. வார்த்தை களை கோர்த்துவிடும் வித்தை அருமையாக கை வந்த ஒருவராகவே இவரைக் காணுகின்றேன்'.

'மு.பொ.வின்' முடிந்துபோன தசையாடல் பற்றிய கதைத் தொகுதியை வாசித்த போது நான் வியப்படைந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனேன். கதை எழுதுவதென்பது 'கிள்ளுக்கீரை' விடயமல்ல. ஒரு கதை எழுத வருகின்றவனுக்கு என்னென்ன சங்கதிகள் தெரிந்திருக்க வேண்டும், எத்தனை உலகத்தை அவன் காணுகிறான் என்று.

அஷ்ரஃப் சிஹாப்தீனும் அதே வியப்பைத் தருகிறார். ஆனால் வேறு விதத்தில் ''எழுதுவதைவிட வாசிப்பதை தேடித்தேடி வாசிப்பதையும் முன்னிலைப்படுத்துகிறவர்கள் வியக்க வைக்கும் எழுத்தைத் தர வல்லவர்களே''.

இவ்வாறு தெளிவத்தை கூறும் கருத்து,மதிப்பீடு முக்கியம். வெவ்வேறு இரு தலைமுறை சார்ந்த படைப்புவெளியே நாம் கடந்து செல்வதற்கு இது வழிகாட்டுகிறது. அப்படி நாம் தொடர்ந்து மேலே செல்லும் போது அறாத் தொடர்ச்சியையும் கருத்துகளின் வெவ்வேறு சாத்தியப்பாடுகளுக்கான வெளிகளையும் புனைவுத் தன்மையையும் நமக்கு அடையாளம் காட்டுகின்றது. அது மட்டுமல்ல மு.பொ. வழிவரும் இலக்கிய உருவாக்கம் பற்றிய சிந்தனையும் மற்றும் சிஹாப்தீன் வழிவரும் இலக்கிய உருவாக்கம் பற்றிய புரிதலையும் தனித்தனியாக சந்திப்பதற்கான பயிற்சியையும் நமக்கு வலியுறுத்துகிறது. இந்த இரண்டு தலைமுறைகளையும் இணைத்துப் பார்க்கும் பொழுது வேறுபடும் தனித்துவப் புள்ளிகளையும் முதிர்ச்சிகளையும் தனித்து அடையாளப்படுத்துவதற்கான அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

''ஒரு இலக்கியப் படைப்பு சிறந்து விளங்க வேண்டுமானால் அதில் இடம்பெறும் மாந்தர்களும், அம்மாந்தர்களின் பின்புலத்தில் உள்ள சகல இயக்கங்களும், உரிய பொருட்களும் மிக நுணுக்கமாகச் சித்தரிக்கப்பட வேண்டும். இதற்கு மிகவும் உறுதுணையாக அமைவது அவ்விலக்கியத்தை படைக்கும் படைப்பாளியின் அறிவாகும். இலக்கியத்தில் இடம்பெறும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றிய இனவரைவியல் செய்திகள் அவ்விலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் பொருத்தமான பின்புலத்தை உருவாக்க உதவுகின்றன'' என ஆ.சிவசுப்பிரமணியன் கூறுவதை நாம் இங்கு கவனத்தில் கொள்வது முக்கியம். இந்தப் பார்வை ஆரோக்கியமான இலக்கியத் திறனாய்வுச் சிந்தனைக்கான அணுகுமுறையையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. இவரது கூற்றின் அடிப்படையில் இலக்கியப் படைப்பாளிக்கு இனவரைவியல் அறிவு அவரது படைப்பிலக்கியத்தை செழுமைப்படுத்த உறுதுணையாக அமையும்.

ஆனால், இனவரைவியல் பயிற்சி எடுத்துவிட்டு வந்து எழுத்தாளர் இலக்கியம் படைப்பதில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால், இது பற்றிய தேடல் வாசிப்பு மற்றும் பிரயோக நிலைப்பட்ட அணுகுமுறை யாவும் நிச்சயம் படைப்பாளிக்கு வேண்டும். இந்த அம்சங்களையும் உள்வாங்கி நாம் சிஹாப்தீனின் படைப்பை வாசிப்புச்செய்ய வேண்டும். அப்பொழுது தான் படைப்பின் சிறப்புகளையும் பலவீனங்களையும் நாம் புரிந்துகொள்ள முடியும். மீள் வாசிப்பிற்கும் மீள் சிந்தனைக்குமான தருணங்களை உருவாக்குவதில் ஈடுபட வேண்டும். இதனால் படைப்பாளியின் இயங்குதளமும் படைப்பு வெளியும் எவ்வாறு பொருந்தி வருகிறதென்பதும் முரண்பட்டு விலகி நிற்பதும் இங்கு தெளிவாகும். இதனால் பொருத்தமான கதைசொல்லல் எடுத்துரைப்பு படைப்பாளியிடம் யதார்த்தமாக உருவாகி வருவதையும் இனம் காணலாம். இதுவே படைப்பின் பலமாகவும் வெளிப்படும்.

''ஒரு சிறுகதையை நான் எப்படிச் சொல்ல விரும்பினேனோ அப்படித் தான் சொல்லி இருக்கிறேன். இது தான் எனக்கு வாலாயமான முறையாக அமைந்திருக்கிறது. நான் எழுத நினைத்த கதை எனக்குள் இருந்த வார்த்தைகளை எடுத்துக்கொண்டு இப்படித்தான் வெளிவந்திருக்கிறது. இக்கதைகளைப்பற்றி என்னால் சொல்ல முடிந்தது அவ்வளவு தான்''.

''மொழிபெயர்ப்பிலும் நான் ஈடுபட்டு வருவதால் வேறு தரிசனங்களும் எனக்கு கிடைக்கின்றன. நமது தமிழ்ச் சூழலில் படிக்கக் கிடைக்காத கதைப்பின்னலையும் கதைசொல்லும் அழகையும் கதைகளுக்கான உத்திகளையும் புதிதாக வெளிவரும் வேற்று மொழி சிறுகதைகளையும் என்னால் காணமுடிகிறது. நமக்குப் பரிட்சயப்பட்டுப்போன தமிழ்ச் சூழல் கதைகளில் இருந்து சற்று விடுபட்டு கைகளுக்குள் சுருங்கிப் போன - உலகமே ஒரு பூகோள கிராமம் என்கிற நிலையில் இருந்தும் நமது பார்வையை செலுத்துவது அவசியம் என்று நான் நினைக்கிறேன். உலகத்தின் ஒவ்வொரு பிரஜையினதும் வாழ்க்கை சர்வதேச அரசியலோடும் பின்னிப் பிணைந்திருக்கிறது என்ற உண்மையையும் நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது''.

இப்படி எழுத்தாளர் சிஹாப்தீன் கூறுவதை நாம் கவனத்தில் கொண்டால், எழுத்தாளர் நோக்கு முறை, படைப்பாக்கக் கருத்தியல் முதலானவை பற்றிய தெளிந்த பார்வையும் விளக்கமும் நமக்குக் கிடைக்கும். இந்தப் பின்னணியில் வைத்து இந்தக் கதைகளை நாம் பரிசீலிக்க வேண்டும். அப்போது படைப்பாக்க ஆளுமையை நாம் மதிப்பிட முடியும். இதற்கு திறனாய்வு வெளியை நோக்கி நாம் பயணப்பட வேண்டும். நாம் சரியான கோட்பாடுகளை பிரயோகித்து படைப்பாக்கத்தின் பன்முகச் சிறப்புகளை நுண்ணாய்வு ரீதியில் கண்டுகொள்ள முயற்சி செய்வது பொருத்தமாக இருக்கும். படைப்பாளிக்கு கோட்பாடுகள் மீது அக்கறையில்லாமல் இருக்கலாம். அது அவரு க்கான தெரிவு. ஆனால் திறனாய்வாளருக்கும் வாசகர்களுக்கும் அந்தத் தெரிவோடு உடன்பட வேண்டும் என்ற நியதி இல்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(66ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

இந்த நாட்டு முஸ்லிம் தலைமைகள் அரபு நாடுகளை வளைத்துப் போட்டு அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்கச்செய்த பெரும் முயற்சியினை மறந்தமை போன்ற காரணிகள் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் முடிவை எட்டுவதில் கட்சி உறுப்பினர்களிடையே ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

மறுபுறத்தில் முஸ்லிம் காங்கிரஸின் தனித்துப் போட்டியிடும் முடிவு தொடர்பில் அரசாங்கக் கட்சிக்குள் பல்வேறு கருதுகோள்கள் உருவாகியுள்ளன. அமைச்சர் பசீர் சேகுதாவுத் முஸ்லிம் காங்கிரஸின் முடிவுகளைத் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பார் என்ற அரசாங்கத்தின் நம்பிக்கையும் வெளியுலக மாயையும் தகர்க்கப்பட்டிருக்கின்றமை, பங்காளிக்கட்சி என்ற வகையில் முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைகளைக் கண்டுகொள்ளாத அரசாங்கத்தின் அணுகுமுறையை எதிர்ப்போர் முஸ்லிம் காங்கிரஸில் ஊட்டம் பெற்றிருப்பது ஆகியவை இவற்றுள் முக்கியமானவை.

இக்கட்சியின் தனித்துப் போட்டியிடும் முடிவானது வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களைப் பொறுத்தவரையில் பாரிய பின்னடைவை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தமாட்டாது. ஏனெனில், அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகளில் அதிருப்தி கொண்டுள்ள பெரும்பாலான முஸ்லிம்களின் வாக்குகள் ஐ.தே.க.வை சென்றடையும் அபாயத்தை மறித்து அந்த வாக்குகளை முஸ்லிம் காங்கிரஸ் பெற வாய்ப்புள்ளது. இதன்மூலம் காங்கிரஸும் அரசாங்கமும் நட்டத்திலும் இலாபம் பெறும் சாத்தியமுண்டு. ஆனால், வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் நிலைமை வேறு. மன்னார் மாவட்டத்தைக் குறிவைத்தும் உச்ச எண்ணிக்கையிலான உறுப்பினர்களைப் பெறுவதன் மூலமும் தமிழ்க் கூட்டமைப்புக்கு சவாலாக விளங்க முடியும் என்ற அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு வீச்செல்லையை முஸ்லிம் காங்கிரஸ் தனித்துக் கேட்கும் முடிவு உள்நோக்கித் தள்ளியிருப்பதனால் அக்கட்சியின்மீது அரசாங்கம் கடுப்பில் இருப்பதாகத் தெரிகின்றது.

இவ்வாறு தனித்துப் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் முடிவு காரணமாக சிலர் பல்வேறு ஊகங்களையும் முன்வைக்கின்றனர். தேர்தல் முடிந்த கையோடு அரசாங்கம் முஸ்லிம் காங்கிரஸை வெளியேற்றிவிடும் என்றும் கட்சியிலிருந்து பசீர் சேகுதாவுத் நீக்கப்படுவார் என்றும் மாகாணசபைகள் கூடும்போது முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தோடு சேராமல் ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து பணியாற்றும் என்றெல்லாம் அவை பட்டியலிடப்படுகின்றன. கருத்தியல்வாத அடிப்படையில் அல்லாமல் சூழ்நிலை அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சியின் தீர்மானங்கள் எவ்வாறு அமையும் என்று எதிர்பார்ப்பது கஷ்டமான விடயமல்ல. கட்சியிலிருந்து பசீர் சேகுதாவுத் நீக்கப்படாதிருத்தல் என்ற நிபந்தனையின்பேரில் அரசாங்கம் முஸ்லிம் காங்கிரஸை வெளியேற்றுதல் என்ற செயற்பாடு கிடப்பில் போடப்பட்டுவிடும் என்று ஊகிப்பதும் கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலின்போது முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்ட விதத்தை வைத்து இம்முறை எவ்வாறு நடந்துகொள்ளும் என்று ஊகிப்பதும் அரசியல் களத்தில் இயங்குபவர்களுக்கு இலகுவான ஒரு விடயமாகும். ■

---

*(51ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

இருந்த டி.என்.சேஷன், கபினட் செகரட்டரியாக இருந்த ஜபர் சாயு புல்லா ஆகியோரின் கடிதங்கள், குறிப்புகள் எல்லாம் அந்த அத்தியாயத்தில் இருக்கும். இந்த சேப்டர்தான் மெட்ராஸ் கபேயின் படக் கரு என்றே நினைக்கிறேன்'' என்றார் வித்தியாசமாக.

இப்படி கதை விளக்கம் சொல்லும் அந்த 'மெட்ராஸ் கபே'யின் படத்தில் உள்ள க்ளைமாக்ஸ் காட்சி ஒன்றுதான் தமிழர் அமைப்புகளின் எதிர்ப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. அது என்ன? படத்தின் இறுதியில் முன்னாள் பிரதமர் கொல்லப்பட்டு விடுவார். அப்போது கேபினெட் செகரட்டரியாக இருப்பவர் தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டு மனச்சஞ்சலத்துடன் வீடு திரும்புவார். சோகத்தில் இருக்கும் அவரைப் பார்த்து அவர் மனைவி, 'நல்ல மனுஷனை அநியாயமாகக் கொண்ணுட்டாங்களே' என்ற தொனியில் டயலொக் பேசுவார். 'நல்லமனுஷனைக் கொண்ணுட்டாங்களே' என்று ஒரு பெண் பேசுவது போல் வைக்கப்பட்டுள்ள அந்த டயலொக் தமிழகத்தின் தாய்மார்களின் நெஞ்சங்களில் காங்கிரஸுக்கு ஒரு அனுதாபம் தேடவே என்று தமிழர் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. ஈழத் தமிழர்களை காங்கிரஸ் கட்சி அலட்சியம் செய்கிறது என்ற குற்றச்சாட்டு பகிரங்கமாக முன்வைக்கப்படுகிறது. 'ஈழத்தமிழர்கள் கொல்லப்பட்டதில் காங்கிரஸ் கட்சிக்கு முக்கிய பங்கு உண்டு' என்ற பிரசாரம் பட்டிதொட்டிகளிலெல்லாம் பிரகடனப்படுத்தப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் ஏறக்குறைய காங்கிரஸ் கட்சி தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு எந்தக் கட்சியும் காங்கிரஸுடன் கூட்டணி வைக்க முன்வராமல் தயங்கி நிற்கின்றன என்றால் 'ஈழத்தமிழருக்கு எதிரான இலங்கை அரசின் போரும், அதில் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு எடுக்கத் தவறிய நடவடிக்கையும்' தான் காரணம் என்ற பிரசாரம் தமிழகத்தில் மேலோங்கி நிற்பதே காரணம். இந்த நேரத்தில், அதுவும் பாராளுமன்றத் தேர்தல் வருகின்ற நேரத்தில், காங்கிரஸின் இமேஜை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்ட படமே 'மெட்ராஸ் கபே' என்று தமிழர் அமைப்புகள் கோபப்படுகின்றன. இந்தக் கோபமே 130 நிமிடங்கள் ஓடும் தமிழ் 'டப்பிங்' படமான மெட்ராஸ் கபே தமிழகத்தில் இந்த இதழ் அச்சுக்குப் போகும் வரை 'ரிலீஸ்' ஆகாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணம்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

1988ஆம் ஆண்டு நடைபெற்ற இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபைத்தேர்தலுக்குப் பின்னர் தனித்த வடக்கு மாகாணத்துக்கான தேர்தல் எதிர்வரும் மாதம் இருபத்தியோராம் திகதி நடைபெறவிருக்கிறது. அதேதினத்தில் வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் தேர்தல்கள் இடம்பெறுகின்றன. சர்வதேசரீதியாக அனைவரினதும் கவனம் வடமாகாணசபைத் தேர்தலை நோக்கியுள்ள நிலையில் அரசாங்கத்தின் பங்காளியாக இருந்துகொண்டே இந்த மூன்று மாகாணசபைத் தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது.



ஏ. பீர் முகம்மது

தேர்தலில் கலந்து கொள்ளும் அனுபவத்தை இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாகக் கொண்டிருக்கும் இக்கட்சி, அண்மைக்காலமாக புதியதொரு பொறிமுறையைக் கையாண்டு தேர்தல்களில் போட்டியிட்டு வருகின்றது. கடந்த கிழக்கு மாகாண

# அள்ளவும் முடியாமல் தள்ளவும் முடியாமல்...

சபைத்தேர்தலில் இக்கட்சித்தலைவர் அஷ்ரஃபின் படத்துக்கு வெள்ளைத் தலைப்பாகை அணிவித்து அரசாங்கத்திற்கு எதிரான பின்னணியில் முஸ்லிம் முதலமைச்சர் என்று பிரசாரம் செய்ததன்மூலம் முழுவெற்றி பெற்றது. எனினும், சபை உருவாக்கலின்போது மாகாண முதலமைச்சர் பதவியை அரசாங்கத்துக்குத் தாரைவார்த்துவிட்டு அமைச்சர் பதவிகளுக்குள் தன்னை முடக்கிக் கொண்டது. தேர்தல் காலத்தில் ''விலை போகக்கூடிய தெரிவு'' எது என்பதை அறியும் நுட்பங்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கின்றது. தற்போது நடைபெறும் மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் ''நல்ல விற்பனையை எதிர்பார்த்து'' அரசாங்கத்தை எதிர்த்துக் களம் இறங்கியுள்ளது.

அமைச்சர் பதவியோடு பங்காளிக் கட்சி என்ற கூட்டுக்குள் நின்றுகொண்டு கால சூழ்நிலைக்கேற்ப தனது அரசியல் முகத்தை வெளியே காட்டிக் கொள்ளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதற்கான தீர்மானத்தை எட்டுவதிலும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியது.

அரசாங்கத்தில் அமைச்சர் பதவியை வகித்துக் கொண்டே தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதும் எதிராகப் பிரசாரம் செய்வதும் அரசியல் தர்மத்துக்கு எதிரானது என்ற நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் அமைச்சருமான பசீர் சேகுதாவுத் பலமாகவும் தொடர்ச்சியாகவும் கட்சிக்குள் வலியுறுத்தி வந்தார். தனித்துப் போட்டியிடுவதென்று கட்சி முடிவெடுத்த போது தனது ஆதரவாளர்கள் சிலரை வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட வைத்துள்ளார். கட்சியைப் பொறுத்தவரையில் இவர் தொண்டைக்குள் சிக்கிய முள்ளாக அடையாளம் காணப்பட்டு வருகின்றார். அமைச்சராக இருந்து கொண்டு கட்சியினதும் தலைமைத்துவத்தினதும் தீர்மானங்களை விமர்சிக்கும் அவலம் இந்தக் கட்சிக்குள்தான் இருக்கின்றது என்று கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பகிரங்கமாகவே தலைவர் ரவூப் ஹக்கீம் இவரைக் குறி வைத்துப் பேசியுள்ளார்.

முஸ்லிம்கள் தொடர்பான நடவடிக்கைகளில் அரசாங்கத்தின்மீது அடிக்கடி அதிருப்தி வெளியிட்டுவரும் கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன்அலி தனித்தே போட்டியிட வேண்டுமென ஒற்றைக் காலில்நின்று உயர்மட்டத் தீர்மானத்தின்மூலம் தனது கோரிக்கையை கட்சிக்குள் வென்றெடுத்தார்.

பள்ளிவாசல்கள் பல தாக்கப்பட்டிருந்தும் (இதனை எழுதும்வரை 25 பள்ளிவாசல்கள்) எந்தவொரு சட்ட நடவடிக்கையும் அரசாங்கத்தினால் எடுக்கப்படாமை - முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களுக்கெதிரான தாக்குதல், ஹலால் விடயம், பெண்களின் கலாசார உடையில் தலையீடு போன்ற பொதுபலசேனாவின் நடவடிக்கைகளை அரசாங்கம் கண்டும் காணாமலிருப்பது - ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் குற்றப்பிரேரணை வந்தபோது

*(65ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி

இ-பேப்பர்

இப்பொழுது

புதுப்பொலிவுடன்..!




VIRAKESARI
வீரகேசரி

epaper.virakesari.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org